1 ஆகஸ்டு 1994 □ ரூ. 3.00
www.padippakam.com

உள்நாட்டு நிர்வாகத்தில் ராணுவத் தலையீடு

# புதிய ஜனநாயகம்

## 69 சதவிகித இட ஒதுக்கீடு: கருவாடு காத்த பூனை ஜெயா!




படிப்பகம்

# விடுதியின் அவலம் மாணவர்கள் குமுறல்

கோவை அரசுக் கலைக்கல்லூரியின் விடுதியில் ஊழலும், முறைகேடுகளும், அடிப்படை வசதியின்மையும் அதிகரித்து வருகின்றன. இவ்விடுதியில் நீலகிரி, சேலம், வால்பாறை முதலான பகுதியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களே தங்கிப் படித்து வருகின்றனர். கடந்த ஆண்டு ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனுக்கு 1000 ரூபாயும் பிற்படுத்தப்பட்ட மாணவனுக்கு 1300 ரூபாயும் விடுதிக் கட்டணமாக வசூலித்தார்கள். இதற்கு 650 ரூபாய்க்குத்தான் ரசீது கொடுத்தார்கள். கூடுதலான தொகைப் பற்றி எந்த காரணமும் கூறுவதில்லை. இந்த ஆண்டில் இத்தொகை தாழ்த்தப்பட்டவருக்கு 1750 ரூபாயாகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு 2100 ரூபாயாகவும் உயர்த்தியுள்ளனர். இத்தகைய கொள்ளை போதாது என்று உணவு பொருள் வாங்குவதிலும் கொள்ளையடித்துள்ளனர். ஆர்.எஸ்.புரத்தில் உள்ள சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில் பொருட்கள் வாங்கியதில் கடந்த ஆண்டுக் கணக்கில் 60,000 ரூபாய் பற்றாக்குறை - கடன் இருப்பதாக விடுதி நிர்வாகத்தினர் கூறுகின்றனர். கடன் பற்றி விடுதியின் மாணவப் பொதுச் செயலாளரிடம் தெரியப்படுத்தாதோடு வரவு - செலவு கணக்கும் காட்டப்படவில்லை




விடுதியில் வேலை செய்யும் ஊழியர்களின் மாதச் சம்பளத்தையும் மாணவர்களின் மாதாமாதம் செலுத்தும் உணவுக் கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கிறார்கள். இந்நிலையில் எந்த வழியிலும் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பே இல்லை. 60,000 ரூபாயுடன் இன்னும் கூடுதலான தொகையை சுருட்டியிருக்கவே வாய்ப்புள்ளது. ஏற்கனவே கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் சிந்தாமணியின் மேலாளர் சேர்ந்து அடிக்கும் கொள்ளை அம்பலமாகி ஒரு பேராசிரியர் மீதும் முதல்வர் மீதும் உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்றும் உள்ளது. இந்த 'பற்றாக்குறை' 60,000 ரூபாயை நடப்பாண்டு புதிய மாணவர்களிடம் வசூலித்ததாலேயே விடுதி சேர்க்கைக்குரிய கட்டணம் வெகுவாக அதிகரித்துள்ளது. . போதாதற்கு உணவுக்குரிய கட்டணத் தொகையை நிர்ணயித்து முன்கூட்டியே கட்டினால்தான் தங்கும் அறை ஒதுக்கப்படும் என்றுவேறு நிர்பந்திக்கின்றனர். விடுமுறை நாட்கள், மாணவன் ஊருக்குச் செல்லும் நாட்களை உணவுக் கட்டணத்தில் கழித்துக் கொள்ளாமலும் கொள்ளையடிக்கின்றனர். இது வல்லாமல் - பழைய விண்ணப்ப படிவத்தை திருத்திக் கொடுத்துவிட்டு வருடந்தோறும் புதிதாக விலைக்கூட்டி கொள்ளையடிப்பதும் விடுதி செய்தித்தாளை பழைய கடையில் போடுவதைக் கணக்கு காட்டாமல் அற்பத்தனமாக சுருட்டுவதும் நடக்கிறது.

தண்ணீர், மின்சாரம், இதரவற்றிற்கு என தனித்தனியாக ரசீதில் குறிப்பிட்டு கட்டணம் வசூலித்திருந்தாலும் அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. குளியலறை, கழிவறை பராமரிப்பின்றி பயன்படுத்தவே முடியாத நிலையில் உள்ளன. குடிநீருக்கென்று தனி இணைப்பும் கிடையாது. இருக்கும் ஒரே தொட்டியில் குடிக்கவும் முந்திக் கொள்ள வேண்டும். விடுதி கணக்கர் குளிக்கவும் துவைக்கவும் இந்நீரை ஆக்கிரமித்துக் கொண்டு அடிக்கும் கொட்டமும் அதிகம். (இவர் மேல்சாதிக்காரர் என்பதால் மாணவர்களின் சாதியைச் சொல்லி இழிவாகப் பேசுவதும் வாடிக்கை) விடுதிக்குச் சொந்தமாக இருக்கும் தண்ணீர் தேக்கு தொட்டியில் குளித்தால் அருகில் உள்ள போலீசார், ஜட்டியுடன் ஊர்வலம் போக வைத்திடுவதாக மிரட்டித் தடுக்கின்றனர். விடுதி மாணவர்கள், சுற்றியுள்ள மேட்டுக்குடி மக்களுக்கு இடைஞ்சலாக இருப்பதாகப் பொய்கூறி பாதுகாப்புக்கென 'லயன்ஸ் கிளப்'பால் ஏற்பாடு செய்து, மாணவர்களை இழிவுபடுத்தி திறக்கப்பட்ட சிறப்பு காவல் நிலையம் இது.

இத்தகைய அவலங்களுக்கு கொடுமைகளுக்கு எதிராக குமுறிக் கொண்டிருக்கும் மாணவர்கள் சரியான தலைமையைத் தேர்ந்தெடுத்து மாணவர் போராட்டதைக் கட்டி பிரச்சினை தீரும்வரை உறுதியுடன் நிற்க வேண்டும். அனைத்து அரசு மாணவர்கள் விடுதிகளின் பொதுப் பிரச்சினையாக இவை இருப்பதால் ஒருமித்த சக்தியாகவும் திரண்டு போராட முயல வேண்டும்.

## "தையல் தொழிலாளர்கள் சங்கமாகி போராட வேண்டும்"

கேரளாவில் 18 முதல் 60 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் குறைந்தது மூன்றாண்டுகளுக்கும் மேலாக தையல் தொழில் செய்பவர்களாகவும் இருந்தால் அரசிடம் பதிவு செய்யலாம். அவர்களுக்கு குடியிருக்க வீடு, ஓய்வூதியம், சேமநலநிதி, அடையாள அட்டை, இறந்தால் குடும்ப உதவி, திருமண உதவி, மருத்துவ உதவி போன்றவை அரசால் வழங்கப்படுகின்றன. மாதம் ரூபாய் 10 வீதம் செலுத்தி இவ்வாறு 3 லட்சம் பேர் பயனடைகின்றனர். கேரளாவில் உள்ளதுபோல தமிழகத்திலும் வழங்கக்கோரி மதுரையைச் சேர்ந்த தையல் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து வருகிறார்கள்.

தையல் தொழிலாளர் சங்கம் அமைத்திடுவதற்கான முதல் அறைக்கூட்டம் மதுரை சோலை அழகுபுரத்தில் 19-6-94 அன்று நடத்தப்பட்டது தையல் தொழிலாளி கே.பூமிநாதன் அவர்கள் பாரத ரத்னா மக்கள் முன்னேற்றக் கழக உதவியுடன் தொழிலாளர்கள் ஒருங்கிணைப்பு வேலைகளை செய்து வருகிறார் இக்கூட்டத்திற்கு பெண்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். பாரத ரத்னா மக்கள் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த பாச்சாமியான், கருப்பசாமி, ஏ.எஸ். முருகேசன் ஆகியோரும் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணித் தோழர் ரவீந்தரனும் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்கள் சங்கமாக வேண்டியதன் அவசியத்தையும் போராட்டத்தை போர்க்குணத்துடன் எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் புதிய பொருளாதாரக் கொள்கையால் தையற் தொழிலாளர்களுக்குள்ள பாதிப்பை விளக்கியும் பேச்சாளர்கள் பேசினர்.

மதுரையில் தையல் தொழிற்சங்கம் கட்டுகிற முயற்சியுடன் சென்னை போன்ற பிற மாவட்டங்களில் ஏற்கனவே உள்ள தையல் தொழிலாளர் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு கோரிக்கைகளை வைத்துப் பேசி ஐக்கியமாகி போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

17

16-31 ஜூலை '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: சுரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# காங்கிரசு - கிரிமினல் கள்ளக்கூட்டு

பம்பாய் குண்டு வெடிப்பு விசாரணை, குண்டு வெடிப்புக்கு முக்கிய காரணமான இரகசிய உலக கிரிமினல் பேர்வழி தாவூத் இப்ராஹிமின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய மத்திய புலனாய்வுத் துறை மேற்கொண்டுள்ள முயற்சி ஆகியவற்றின் மூலமும், பம்பாய் துணை முனிசிபல் கமிஷனரான கெய்ரனார் அம்பலப்படுத்திவரும் ஊழல்களாலும், மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார் கடைந்தெடுத்த ஊழல் பேர்வழி, தாவூத்தின் நெருங்கிய கூட்டாளி என்ற உண்மைகள் அவரது கட்சிக்காரர்களாலேயே இப்போது வெளிவந்துள்ளன.

குண்டு வெடிப்பைத் தொடர்ந்து பம்பாயின் சட்ட விரோத நில ஆக்கிரமிப்பு - விதிமுறைகளை மீறிய கட்டிடங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் துணை முனிசிபல் கமிஷனரான கெய்ரனார், ''தாவூத்தின் கூட்டாளிகள் பினாமி பெயரில், விதிமுறைகளை மீறி 1000-க்கும் மேற்பட்ட அடுக்கு மாடிக் கட்டிடங்களை எழுப்பியுள்ளனர். இதற்கு முதல்வர் பவார் சட்ட விரோதமாக அனுமதித்துள்ளார்'' என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டி வருகிறார். ஆத்திரமடைந்த பவார், அரசு ஊழியர் நடத்தை விதிகளைக் காட்டி அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்து மிரட்டினார். ஆனால் கெய்ரனார், தாவூத்தின் கூட்டாளியான பாய்தாக்கூர் சி.பி.ஐ.க்கு கொடுத்த வாக்குமூல நகல்களை வெளியிட்டு, பவாருக்கும் இரகசிய உலகப் பேர்வழிகளுக்குமுள்ள கள்ள உறவை அம்பலப்படுத்தினார். ''முதல்வர் பதவியைக் கைப்பற்றி தக்கவைத்துக் கொள்வதற்காகவே, சரத்பவார் பம்பாயில் கலவரங்களைத் தூண்டிவிட்டு ஆதாயமடைந்தார். குண்டர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப அரசு செலவில் விமானத்தைப் பயன்படுத்தினார்'' என்று பவ்ார் மீது அடுக்கடுக்காக குற்றம் சாட்டும் கெய்ரனாரை பத்திரிகைகளும் நடுத்தர வர்க்கத்தினரும் ஊழல் எதிர்ப்பு போராளி என்று பாராட்டுகின்றனர். ''தான் எந்தக் கட்சியையும் சார்ந்தவனல்ல'' என்று அவர் கூறினாலும், பாரதீய ஜனதா, சிவ சேனா மற்றும் காங்கிரசிலேயே உள்ள பவார் எதிர்ப்பாளர்களின் பின்பலத்தோடுதான் அவர் ஊழல் எதிர்ப்பு இயக்கத்தை நடத்துகிறார்.

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, பாரதீய ஜனதாவும் சிவசேனாவும் கெய்ரனாரை முன்னிறுத்தி அரசியல் ஆதாயம் தேடமுயற்சிக்கின்றன. மறுபுறம், காங்கிரசிலேயே பவார் எதிர்ப்புக் கோஷ்டித் தலைவர்களான உள்துறை அமைச்சர் சவான், பத்திரிகை தொடர்பாளர் காட்கில் ஆகியோர் இவ்வாண்டு இறுதியில் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலைக் குறிவைத்து காய்களை நகர்த்துகின்றனர். ''பவாருக்கும் தாவூத் கும்பலுக்கும் கள்ள உறவு நீடிப்பது மட்டுமல்ல, விடுதலைப் புலிகளுடனும் பவாருக்குத் தொடர்பு உள்ளது. ராஜீவ் கொல்லப்படுவதற்கு ஒரு வாரம் முன்னதாக ப்வார், புலிகளைச் சந்தித்துள்ளார்'' என்று குற்றம் சாட்டும் இக்கோஷ்டி, விசாரணை நடத்துமாறு பிரதமரிடமே முறையிட்டுள்ளனர். அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளில் சிக்கி அம்பலமாகிவரும் மகாராஷ்டிர முதல்வர் சரத்பவார், இரகசிய உலகக் கிரிமினல்களின் கூட்டாளி மட்டுமல்ல; ரியல் எஸ்டேட் ஊழல் - அதிகார முறைகேடுகளால் கோடிகோடியாய் கொள்ளையடித்தவர். பம்பாய் தரகுப் பெருமுதலாளிகள், சர்க்கரை ஆலை அதிபர்களை தம் பின்னே திரட்டிக் கொண்டும், இந்துவெறி சிவசேனாவுடன் கள்ள உறவு வைத்துக் கொண்டும் ஆட்சி நடத்தும் 'கை' தேர்ந்த அரசியல்வாதி.

பம்பாய் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து, சிவசேனா - பாரதீய ஜனதா நிர்பந்தம் காரணமாகவும், காங்கிரசின் சுயநலன்கள் காரணமாகவும் தாவூத் கும்பலின் உள்ளூர் அடியாட்கள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. தாவூத் கும்பலைச் சேர்ந்தவர்கள் என கருதப்படும் அனைவரும் போலீசாரால் இரகசியமாகவே தீர்த்துக் கட்டப்படுகின்றனர். தாவூத் கும்பலுடன் தனக்கிருந்த தொடர்புகள் தெரியக் கூடாது என்பதற்காகவே முதல்வர் பவார் போலீசாருக்கு இப்படி இரகசிய உத்திரவிட்டுள்ளார். இதனாலேயே, குண்டு வெடிப்பு பற்றி சி.பி.ஐ. விசாரணைக்கு அவர் மறுக்கிறார். மறுபுறம், நடிகர் சஞ்சய்தத் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோரை ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்து, தாவூத் கும்பலுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதாக பரபரப்பூட்டுகிறார்.

தாவூத் கும்பல் தற்காலிகமாகப் பின்வாங்கியுள்ள நிலையில், பம்பாய் இரகசிய உலகின் அதிகாரத்தைக் கைப்பற்ற, காங்கிரசு ஆதரவு பெற்ற அருண்கௌலி கும்பலும், சிவசேனாவின் வளர்ப்புப் பிராணி அமர்நாயக் கும்பலும் பம்பாய் தெருக்களில் துப்பாக்கியுடன் பகிரங்க சண்டைகள் நடத்துகின்றன.

பவாருக்கு எதிராக புழுதி கிளப்பும் எதிர்த்தரப்பினரின் நோக்கம், பவாரையும் கிரிமினல் மாஃபியாக்களையும் வீழத்துவதல்ல; பவார் கும்பலை உருட்டி மிரட்டி தமது கட்டுப்பாட்டின் கீழ் வைப்பதற்காகவே அவர்கள் பெருங்கூச்சல் போடுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் பிரதமர் நரசிம்மராவும், ரகசிய உலக கிரிமினல் சாமியாரான சந்திராசாமியின் கூட்டாளிதான்! இவையனைத்தும், கடைந்தெடுத்த கிரிமினல் சதிகார கும்பல்கள்தான் பதவியில் உள்ளன என்ற உண்மையையும், எவ்வளவு ஆபத்தான மக்கள் விரோத சக்திகளிடம் நாடு சிக்கிக் கொண்டுள்ளது என்பதையும் எச்சரிக்கையாக உணர்த்துகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

## 69% இட ஒதுக்கீடு பிரச்சினை:

# யாருக்கு லாபம்?

**பார்ப்பனரை எதிரியாகக் காட்டி பிற கீழ்சாதியினரையும் திரட்டிக் கொண்டு போராடி ஆதாயம் தேடுவதே திராவிடக் கட்சிகளின் - மேல்சாதியினரின் வரலாறாக உள்ளது.**

இலவச - கவர்ச்சித் திட்டங்கள், 'கொள்கை' முழக்கங்கள், மக்கள் நலன் தொடர்பான சட்டங்கள், சலுகை - உரிமைகளுக்கான போராட்டங்கள் முதலான கண்துடைப்பு - அடையாள நடவடிக்கைகளில் கருணாநிதியை எம்.ஜி.ஆர். விஞ்சி நின்றார் என்றால், எம்.ஜி.ஆரை ஜெயலலிதா விஞ்சி நிற்கிறார். காவிரி நீர்ப் பிரச்சினைக்காக உண்ணா விரதம் என்ன, கச்சத்தீவை மீட்க முழக்கமென்ன, தமிழக மீனவர்கள் - பம்பாய் தமிழர்கள் மீதான தாக்குதலுக்கு எதிரான சவாலென்ன, அரசு தொட்டில் திட்டமென்ன, பெண் போலீஸ் நிலையமென்ன, 69% இடஒதுக்கீட்டுக்காக மசோதா, அரசு வேலை நிறுத்தங்கள் என்ன? - நன்றாகவே காய் நகர்த்துகிறார் ஜெயலலிதா! திராவிடக் கட்சிகளின் பரிணாம வளர்ச்சியல்லவா?!

தமிழகத்தில் 1927-ல் சுப்புராயன் ஆட்சிக் காலத்தில்தான் பார்ப்பனர் அல்லாதவர் என்ற பொது வரையறையின் கீழ் இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. பின்னர் 1947-ல் ஓமந்தூரார் (காங்.) ஆட்சி காலத்தில் முற்பட்டவர், பிற்பட்டவர் என்ற பிரிவு ஏற்படுத்தப்பட்டு பிற்பட்டவர்களுக்கு 14% இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. இதை 1953-ல் காமராஜர் 25 சதவிகிதமாகவும் 1971-ல் கருணாநிதி 31 சதவிகிதமாகவும் உயர்த்தினர். எம்.ஜி.ஆரோ, 1979-ல் பார்ப்பனர்களின் தூண்டுதல் காரணமாக பிற்படுத்தப்பட்டவர்களின் இடஒதுக்கீட்டில் பொருளாதார வரம்பு விதித்தார். இதற்கு எதிராக எதிர்ப்புகளும் போராட்டங்களும் உருவானதைத் தொடர்ந்து முற்பட்டவர்களுக்கும் பொருளாதார வரம்பு விதிப்பேன் என்று கூறிப் பார்த்தார். இருந்தும் தமிழக எதிர்கட்சியினரின் பிரச்சாரத்தால் அதிருப்தி பெருகியது. அடுத்து நடந்த தேர்தலில் எம்.ஜி.ஆருக்கு தோல்வியே கிட்டியது. உடன் எம்.ஜி.ஆர். அந்த ஆணையைத் திரும்ப பெற்றுக் கொண்டதோடு 1980-ல் பிற்பட்டவர்களுக்கான 31% ஒதுக்கீட்டை 50% ஆக உயர்த்தினார்.

மண்டல் கமிஷன் அமுலாக்கப் பிரச்சினையின் போது நடந்த பல வழக்குகளில் அரசின் மொத்த இட ஒதுக்கீடு 50 சதவிகிதத்தைத் தாண்டக் கூடாது என்பது உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பு, தமிழக அரசு ஒதுக்கீட்டு அளவுக்கு பிரச்சினையாக வந்தமைந்தது. இதைக் கொண்டு தமிழக வழக்கறிஞர் விஜயன் என்பவர் தமிழக அரசின் 69% இட ஒதுக்கீட்டைக் குறைக்கச் சொல்லி உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தார். உயர் நீதி மன்றமோ நிர்வாக சிக்கலைத் தவிர்க்க 93-94-ம் கல்வியாண்டில் மட்டும் 69% இடஒதுக்கீடு இருக்கலாம் என்றும், 94-95-ம் கல்வியாண்டிலிருந்து 50% ஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கியது. இதற்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து தடை வாங்கினார், அவ்வழக்கறிஞர். இதனால் சட்டமன்றத்தில் 69% இடஒதுக்கீட்டை அங்கீகரித்து தீர்மானம் போட்டு, சட்டமாக்க ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தார், ஜெயலலிதா. கடந்த ஆண்டு ஒருமுறையும் தற்போதும் அரசு சார்பான வேலை நிறுத்தத்தை நடத்தி இப்பிரச்சினை தொடர்பாக மத்திய அரசை சட்டமாக்கக் கோரி நிர்பந்தித்துள்ளார்.

இடையில் உச்சநீதி மன்ற விசாரணைக்கு, 50% இடஒதுக்கீட்டை ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த உறுதியளித்து தமிழக அரசு ஒப்புதல் பத்திரம் எழுதி கொடுத்தது, வெளியாகி சந்தி சிரித்துப் போனார். (இதில் மட்டுமல்ல பஞ்சாயத்து ராஜ் மசோதா, டங்கல் திட்டம் தொடர்பாகவும் முதலில் ஆதரித்தும் அடுத்த சில நாட்களில் எதிர்த்தும் முடிவுகளெடுத்து இரண்டும் கெட்டானாகவே செயல்பட்டார்) நடப்பு கல்வியாண்டில் பள்ளி-கல்லூரி இடஒதுக்கீட்டில் பிரச்சினை எழுந்ததும் பா.ம.க., சி.பி.ஐ., திருநாவுக்கரசு, லத்தீப் போன்ற கட்சிகளோடு தி.மு.க., கூட்டணி அமைத்து ஜூன் 18-ந் தேதி கோட்டை முன் மறியல் செய்யப் போவதாக அறிவித்தது. பின்னரே தனக்கு வழங்கப்பட்ட 'சமூகநீதி வீராங்கனை' பட்டத்தின் நினைப்பு வந்து, ஹைதராபாத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த ஜெயலலிதா விழுந்தடித்து ஓடி வந்தார். ஒரு நாள் இடைவெளியில் 'திடீர்' பந்த் நடத்தி பொதுமக்களின் வெறுப்பைத்தான் தேடிக் கொண்டார். இதற்குப் பின் தன் பின்னே திரண்டு போராட அனைத்துக் கட்சியினருக்கும் அழைப்பு விடுத்தார். வீரமணி, நெடுமாறன் போன்ற அனாமத்து அரசியல்வாதிகளைத் தவிர யாரும் செவி மடக்கவில்லை.

தன்னை மதிக்காமல், எதிர்த்து எம்.ஜி.ஆர். பெயரை வைத்து அரசியல் நடத்தும் திருநாவுக்கரசு, எஸ்.ஆர்.ராதா, விசுவநாதன் போன்ற உதிர்ந்த ரோமங்களைத் தாக்கி அடக்குவதும், பிரிந்து சென்று பிரச்சினை கிளப்பிக் கொண்டிருக்கும் காங்கிரசு - வாழப்பாடிக் கும்பலை அத்துமீறி தாக்கி வருவதும் ஜெயலலிதாவின் பாசிச - குரூர புத்திக்கு உதாரணங்கள். இக்குரூர புத்தி தன்பின்னே திரளாத எதிர்க்கட்சிகள் மீதும் பாய்ந்ததில் வியப்பில்லை. மாற்று தேதி அறிவித்து மறியல் செய்த கருணாநிதி, ராமதாசு கட்சியினருக்கு அனுமதி மறுத்து முன்கூட்டியே ஆயிரக்கணக்கில் கைது செய்தார். இதுவல்லாமல் தமது அடிவருடிகள் மூலம் தரக்குறைவாக தாக்கி அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார். கருணாநிதி அணியினர் தொடர்ந்து அறிவித்துள்ள போராட்டத்தை ஒடுக்குவதற்கு மிரட்டி வருவதோடு, முடக்க ரகசிய தயாரிப்புகளையும் செய்து வருகிறது ஜெயா கும்பல்.

69% இட ஒதுக்கீட்டிற்காக நரசிம்மராவை சந்திக்கும் ஜெயா; ஓட்டு ஆதாயம் கருதியே இருவரும் நாடகமாடுகிறார்கள்





படிப்பகம்

www.padippakam.com

காங்கிரசும், ஜெயாவும் 69% இட ஒதுக்கீட்டை ஆதரிப்பதற்கு எவ்வித அடிப்படையும் இல்லை. பிற்பட்ட சாதியினரின் அனுதாபம் - ஓட்டு லாபம் கருதியே "கூட்டத்தோடு கோவிந்தா" போடுகிறார்கள். 69% இடஒதுக்கீடு தொடர்பான தமிழக அரசின் சட்டத்தீர்மானம் பற்றி வாயே திறக்காமல் மறுபுறம் தமிழக காங்கிரசு மத்திய தலைமையை நிர்பந்திப்பது போல் நாடகமாடுகிறது. ஜெயா கும்பலோ, 50% ஒதுக்கீட்டை ஏற்று உச்சநீதிமன்றத்துக்கு எழுதிக் கொடுத்தது மட்டுமல்ல; தமிழக அரசு வேலை வாய்ப்பிற்கு ஆள் எடுப்பதை நிறுத்தி வைத்து விட்டும், 50 மாணவர்களுக்கு குறைவாக உள்ள தொடக்கப் பள்ளிகளை இழுத்து மூடச் சொல்லிவிட்டும் மறுபுறம் போராட்டம் நடத்தி ஏய்க்கிறது. உயர்-கல்விக்கான தோற்றுவாயை வெட்டிவிட்டும் அரசு வேலைவாய்ப்பை மூடிவிட்டும் 69 சதவிகிதமென்ன, 100 சதவிகிதமும் இடஒதுக்கீடு கேட்டு ஜெயா போராடுவார்! இடஒதுக்கீட்டு கோரிக்கைக்கு இவ்வழியில் இதைவிட வேறு யாரால் குழிபறிக்க முடியும்?

மத்திய அரசு 69% இடஒதுக்கீட்டை ஏற்று சட்டமாக்காவிட்டால் பிற்படுத்தப்பட்டவர்கள் பாதிக்கப்படாமல் அதே அளவு இடஒதுக்கீடு கிடைக்க ஏற்பாடு செய்வதாக ஜெயா ஒரு திட்டத்தை அறிவித்துள்ளார். 38 சீட்டுக்களை அதிகரித்து இதில் 19 சீட்டுகளை பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கொடுத்துவிட்டு மீதி 19-ஐ யாருக்கும் கொடுக்காமல் நிறுத்தி வைப்பதே அப்புதிய மாயாஜால வித்தை. இதன் மூலம் பிற்பட்டவர்கள் என்ற பெயரில் மேல் சாதியினருக்கு ஏற்கனவே உள்ளதைவிட கூடுதல் வாய்ப்பு கிடைப்பதும் தாழ்த்தப்பட்டவர்கள், மதச் சிறுபான்மையினருக்குரிய இடஒதுக்கீட்டு சதவிகிதம் குறைந்து பாதிக்கப்படுவதுமே நிகழும். சதவிகிதம் என்றால் 100-க்குப் பதிலாக 138 என்று ஜெயா புது அகராதி உருவாக்க முடியாது. மேலும் ஏற்கனவே இருக்கும் சீட்டுகளுக்கு உரிய இடவசதி, பொருளாதார வசதி, பிற வசதியின்றி அரசு கல்லூரிகள் இயங்கும் நிலையில் இது நடைமுறை சாத்தியமற்றது. அதேசமயம் சுயநிதிக் கல்லூரிகளின் நன்கொடை கொள்ளையை அதிகரிக்கவும், இதற்கு அனுமதியளிப்பதற்கு பேரம் பேசி அதிகாரிகள், அமைச்சர்கள் லஞ்சம் பெறவும் உதவும். இதனாலேயே அரசு கல்லூரி நிர்வாகம் இதை எதிர்க்கவும் சுயநிதிக் கல்லூரி நிர்வாகம் வரவேற்கவும் செய்கின்றன.

இக்கேடு கெட்ட ஜெயாவை ஓடோடி போய் ஆதரித்து பிரச்சார பீரங்கிகளாகவும் செயல்படும் தி.க. வீரமணி, தமிழர் தேசிய இயக்க நெடுமாறன் பற்றி என்னவென்று சொல்வது, மானங்கெட்டதுகள் - வெட்கங்கெட்டதுகள் என்பதைத் தவிர?! 50% இடஒதுக்கீட்டை ஏற்று ஜெயா உச்ச நீதிமன்றத்துக்கு எழுதிக் கொடுத்ததை தவறில்லை என்றும் நியாயப்படுத்துகிறார் வீரமணி. இதைவிட ஜெயாவின் மூளையாகவும் கையாகவும் இப்பிரச்சினையில் தான் செயல்படுவதை எண்ணி பெருமைப்பட்டுக் கொள்கிறார். ஜெயலலிதாவிற்கு இன்னொரு வெங்கட்ராமன், அதுவும் திராவிடக் கட்சிகளிலேயே கிடைத்து விட்டார்! இந்த ஈனச் செயலுக்கு "குறிப்பிட்ட பிரச்சினையில் மட்டுமே கொள்கை உடன்பாடு", "நல்ல செயலை ஆதரிக்கிற பரந்த மனப்பான்மை" என்றெல்லாம் நியாயப்படுத்திக் கொண்டிருந்த வீரமணிகளும் நெடுமாறன்களும் "இது அரசியல் ராஜதந்திரம்" என்றும் பேசத் தொடங்கி விட்டார்கள். பெரியார் வளர்த்த பகுத்தறிவு, தன்மானத்திற்கு இப்படி ஒரு அவமானச் சின்னங்களா?

தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க., போன்ற கட்சிகள் இப்பிரச்சினையில் கவனம் செலுத்துவது வழமையான நிகழ்வே. இடஒதுக்கீடு, ஹிந்தி எதிர்ப்பு, தமிழின ஆதரவு போன்ற பிரச்சினைகளின் மூலமே கட்சி கட்டியும், கட்சி வளர்த்தும் வருபவர்கள். ஆனால் இப்பிரச்சினைகளில் உறுதியாக நின்று போராடாமல் தமது பிழைப்புவாதம் என்ற அளவுகோலில் வரம்பிட்டுக் கொண்டு பயன் அடைவார்கள். 69% இட ஒதுக்கீட்டை மத்திய அரசு அரசியல் சட்டமாக்காத போது உச்சநீதி மன்றம் அச்சட்டத்தை ஏற்றுக் கொள்ளாத போதும் மேற்கொண்டு இக்கட்சிகள் என்ன செய்யப் போகின்றன? சட்ட நகல் எரிப்பு போராட்டத்தை வேண்டுமானால் அடையாளத்தனமாக நடத்தி விட்டு அடங்கிப் போகலாம்.



இட ஒதுக்கீட்டிற்காக மறியல் செய்ய அனுமதி மறுத்து கைது செய்யப்பட்ட எதிரணித் தலைவர்கள்

ஏறக்குறைய 3000 ஆண்டுகளாக இங்கு நிலவி வருகிற நால் வருண சாதியடுக்கு முறையால் ஒரு குறிப்பிட்ட பிரிவினரே கல்வி, அரசு பதவிகளில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். பெரும்பான்மையாக பார்ப்பனர்களும் சிறுபான்மையாக சத்திரிய, வைசியப் பிரிவினருமே இவர்கள். சூத்திரர்களும் பஞ்சமர்களும் உரிமைகள் பறிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்டனர். இந்திய சமுதாய, அரசியல், பொருளாதார மாற்றங்களால் சூத்திரர்களில் குறிப்பிட்ட சில சாதியினர் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முன்னுக்கு வந்தனர். இவர்களும், மன்னர் ஆட்சிக் காலத்தில் கல்வி - அரசு நிர்வாகங்களில் சிறுபான்மையாக இருந்த சத்திரிய, வைசியப் பிரிவினரும் சேர்ந்து ஓரணியாகி ஆங்கிலேயன் காலத்தில் இருந்து பார்ப்பனர்களுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். மஹாராஷ்டிரத்தில் பூலே, சென்னையில் பெரியார் போன்றவர்களின் போராட்டம் இவ்வகைப்பட்டதே. இந்த அணியில் சேராமல் இருந்த தாழ்த்தப்பட்ட (பஞ்சமர்) சாதியினருக்காகப் போராடியவர் அம்பேத்கார். இரு அணியினரும் சில சமயங்களில் ஒன்றுபட்டும் பலவற்றில் வேறுபட்டுமே போராடி வருகின்றனர்.

ஆங்கிலேயன் தனது உற்பத்தி தேவை - கொள்ளைக்கு ஏற்ப அரசு நிர்வாக ஊழியர்களை - குமாஸ்தாக்களை உருவாக்குவதற்காக 1840-ல் அரசு உத்தியோகத்திலும் 1858-ல் கல்வியிலும் அனைத்து சாதியினரும் நுழைய அனுமதித்து சட்டமாக்கினான். ஆனால் நடைமுறையில் பார்ப்பனர்களே அவற்றில் செல்வாக்கு செலுத்துபவர்களாகவும் பிறர் வாய்ப்பு அதிகம் பெற முடியாதவர்களாகவும் இருந்தனர். இத்தடையை உடைப்பதற்காக தனி இடஒதுக்கீடு கோரிய போராட்டங்கள் எழுந்தன. தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு மத்திய, மாநில அரசுகளில் தனி ஒதுக்கீடு ஆங்கிலேயன் காலத்திலேயே கிடைத்தது. பிற்பட்டவர்களுக்கோ அந்தந்த மாநில அரசால் மட்டுமே பின்னர் வழங்கப்பட்டது. இதை அங்கீகரிக்கும் அரசியல் சட்ட பிரிவுகளும் 1950-லும் பின்னரும் உருவாக்கப்பட்டன. எனினும் இடஒதுக்கீட்டின் அளவைக் கூட்டச் சொல்லியும், மேலும் தனிப் பிரிவுகளை (மிகவும் பிற்படுத்தப்பட்டவர் போன்று) உருவாக்கச் சொல்லியும் போராட்டங்கள் தொடர்ந்தன. கலேல்கர், மண்டல், சட்டநாதன் போன்றவர்களின் தலைமையிலான பல குழுக்கள் மத்திய, மாநில அரசுகளால் நியமிக்கப்பட்டு பிற்பட்டவர்களுக்கான இட



படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கீட்டில் பரிந்துரைகளைப் பெற்று சில மாற்றங்களும் செய்யப்பட்டன.

வெள்ளையன் ஆட்சியிலிருந்து ஏறக்குறைய இரு நூற்றாண்டு காலமாக பார்ப்பனருக்குப் போட்டியாக கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் மேல்சாதி இந்துக்களே (சத்திரிய, வைசிய, சூத்திர பிரிவைச் சேர்ந்த சில சாதிகளே) செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். இடஒதுக்கீடு அல்லாமல் பகிரங்க போட்டி வாய்ப்புகள் மூலமும் பெரும்பான்மை இடங்களை கைப்பற்றி இவர்களே இன்று செல்வாக்கு செலுத்துகிறார்கள். இவர்கள் தான் மேலும் மேலும் அளவை கூட்டச் சொல்லியும் அதனால் முழுப்பயனையும் அடைந்து வருகின்றனர். 69% இடஒதுக்கீடு கொடுத்தாலும் அதற்கு மேலும் கொடுத்தாலும் இவர்களே அனுபவித்து வளர்வார்கள். சூத்திரர்களில் உள்ள உண்மையில் பிற்படுத்தப்பட்ட சாதியினர் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வருகின்றனர்.

பிற்பட்டவர் என்ற பெயரிலும் தில்லுமுல்லுகள் நடத்தியும் (போலிச் சாதி சான்றிதழ்) ஆதாயம் அடைகிற மேல் சாதியினருக்கு - பொதுவாக செட்டியார், ரெட்டியார், முதலியார், வேளாளர், நாயுடு போன்றவர்களையும், பாதிக்கப்படும் உண்மையில் பிற்படுத்தப்பட்ட கீழ் சாதியினருக்கு - வண்ணார், நாவிதர், குயவர் போன்றவர்களையும் குறிப்பிடலாம். வன்னியர், முக்குலத்தோர், வெள்ளாளக் கவுண்டர் முதலான இடைப்பட்ட சாதியினர் பிற்படுத்தப்பட்டியலிலேயே தனி இடஒதுக்கீடு கேட்டு போராடி வருவதையும் இதில் வன்னியர்கள் தனி இட ஒதுக்கீடு பெற்றுள்ளதையும் பார்க்கிறோம். இவர்களில் கணிசமானோர் பொதுவில் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் மேல்நிலையில் - மேல் சாதி ஆதிக்கவாதிகளாகவே உள்ளனர். எனவே உண்மையில் பிற்படுத்தப்பட்ட கீழ் சாதியினருக்கு இடஒதுக்கீடு சலுகையளிப்பதுதான் நியாயமானது. தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே சாதி - சமூக ரீதியாக பல்லாயிரம் ஆண்டுகளாக அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள் இவர்களே.

'பிற்பட்ட' மேல்சாதியினர், பொது எதிரி பார்ப்பனரைக் காட்டி பிற சாதியினரை (பிற்பட்ட கீழ்சாதியினர், தாழ்த்தப்பட்டவர்) தம்பின்னே திரட்டிக்கொண்டு போராடுவதும், அதன் பயனை தாம்மட்டுமே அறுவடை செய்வதும் தமிழக திராவிடக் கட்சிகளின் வரலாறாக உள்ளது. சமுதாய நடைமுறையில் பிற சாதியினரை ஒடுக்குபவர்களாக இருப்பது மட்டுமல்ல, அச் சாதியினரின் நலன்களுக்கு முரணாகவோ, நலன்களில் அக்கறை கொள்ளாமலோ இருக்கின்றனர். (இப்படி மேல்சாதியினர் தாம் மட்டுமே பயனடைந்ததால்தான் பிற்பட்ட பட்டியலிலே உள்ள வன்னியர் போன்ற இடைப்பட்ட சாதியினர் தமக்கென்று தனிகட்சியும், தனி ஒதுக்கீடும் என்ற நிலை எடுத்தனர்; மேலும் பலர் இவ்வாறு தனி ஒதுக்கீடு கேட்கிறார்கள்.) தற்போதும் ஜெயலலிதா சீட்டுக்களை அதிகரித்து செய்யும் பித்தலாட்டத் திட்டத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்படுவதைப் பற்றி இக்கட்சிகள் அக்கறை கொள்ளாமல் உள்ளன.



டில்லியில் மறியல் செய்த ம.தி.மு.க. வினர் கைது; திராவிடக்கட்சிகளின் போராட்டத்திற்கு எல்லை பிழைப்பு வாதமா?

எனவே 69% இடஒதுக்கீடு சட்டத்திற்கான போராட்டம் மேல் சாதி இந்துக்கள் (வன்னியர் போன்ற இடைப்பட்ட சாதியினர் உட்பட) பயனடையவும் அவர்களது மேலாதிக்கம் தொடரவுமே வழிவகுக்கும். 50% சதவிகிதமாக குறைக்கப்பட்டாலும் இம்மேல்சாதியினருக்குத் தான் சொந்த நலனில் மிகச்சிறிய பாதிப்பு. மேலும் உண்மையில் பிற்படுத்தப்பட்ட கீழ் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உரிய இடஒதுக்கீடு சலுகை அளிக்கப்பட்டாலும் கூட அது அவர்களை சமூக சம நிலைக்கு கொண்டு வருவதற்கான ஒரு வழியே. சமுதாய நடைமுறையில் உள்ள சாதிய வேறுபாட்டை - சிந்தனையை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மூலமும் பொருளாதார ரீதியாக முன்னேற்றுவதன் மூலமும்தான் சாதிய - வருண முறையில் உண்மையில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக சம நிலைக்கு வரமுடியும். திராவிடக் கட்சிகளிலிருந்து போலி கம்யூனிஸ்டு, வே.ஆனைமுத்து போன்றவர்களின் பகுத்தறிவு கட்சிகள், தமிழினவாத குழுக்கள் வரை இதற்காக எதுவும் செய்வதில்லை; பேசுவதுமில்லை. மாறாக இடஒதுக்கீட்டை மட்டுமே தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார்கள். அதுவுமில்லாமல் தங்கள் மூதாதையர்களான நீதிக்கட்சியினர்தான் இடஒதுக்கீட்டையே முதன் முதலாக கொண்டுவந்ததாகவும் அதற்காகப் போராடியவர்களாகவும் பித்தலாட்டம் செய்கிறார்கள்.

ஜெயாவின் மூளையாகவும் கையாகவும் இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தான் செயல்படுவதை எண்ணி பெருமைப்பட்டுக் கொள்கிறார், வீரமணி. ஜெயலலிதாவிற்கு இன்னொரு வெங்கட்ராமன் அதுவும் திராவிடக் கட்சிகளிலேயே கிடைத்துவிட்டார்!

மத்திய, மாநில அரசுகள் கல்வியை மேலும் மேலும் தனியாருக்கு தாரை வார்த்துக் கொடுப்பதும், இதனால் வசதி படைத்தவர்கள் மட்டுமே மேற்படிப்பு பற்றி யோசிக்க முடியும் என்ற நிலையுமே இங்கு உள்ளது. சாதாரண பள்ளி படிப்புகளுக்குரிய நிதியைக்கூட இரு அரசுகளும் ஆண்டுதோறும் குறைத்து வருகின்றன. மேட்டுக்குடியினருக்கான பள்ளிகள் மட்டுமே பெருத்து வருகின்றன. இதேபோல் அரசு தொழிற்சாலைகளையும், பொதுத்துறை நிறுவனங்களையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதும், இழுத்து மூடுவதுமே தொடர்கிறது. அரசு நிர்வாகத்தில் கூட நவீன - எந்திரமயமாக்கி ஊழியர் வெளியேற்றம் நடக்கிறது. புதியப் பொருளாதாரக் கொள்கை போன்ற மக்கள் விரோதக் கொள்கைகளால் நாடு திவாலாகி அரசும், அரசுத் துறைகளுமே செயல்பட முடியாமல் வெட்டிக் குறுக்கப்படுகின்றன. இந்நிலையில் கல்வியிலும், அரசு வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு என்பதே கேள்விக் குறியாகி நிற்கிறது. மேலும் கல்லூரிகளில் நன்கொடையும் அரசு வேலைக்கு இடைத்தரகர்களுக்கு லஞ்சமும் கொடுத்துதான் இடஒதுக்கீட்டு மூலமும் வாய்ப்பை பெற முடிகிறது.

எனவே உண்மையில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கான இடஒதுக்கீட்டிற்காகப் போராடுகிற அதே சமயம், மேலுள்ள அவல நிலைமைகளுக்கு எதிராகவும் போராடுவதிலேயே அர்த்தமிருக்கிறது. ஆனால் தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., போன்ற கட்சிகள் மேலுள்ளவைப் பற்றியோ, ஜெயலலிதா ஆரம்பப்பள்ளிகளை இழுத்து மூடப் போவதைப் பற்றியோ, அரசு வேலை வாய்ப்பை நிறுத்தியதைப் பற்றியோ வாய் திறக்காமல் - கவனம் செலுத்தாமல் இட ஒதுக்கீட்டிற்கு மட்டும் போராடுவது அயோக்கியத் தனமானதே!

● ராசு



படிப்பகம்

www.padippakam.com

## ‘காட்’ எதிர்ப்பு கருத்தரங்கம்

உரிமைப் பதிவு என்ற பெயரில் ஏழை நாடுகளின் உயிரியல், இயற்கைச் செல்வங்களை, மூலிகைகளை அமெரிக்கா, ஜெர்மன், ஜப்பான் ஆகிய மேல் நிலை வல்லரசுகள் கொள்ளையிட ‘டங்கல்’ திட்டத்தின் மூலம் இந்தியா தாரை வார்க்கப்பட்டு விட்டது. இதைக் கண்டித்து ‘‘காட்-டங்கல் எதிர்ப்பு கருத்தரங்கம்’’ ஒன்றை கோவை, தொழிலாளர் பிரச்சாரக் குழு சேரன் பேலஸ் அரங்கில் 30-5-94 அன்று நடத்தியது.

தொ.பி.கு. தோழர் என். சந்திரசேகர் தலைமை தாங்க சென்னை, உயர் நீதி மன்ற வழக்கறிஞர் தோழர் பா. வேணுகோபால், கோவை, வழக்கறிஞர் தோழர் திரு மூர்த்தி, சென்னை பாரத மிகுமின் நிலைய ஊழியர் தோழர் ராஜன் அவர்களும் சிறப்புரையாற்றினர். காட்-டங்கல் திட்டத்தால் நமது உரிமைகள் பறிபோவது பற்றியும், பொருளாதார, ராணுவ ரீதியாக மட்டுமின்றி கலாச்சார ரீதியான சீரழிவையும் இவை உருவாக்குவது பற்றியும், பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்படுவது பற்றியும், போலித் தொழிற்சங்கத் தலைமைகளையும் அவர்களின் பொருளாதார போராட்டங்களையும் அம்பலப்படுத்தியும், உயிர் மூச்சான நமது உரிமையை காக்க புரட்சிகர அமைப்புகளின் கீழ் போராடுவது ஒன்றே வழி என்பதையும் தோழர்கள் விளக்கிப் பேசினர். கருத்தரங்கில் சுமார் 150 பேர் கலந்து கொண்டு ஆதரவு தந்தனர்.

கோவை நகர போலீசு ம.க.இ.க., தொ.பி.கு-வின் பொதுக்கூட்டம் போன்ற பிரச்சார இயக்கங்களுக்கு மட்டும் அனுமதி மறுத்து தொடர்ந்து அடாவடித்தனம் செய்வதால் இதுபோன்ற அரங்கு கூட்டத்தை நடத்தினர். ஆனால் இக்கருத்தரங்கம் நடந்து முடிந்த மூன்றாம் நாளில், ‘‘இது போன்ற கட்டடம், அரங்கம், கொட்டகையைப் பயன்படுத்துபவரும், வைத்திருப்பவரும் போலீசு உரிமம் பெற்றே நிகழ்ச்சி நடத்த வேண்டும்; இரும்பு, உலோகம் தொடர்பான வியாபாரிகள் - பணிமனை உரிமையாளர்களும் உடனடியாக போலீசு உரிமம் பெற வேண்டும்’’ என்று நகர ஆணையாளர் அறிவித்தார். இப்படி கொடிய உரிமை பறிப்புகள் மூலம் புரட்சிகர அமைப்புகளின் பிரச்சாரத்திற்குரிய அனைத்து வாயில்களையும் அடைத்து முடக்கிவிடலாம் என கனவு காணுகிறது, கோவை நகர போலீசு.

● தலித் பெண்ணை நிர்வாணமாக்கி அடித்துக் கொலை!

● கலப்புத் திருமணம் செய்த தலித் இளைஞன் படுகொலை!

# சாதி வெறி அட்டூழியம்

**தா**ழ்த்தப் பட்டோர் மீது மேல்சாதி இந்துவெறியர்கள் தாக்குதல் நடத்துவதென்பது, வடமாநிலங்களில் அன்றாடம் தொடரும் கொடுமைகள்தான். ஆனால் அண்மையில் நடந்துள்ள மிகவும் குரூரமான, காட்டுமிராண்டித் தனமான தாக்குதல்கள் நாட்டையே அதிர்ச்சியடையச் செய்பவையாக உள்ளன. இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் நடக்கும் இத்தகைய சாதிவெறிக் கொடுமைகள், நாட்டையும் மக்களையும் வெட்கித் தலைகுனியச் செய்துள்ளன.

இந்துவெறி பாரதீய ஜனதா ஆளும் ராஜஸ்தான் மாநிலத்தில் கங்காநகர் மாவட்டத்திலுள்ள ஜெயித்சார் எனும் கிராமம். இக்கிராமக் கோயிலிலுள்ள ‘புனிதமான அமர்ஜோதி’ மீது மலைசாதியைச் சேர்ந்த ஒரு சிறுவன் தற்செயலாக விழுந்துவிட்டதால் அந்த ஜோதி அணைந்துவிட்டது. இதனால் அபசாரம் நடந்துவிட்டதாக ஆத்திரமடைந்த கோயில் தர்மகர்த்தாக்களும், பார்ப்பன மேல் சாதிவெறியர்களும், மறுநாள் மே 29-ம் தேதியன்று அச்சிறுவனின் தாயார் பிரகாஷ் கவுரை பிடித்து இழுத்துவந்து கோயிலின் முன் நிறுத்தினர்.

30 வயதான அப்பெண்ணை நிர்வாணப்படுத்தி, தலையை மொட்டையடித்து முகத்தில் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி கோயிலைச் சுற்றிவரச் செய்தனர். கூடியிருந்த அனைவரும் ஒருவர் மாற்றி ஒருவர் அப்பெண்ணை மிருகத்தனமாக அடித்தனர். பிறப்புறுப்பில் குச்சியால் குத்தி வதைத்தனர்.

இத்துடன் கொடுமை நின்றுவிடவில்லை. சாதிவெறி பிடித்த பாரதீய ஜனதா குண்டர்கள் அப்பெண்ணை கழுதை மேலேற்றி ஊர்வலமாக அடித்து இழுத்துச் சென்றனர். காலை 11 மணி முதல் பகல் 3 மணி வரை இக்காட்டுமிராண்டித்தனம் நடந்த போதிலும், சுற்றி நின்ற பொது மக்கள் எவரும் இக்கொடுமையை எதிர்த்து வாய் திறக்கவில்லை.

உடலெங்கும் ரத்தம் ஒழுக, சாகும் நிலையை அடைந்த அப்பெண் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டபோதுகூட, இரக்கமற்ற இந்துவெறியர்கள் அவர் வாயிலே வெந்நீரையும், மண்ணெண்ணையையும் ஊற்றியுள்ளனர். மிகவும் கொடூரமாக வதைக்கப்பட்ட அப்பெண் அடுத்த சில நிமிடங்களில் மயங்கி விழுந்து மாண்டு போனாள். துடிக்கத்துடிக்க அடித்தே கொல்லப்பட்ட அப்பெண்ணின் பிணத்தை கோயில் வாசலில் இந்துவெறியர்கள் வீசியெறிந்தனர்.

கோயிலுக்கு அருகிலேயே போலீசு நிலையம் இருந்த போதிலும், தமது கண்ணெதிரே உதிரத்தை உறையச் செய்யும் இக்கொடுமை நடந்த போதிலும் போலீசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேசமயம் கோயிலில் சிறுவன் திருடிவிட்டதாகப் பொய்க்குற்றம் சாட்டி அவனையும், அவனது தந்தை, சகோதரர் - சகோதரிகளையும் போலீசு கைது செய்துள்ளது. அத்தாழ்த்தப்பட்ட பெண்ணை அவமானப்படுத்தி அடித்துக் கொன்ற கொலைகாரர்கள் அனைவரும் இந்துவெறி பாரதீய ஜனதா குண்டர்கள் என்பது இப்போது நிரூபணமாகியுள்ளது. ஆனாலும் ஆளும் பாரதீய ஜனதா அரசு கொலைகாரர்களைக் காப்பாற்றுவதிலேயே குறியாக உள்ளது.

‘மார்க்சிஸ்ட்’ ‘கட்சியின் தலைமையின் கீழ் இயங்கும் ஜனநாயக மாதர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிருந்தாகரத், ராஜஸ்தான் மாநில உள்துறை




படிப்பகம்

www.padippakam.com

அமைச்சரான கைலாஷ் மெக்வாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இச்சம்பவத்தைப் பற்றி விசாரித்த போது, அவர் கொலைகாரர்களுக்கு ஆதரவாகவே பேசியுள்ளார். ''இது கொலை அல்ல; ஆத்திரப்பட்ட மக்களின் பிரதிபலிப்புதான்'' என்று இக்காட்டுமிராண்டித்தனத்தை நியாயப்படுத்தி உள்ளார்.

எப்படியிருக்கிறது பாருங்கள், இந்துவெறியர்களின் நியாயம்? வாய்க்கொழுப்பேறி அமைச்சரே இப்படி பேசுகிறார் என்றால் அவருக்கும் பாரதீய ஜனதா ஆட்சிக்கும் எந்த அளவுக்கு இந்துவெறி திமிர் இருக்கும்? இந்த லட்சணத்தில், மகளிர் அமைப்புகளைக் கட்டி பெண்களின் முன்னேற்றத்துக்கும் உரிமைக்கும் பாடுபடுவோம் என்று இந்துவெறியர்கள் கூறுவது எவ்வளவு பெரிய மோசடி?

ராஜஸ்தானில் நடப்பது வருணாசிரம - சனாதன இந்துவெறி பிடித்த பாரதீய ஜனதாவின் ஆட்சி; அதற்கு மாற்றாக உ.பி.யில் நடப்பதோ தாழ்த்தப்பட்டோர் - பிற்பட்டோர் கூட்டணியில் உருவான 'சமூக நீதி' ஆட்சி என்று மண்டல் ஆதரவாளர்கள் பெருமையுடன் கூறுகிறார்கள். ஆனால் உ.பி.யில் தொடரும் சாதிவெறி அட்டூழியங்கள் நாட்டையே அதிர்ச்சியில் உறையச் செய்பவையாக உள்ளன.



உத்திரப் பிரதேசத்தின் காசியாபூர் மாவட்டத்தில் உள்ளது, காரவ்னா கிராமம். அக்கிராமத்துச் சேரியில் வசிக்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இளந் தம்பதிகள் சகுந்தலா - ராசேதியாம். சகுந்தலாவின் மாமனாரான ஜெகதேவ், தனது சகோதரர் மகாதேவ் வீட்டில் கடந்த சில ஆண்டுகளாக வசித்து வருகிறார். ''யாதவ்'' சாதியைச் சேர்ந்த பைஜு என்பவன் அந்த ஊரின் பிரபல ரௌடி. அவன் மகாதேவ் வீட்டிற்குள் புகுந்து, ஜெகதேவின் அறையைத் தனது குண்டர்களோடு ஆக்கிரமித்துக் கொண்டான். இதைத்தடுத்த ஜெகதேவ், அவரது மகன் ராதேசியாம் ஆகியோரைக் தனது குண்டர்களை ஏவி மிருகத்தனமாகத் தாக்கினான். படுகாயமடைந்த ராதேசியாம் இதுபற்றி போலீசிடம் முறையிடுவதற்காகச் சென்றதும் யாதவ் குண்டர்கள் ஆத்திரமடைந்தனர்.

''உன் புருஷனுக்கு அவ்வளவு திமிராடி?'' என்று யாதவ் குண்டர்கள் ராதேசியாமின் இளம் மனைவி சகுந்தலாவை தலைமுடியைப் பிடித்து தரதரவென இழுத்து வந்தனர். சாதிவெறி போதை தலைக்கேற, கர்ப்பிணிப் பெண்ணான சகுந்தலாவின் சேலையை உருவி நிர்வாணப்படுத்தி வீதியெங்கும் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர். மானத்தை மறைக்க முயன்ற அப்பெண்ணின் கைகளைப் பிடித்து தடியால் அடித்தபடியே நாயைப் போல வீதியில் இழுத்துச் சென்று அவமானப்படுத்தியுள்ளனர். ''எங்களை எதிர்த்தால் என்ன நடக்கும் என்பதை கீழ்சாதி நாய்களுக்கு எச்சரிக்கவே இப்படிச் செய்தோம்'' என்று ''யாதவ்'' குண்டர்கள் பகிரங்கமாக கூறுகின்றனர்.

கடந்த ஜூன் 14-ந் தேதியன்று நடந்த இக்கொடுஞ்செயல் பற்றி உள்ளூர் பத்திரிகைகளில் மெதுவாகக் கசியத் தொடங்கியதும், பகுஜன் சமாஜ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகு, காசியாபூர் மாவட்ட ஆட்சியாளர், சகுந்தலாவுக்கு ரூ. 1000 நிவாரணத் தொகையாக அளித்து போலீசு விசாரணைக்கு உத்திரவிட்டுள்ளார். ஆனால், யாதவ் சாதிவெறியர்கள், வழக்கைத் திரும்பப் பெறாவிட்டால், உங்களைக் கொன்றொழித்து விடுவோம் என்று தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். போலீசாரோ குற்றவாளிகளில் ஒருவரைக்கூட இன்னமும் கைது செய்யவில்லை. மாவட்ட நீதிபதியோ, ''முழு நிர்வாணமாக்கவில்லை, ஆடைகளைக் கிழித்து இழுத்துச் செல்லப்பட்டார்'' என்று மேல்சாதியினருக்கு ஆதரவாக வழக்கையே திரித்துப் புரட்டுகிறார்.

அத்தாழ்த்தப்பட்ட
பெண்ணை
அவமானப்படுத்தி
அடித்துக் கொன்ற
கொலைகாரர்கள்
அனைவரும் இந்துவெறி
பாரதீய ஜனதா
குண்டர்கள்.

உத்திரப் பிரதேசத்தில் சமஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிகளின் கூட்டணி ஆட்சி நிறுவப்பட்ட கடந்த 6 மாதங்களுக்குள் தாழ்த்தப்பட்ட பெண்களை நிர்வாணமாக்கி வீதிகளில் அடித்து இழுத்துச் செல்லும் காட்டுமிராண்டித்தனம் இப்போது மூன்றாவது முறையாக நடந்துள்ளது. இதுதவிர, தாழ்த்தப்பட்டோர் மீதான மேல்சாதிவெறியர்களின் தாக்குதல்களும் கொலைகளும் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் நடந்துள்ளன.

உ.பி.யின் பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணி என்பது கீழிருந்து கிராம அளவில் கட்டி வளர்க்கப்பட்ட ஒரு புதிய அரசியல் சக்தி அல்ல; தேர்தல் ஆதாயத்துக்காக சமஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிகளுக்கிடையே மேல் மட்டத்தில் உருவான ஒரு சந்தர்ப்பவாதக் கூட்டணிதான் என்பதையே உ.பி.யில் தொடரும் சாதிவெறி அட்டூழியங்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன.

இதேபோல, சாதிவெறி அட்டூழியங்களுக்குப் பேர்போன பீகாரில், அண்மையில் நடந்துள்ள சம்பவம், சாதிவெறியர்களின் கொட்டத்தையும் குரூரத்தையும் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது. ஏறத்தாழ நான்காண்டுகளுக்கு முன்பு உத்திரப் பிரதேசத்திலுள்ள மெஹரானா



படிப்பகம்

www.padippakam.com

கிராமத்தில் மேல்சாதிப் பெண்ணும் தாழ்த்தப்பட்ட இளைஞனும் காதலித்து கடிமணம் புரிந்த 'குற்ற'த்திற்காக அவர்களை ஊர்ப் பஞ்சாயத்தில் கட்டி வைத்து அடித்து தூக்கிலிட்டு, உயிரோடு எரித்துக் கொன்றனர், ஜாட் சாதி வெறியர்கள். ''சமூக நீதிக்காவலர்'' என்று பீற்றிக் கொள்ளும் லல்லுபிரசாத் யாதவின் ஆட்சி நடக்கும் பீகாரில் அத்தகைய தொரு கொடுமை அண்மையில் நடந்துள்ளது.

தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மகாவீர் ரவிதாசும், 'பிற்பட்ட' குர்மி மேல்சாதியைச் சேர்ந்த மாலதியும் ஹசாரியாக் மாவட்டத்திலுள்ள சோட்கி-ஹெண்டேகாரா கிராமத்தைச் சேர்ந்த இளங்காதலர்கள். மாலதியின் பெற்றோருக்கு இக்காதல் விவகாரம் தெரிய வந்ததும், தமது குர்மி சாதியிலேயே ஒரு இளைஞனுக்கு மாலதியை மணம் முடிக்க ஏற்பாடுகளைச் செய்தனர். இதையறிந்த அக்காதலர்கள் கடந்த மே 23-ந் தேதியன்று ஊரை விட்டு ஓடி, பக்கத்து ஊரிலுள்ள ஒரு கோயிலில் மணமுடித்துக் கொண்டனர். மகாவீரின் அத்தை வீட்டில் இம் மணமக்கள் அடைக்கல மாயினர்.

ஒருவார காலமாக அவர்களைக் காணாத ஆத்திரத்தில், மேல் சாதியினர் மே 31 அன்று 3 கிராமங்களைச் சேர்ந்த பஞ்சாயத்தைக் கூட்டி, அக்காதலர்களின் பெற்றோருக்கு ரூ. 5000 அபராதம் விதித்ததோடு, பக்கத்து ஊர்களிலுள்ள அவர்களின் உறவினர்களது வீடுகளுக்கு ஒரு குண்டர் படையையும் அனுப்பித் தேடத் துவங்கினர். மகாவீரின் அத்தை வீட்டில் அவர்களைக் கண்டதும், நைச்சியமாகப் பேசி அவர்களைப் பஞ்சாயத்தில் கொண்டு வந்து நிறுத்தினர், அக்குண்டர்கள். பஞ்சாயத்தில் குர்மி சாதிவெறியர்கள் மாலதியை அடித்து, மகாவீர் தன்னைக் கடத்திச் சென்றதாகக் கூறுமாறு மிரட்டினர். ஆனால் அந்த இளம் பெண்ணோ, ''நான்தான் மகாவீரைக் காதலித்தேன் அவரைத் தவிர வேறுயாரையும் இனி திருமணம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று உறுதியுடன் கூறினாள்.

இதனால் மேலும் ஆத்திரமடைந்த குர்மி சாதிவெறியர்கள், மகாவீரைக் காட்டுமிராண்டித்தனமாக அடித்து நொறுக்கினர். மாலதியின் உடைகளைக் கிழித்து நிர்வாணப்படுத்தி அடித்தனர். இந்தத் தாக்குதல் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக கிராம மக்கள் முன்னிலையே நடந்தது. பின்னர் குர்மி குண்டர்கள், மகாவீரை இழுத்துச் சென்று நாற்புறமும் சூழ்ந்து கொண்டு கல்லால் அடித்தனர். அவன் மயங்கி விழுந்ததும் தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டு கொன்றனர். மாலதியை இழுத்து வந்து மகாவீரின் பிணத்தைக் காட்டி, உன் காதலனின் கதியைப் பார் என்று எக்காளமிட்டுக் கொண்டே உடலெங்கும் எரியும் விறகுக் கட்டையால் சூடு போட்டனர். அவளது பிறப்புறுப்பிலும் நெருப்புக் குச்சியைச் சொருகி வதைத்தனர். 500-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் முன்னிலையிலேயே இக்காட்டுமிராண்டித்தனம் நடந்துள்ளது. ஆனாலும் யாரும் வாய் திறக்க முடியாமல் விக்கித்துப் போய் நின்றனர்.

இத்தனைக்கு பிறகும், தங்களது குழந்தைகள் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டதால் தாங்களே அவர்களைத் தண்டித்ததாக அவர்களது பெற்றோர்களிடம் உறுதிமொழிப் பத்திரத்தை சாதிவெறியர்கள் எழுதி வாங்கிக் கொண்டனர். அவர்களைத் திரும்பிப் பார்க்காமல் ஊருக்குள் செல்லுமாறு நிர்பந்தித்தனர். இக்கொடுமையைக் காண சகிக்காமல், மகாவீரின் தந்தை போலீசிடம் முறையிட்டபிறகு, போலீசார் வந்து மகாவீரின் பிணத்தை பெற்றோரிடம் ஒப்படைத்தனர். உடலெங்கும் ரணமாகிக் கிடந்த மாலதி, பக்கத்திலுள்ள காட்டுப்பகுதி கிராமத்துக்குத் தப்பிச் சென்று, இப்போது போலீசு பாதுகாப்பில் இருக்கிறாள். அவளை பொய்யான வாக்குமூலம் தருமாறு சாதிவெறியர்கள் தொடர்ந்து மிரட்டி வருகின்றனர். கொலைகார குர்மி குண்டர்கள், ஒருவார காலம் தலைமறைவாக இருந்துவிட்டு போலீசில் சரணடைந்தனர். ஆனாலும் தமது சாதிய பலத்தைக் கொண்டு பிணையில் வெளிவந்துள்ளனர்.

**குர்மி குண்டர்கள், மகாவீரை இழுத்துச் சென்று நாற்புறமும் சூழ்ந்து கொண்டு கல்லால் அடித்தனர். அவன் மயங்கி விழுந்ததும் தலையில் பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டு கொன்றனர்.**



சாதி வெறியர்களால் கொல்லப்பட்ட மகனின் புகைப்படத்தைக் காட்டி குமுறும் தலித் தாய்.

ஏறத்தாழ 3 மாதங்களுக்கு முன்பு அரியானா மாநிலத்திலும் இதே போன்றதொரு கொடுஞ்செயல் நடந்துள்ளது. ரோடாக் மாவட்டத்தைச் சேர்ந்த, நயாகோன் கிராமத்தின் சைனி எனும் மேல்சாதிப் பெண் ஆஷா. 11-ம் வகுப்பு படிக்கும் பள்ளி மாணவியான அவளும் பக்கத்திலுள்ள பாலாலூர் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இளைஞனான மனோஜூம் காதலித்து வந்தனர். இந்த விவகாரம் அப்பெண்ணின் மாமன்களுக்குத் தெரிந்ததும் ஆஷாவை அடித்து நொறுக்கி எச்சரித்தனர். ஆனால் ஆஷா தனது காதலில் உறுதியாக நிற்கத் தொடங்கியதும் ஆத்திரமடைந்த அவர்கள், அக்காதலர்களை கோடரியால் வெட்டிக் கொன்றனர். ஆஷாவை மனோஜ் கற்பழித்துக் கொன்றுவிட்டதாகவும், அதைத் தடுக்க முயன்ற போது ஏற்பட்ட மோதலில் மனோஜ் மாண்டதாவும் அச்சாதிவெறியர்கள் கதைகட்டியதோடு, ஊர் மக்களையும் மிரட்டி வைத்தனர். பின்னர் மெதுவாக உண்மை வெளிவந்து இப்போது கொல்லப்பட்ட பெண்ணின் தாய் மாமன்கள் போலீசுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இத்தகைய சாதியக் கொடுமைகள் நீடிப்பது நமது நாட்டுக்கும் சமூகத்துக்கும் மிகப் பெரிய அவமானம். இவற்றை இனியும் சகித்துக் கொண்டிருப்பது மனிதப் பண்பே இல்லை. சாதிய - சமூக ஆதிக்கத்தை வேரறுக்க ஆயுதமேந்திய விவசாயப் புரட்சிக்கு அணி திரளுவதைத் தவிர வேறு வழியுமில்லை. விவசாயப் புரட்சி இல்லாமல் நாற்காலி பதவிகளால் மட்டும் தலித்துகள் விடுதலை அடைந்துவிட முடியாது. நாடாளுமன்ற முறையில் ஆட்சியைப் பிடிப்பதன் மூலம் சமூக நீதியையும் பொருளாதார விடுதலையையும் ஒருபோதும் சாதிக்கவும் முடியாது. வட மாநிலங்களில் தொடரும் சாதிவெறி அட்டூழியங்கள் இந்த உண்மைகளை மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# காஷ்மீர்: பஞ்சால் தீயணைக்க முயற்சி

இந்து, முஸ்லீம் மதத்தீவிரவாதிகள் காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு மதச்சாயம் பூசி திசை விலக்க பெரிதும் முயற்சித்து வருகிறார்கள். மத்திய காங்கிரசு அரசோ இதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருக்கிறது. முஸ்லீம் தீவிரவாதிகள் காஷ்மீர் பகுதியிலும் இந்து தீவிரவாதிகள் ஜம்மு பகுதியிலும் பிரதானமாக காலூன்றி இருந்தாலும் இருவரும் சிறு சதவிகிதத்தினரே. இவர்கள் அடிக்கடி தலையெடுத்து பிரச்சினையைக் கிளப்பி மதப் பகைமையை மக்களிடையே பரப்பி வருகிறார்கள். ஹர்கட்-உல்-அன்சார் (HUA), ஹிஸ்புல் முஜாகிதீன், ஜமாத்-இ-இஸ்லாமி, முஸ்லீம் விடுதலைப் படை (MLA), முதலான முஸ்லீம் மதத் தீவிரவாதக் குழுக்கள் பாகிஸ்தான் உளவு நிறுவனத்தின் (ISI) தூண்டுதலிலும் பாரதீய ஜனதா, சிவசேனா, ஹிந்து சுரக்ஷா சமிதி, பானுன் காஷ்மீர் போன்ற இந்துமதத் தீவிரவாத அமைப்புகள் ஆர்.எஸ்.எஸ்-ன் தூண்டுதல், இயக்கத்திலும் இப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு இடையில் உள்ள தோடா என்ற மாவட்டம் அண்மையில் மதக்கலவரத்தின் மையமாகியுள்ளது. முஸ்லீம்கள் 58 சதவிகிதமும் இந்துக்கள் 42 சதவிகிதமும் வாழும் இப்பகுதியில் இரு மதத் தீவிரவாதிகளும் தங்கள் பலத்தை பரிசோதிக்க, மதப் பகைமையை வளர்த்து ஆதாயம் அடைய முனைகின்றன. கடந்த மே மாதம் தொடக்கத்தில் நடந்த கலவரத்தில் இரு மதத்தையும் சேர்ந்த இளைஞர்கள் மூவர் பலியாகினர். மே 30-ந் தேதி பா.ஜ.க. மாவட்டத் துணைத் தலைவர் சுவாமி ராஜ் கட்டல், பதேர்வா பகுதியில் எதிரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜூன் 7-ந் தேதி பா.ஜ.க.வின் இன்னொரு தலைவர் ருசிர் குமார் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதே நாளில் 9 முஸ்லீம் குடும்பங்கள் தாக்கப்பட்டன; இவர்களின் வீடுகளை தரைமட்டமாக்கியதோடு குலாம் மொகம்மது என்கிற நகரசுத்தி தொழிலாளியின் 17 வயது மகனையும் ஆர்.எஸ்.எஸ்., சிவசேனா கும்பல் கொன்று போட்டது. இத்தகைய ஒவ்வொரு கொலைக்கு முன்னும் பின்னும் நடந்த மோதலில் சிலர் உயிர் விட்டனர்; ஏராளமானோர் படுகாயமடைந்தனர்; பலர் வீடு - உடமைகளை இழந்து நிர்கதியானார்கள்.

இந்திய ராணுவமோ தேடுதல், சோதனை, நடவடிக்கை என்ற பெயரில் முஸ்லீம் பகுதிகளில் வீடுவீடாகப் புகுந்து ஆண்களை எல்லாம் இழுத்துவந்து மசூதியில் வைத்து நிர்வாணமாக்கி சித்திரவதை செய்தது; பல அப்பாவிகளை கைது செய்தது. மாறாக உயிருக்குப் பயந்து வெளியேறும் பா.ஜ.க., சிவசேனா மதவெறியர்களை, அவர்களது குடும்பங்களை பாதுகாப்பாக வழியனுப்பி வைத்தது. முஸ்லீம் தீவிரவாதிகளுக்குப் பயந்து வெளியேறும் மக்களல்லாமல் இராணுவத்தின் தாக்குதல், தேடுதல் தொல்லைக்கு அஞ்சி வெளியேறும் மக்களும் இராணுவமே முஸ்லீம் தீவிரவாதிகள் மீது தான் எடுக்கும் நடவடிக்கைக்கு வசதியாக வெளியேறச் சொல்லி நிர்பந்திப்பதால் வெளியேறும் இந்து குடும்பங்களுமே அதிகம். இவர்கள் அருகேயுள்ள ஹிமாச்சல பிரதேசம் - சம்பா மாவட்டத்தில் குடியமர்ந்துள்ளனர்.

பதேர்வார் பகுதியில் மகனை இந்துவெறியர்களுக்குப் பலி கொடுத்த குலாம் மொகம்மது; தனது இடிந்த வீட்டைக் காட்டுகிறார்



பாகிஸ்தானின் கைக்கூலியாக செயல்படும் மதத்தீவிரவாத குழுக்களில் ஆப்கானைச் சேர்ந்த ஹிஸ்புல் முஜாகிதீன் குழுவின் 'கைங்கரியம்' தற்போது இப்பகுதிகளில் அதிகரித்துள்ளது. பலரை கடத்தியும் கொன்றும் வருகின்றனர். அரசு பணி நிலையங்களில் வேலை செய்யும் மேற்கத்திய நாட்டினர் மற்றும் சுற்றுலாப் பயணிகளை கடத்தி சென்றுள்ளனர். சாலை போடும் இஞ்சினியர் போன்ற அரசு அதிகாரிகளை கொன்றொழித்தது இக்கும்பல். பாகிஸ்தானையும் இந்தியாவையும் எதிர்க்கிற ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியுடனும் (JKLF) மோதி வருகின்றனர்; சிலரை கொன்றுள்ளனர்; அண்மையில் விடுதலை செய்யப்பட்ட ஜ.கா.வி.மு. தலைவர் யாசின் மாலிக் என்பவரை இருமுறை கொலை செய்ய முயன்றனர். பாக், இந்திய அரசுக்கு எதிராக நடுநிலைமை வகிப்பவர் மதக்குருவானாலும் விட்டு வைப்பதில்லை. தம்மை விமர்சித்தார் என்பதற்காக தெற்கு காஷ்மீரின் மதக்குருவான (மீர்வைஸ் என்றழைப்பர்) குவாசி நிஸார் என்பவரையும் இத்தீவிரவாதக் குழு படுகொலை செய்தது. இந்திய ராணுவத்திற்கு அடுத்த நிலையில் இப்படி முஸ்லீம் தீவிரவாதிகளின் அட்டூழியங்கள் ஜம்மு காஷ்மீர் பகுதியில் தாண்டவமாடுவது உண்மைதான். ஆனால் இவர்கள் தோடா பகுதியில் பா.ஜ.க. தலைவர்களை சுட்டுக் கொன்றதற்கு காரணம் இல்லாமல் இல்லை.

மதவெறியைத் தூண்டும் பேச்சுக்களாலும் முஸ்லீம்களை கீழ்த்தரமாக தாக்கிப் பேசியதாலுமே பா.ஜ.க.வினர் கொல்லப்பட்டுள்ளனர். முஸ்லீம் தீவிரவாதிகள் மசூதிகளையும், இந்து வகுப்புவாதிகள் கோயில்களையும் ஆக்கிரமித்துக் கொண்டு செயல்படுகிறார்கள். மதத்தினரைத் தாக்கும் வெறியூட்டுகிற பேச்சை நிறுத்தினாலே போதும் கொலைகள் தவிர்க்கப்படும் என்று கூறுவது இந்துக்களிடமும் நன்மதிப்பைப் பெற்ற மதச்சார்பின்மை சிந்தனையாளர், ஆசிரியர் குலாம் ரசூல் ஆசாத் என்பவராவார். இதுவல்லாமல் பாபர் மசூதி இடிப்பில் கலந்து கொண்டதோடு அதைப்பற்றி பெருமையாகப் பேசி முஸ்லீம்களை ஆத்திரப்படுத்துவது, இந்திய ராணுவத்திற்கு ஆள் காட்டும் வேலை செய்வது போன்றவற்



படிப்பகம்

www.padippakam.com

றாலும் இந்துமத வெறியர்கள் பழி வாங்கப்படுகின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் மறைத்துவிட்டு ''மதச் சார்பின்மை'' கோஷத்தோடு இந்துக்களை காப்பாற்றக்கோரி இயக்கமெடுத்து வருகிறது, இந்து மதவெறிக்கும்பல். தோடா மாவட்டத்தை கலவரப்பகுதியாக அறிவிக்ககோரியும் ராணுவத்தை மேலும் குவிக்ககோரியும் தொடர் இயக்கம் - ஆர்ப்பாட்டம் பா.ஜ.க. நடத்தி வருகிறது. பத்திரிக்கைகளும் இந்துக்களின் பாதிப்பையும் முஸ்லீம் தீவிரவாதிகளின் அட்டூழியங்களையும் மட்டுமே பெரிதாக்கி ஒத்தூதி வருகின்றன.



மதத்தீவிரவாதத்திற்கு எதிரான முழக்கத்துடன், சுட்டுக் கொல்லப்பட்ட மதக்குரு குவாசி நிஸாரின் சவ ஊர்வலம் (உள்ளே நிஸார்)

பஞ்சாபைப் போல காஷ்மீர் பிரச்சினைக்கும் அரசியல் தீர்வு கண்டுவிடுவதாக பசப்பிக் கொண்டும் மாயையை பரப்பிக் கொண்டும் உள்ளது, காங்கிரசு கும்பல். இதிலும் தேர்தல் நடத்தலாம் என எஸ்.பி.சவானும் நடத்தக்கூடாது என்று ராஜேஷ் பைலட்டும் வேறு மோதிக் கொண்டனர். காஷ்மீர் பிரச்சினை பஞ்சாபைக் காட்டிலும் வித்தியாசமானது; நிர்வாக சீர்திருத்தம், 'தீவிரவாதிகள்' மீதான முறையான நடவடிக்கை, பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்று கூறும் ராஜேஷ் பைலட்டின் கருத்துதான் விவேகமானது என்றே பத்திரிக்கைகளும், எதிர்கட்சிகளும் வழிமொழிகின்றன. ஆனால் அமைச்சர்கள் மாறிமாறி பயணம் சென்று சுற்றிப்பார்த்துவிட்டு அறிவித்த நிர்வாக சீர்திருத்தங்கள் அப்படியே காற்றுவாக்கில் போய் விட்டன. இன்னமும் பல கிராமங்களும் நகரங்களும் குடிநீர், மின்சாரம், மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளின்றி கிடக்கின்றன. இந்திய ராணுவம் ஆக்கிரமித்த, குவிக்கப்பட்ட பகுதிகளில் பயந்து கொண்டும் அரசின் உதவி கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பிலும் ஆதரிக்கிற கிராமத் தலைவர்களையும் மக்களையும் காட்டிதான் தமக்கு ஆதரவு - செல்வாக்கு இருப்பதாகக் கூறுகிறது காங்கிரசு கும்பல்.

பேச்சு வார்த்தையும் நடத்த முடியவில்லை. யாருடன் நடத்துவது? ஆயுதத்தை கீழே போடு என்பதால் ஜ.கா.வி. முன்னணியினர் பேச்சு வார்த்தைக்கு வர மறுக்கின்றனர். காஷ்மீரின் அனைத்துக் கட்சி ஹரியத் கூட்டமைப்பு பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருப்பதாகக் கூறி இந்திய அரசு புறக்கணிக்கிறது. காஷ்மீர் மக்களிடம் செல்வாக்குள்ள இந்த இரு அமைப்புகளும் போனால் எஞ்சியிருப்பது பரூக் அப்துல்லா, கரண்சிங், பேந்தர் கட்சியைச் சேர்ந்த பீம்சிங் போன்ற பெயர்பலகை அமைப்புத் தலைவர்களே. இவர்களைக் கொண்டு இதுவரையும் எதுவும் சாதிக்க முடியவில்லை என்பது நிரூபணமாகிவிட்டது. அதனால்தான் நீண்டகாலமாக முயற்சி செய்துவரும் ஜ.கா.வி.மு.-வினருடன் பேச்சு வார்த்தை காணும் பொருட்டே அவர்கள் மீதான அணுகுமுறையில் தளர்வைக் காட்டி மீண்டும் முயல்கிறது, இந்திய அரசு. ஜ.கா.வி.மு.-வின் முக்கியத் தலைவர்கள் இருவரை (சகீல் பக்ஷி, யாசின் மாலிக்) விடுவித்துள்ளதோடு இவர்களின் முஸ்லீம் தீவிரவாதக் குழுக்கள், பாகிஸ்தான் எதிர்ப்புக் கருத்துக்களை அழுத்தம் கொடுத்து பிரச்சாரம் செய்து விரைவில் பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு கண்டுவிடுவதாகவும் செய்தி பரப்பிக் கொண்டுள்ளது, காங்கிரசு கும்பல். இதற்கு பத்திரிக்கைகள் வால் பிடித்துச் செல்கின்றன. மேலும்'ஜ.கா.வி.மு.-வினர் இந்திய அரசு பக்கம் சாய்வதாக' செய்த பிரச்சாரத்தின் நோக்கம், முஸ்லீம் தீவிரவாதிகளை ஆத்திரம் கொள்ளச் செய்து குழு மோதல்களையும், தாக்குதல்களையும் அதிகம் தூண்டிவிடுவது; இதில் சிறிதே வெற்றியும் பெற்றுள்ளது. காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு வேண்டியது இக்கேடு கெட்ட காங்கிரசு கும்பலல்ல; காஷ்மீர் மக்கள்தான். தேசிய சுய நிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் காஷ்மீர் மக்களும், ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணி போன்ற அமைப்புகளும் இந்து, முஸ்லீம் மத வெறியர்களை தனிமைப்படுத்தி தமக்குள் ஒன்றுபட்டு இன்னும் முனைப்பாக போரிடுவதிலேயே தீர்வு அடங்கியுள்ளது. ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தமது அமைப்பில் ஊடுருவியுள்ள மதத்தீவிரவாதிகளை களையெடுத்தும் அதற்கு எதிராகவும் போராடி வருகிறது. அதேபோல் மதக்குரு குவாசி நிஸாரின் சவ ஊர்வலத்தில் காஷ்மீரின் அனைத்துக் கட்சி ஹரியத் கூட்டமைப்பின் சார்பாக கலந்து கொண்ட காஷ்மீர் மக்கள், மதத்தீவிரவாதிகளுக்கு எதிராக பிரதானமாக முழக்கமிட்டுச் சென்றதும் குறிப்பிடத்தக்கது. மேலும் அனைத்துக்கட்சி ஹரியத் கூட்டமைப்பில்இடம்பெற்றுள்ளஹூர்கட்-உல்-முஜாகிதீன், ஜிகாத்-இ-இஸ்லாமி ஆகிய மதத்தீவிரவாத அமைப்புகளை நீக்கக் கோரியும் போராடி வருகின்றனர்.

> உண்மைகளை மறைத்துவிட்டு இந்துக்களை காப்பாற்றக்கோரி இயக்கமெடுத்து வருகிறது பா.ஜ.க. பத்திரிக்கைகளும் இந்துக்களின் பாதிப்பையும் முஸ்லீம் தீவிரவாதிகளின் அட்டூழியங்களையும் மட்டுமே பெரிதாக்குகின்றன.

அதேசமயம் இன்றுவரை போராட்டத்தில் சரியாக ஊன்றி நிற்கிற ஜ.கா.வி. முன்னணியினர் போன்றவர்களும் மதச் சார்பின்மை பற்றாளர்களும் காஷ்மீர் பகுதியிலேயே செல்வாக்குடன் உள்ளனர். ஜம்முவில் பலவீனமாகவே உள்ளனர். போராளிகள் ஜம்முவில் இந்துக்களிடையேயும் கவனம் செலுத்தி காஷ்மீர் மக்களின் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை பாதுகாத்து இயக்கத்தை தொடராவிடில் ஜம்முவில் ஆர்.எஸ்.எஸ். கும்பல்இதை சாதகமாக்கிக் கொண்டு வளர்வதற்கான வாய்ப்பே அதிகம் உள்ளது. ஏனெனில் ஜம்முவில்இந்து வர்த்தக குடும்பங்களின் மூலம் காலூன்றிய இந்துவெறிக் கும்பல், முஸ்லீம் மதவெறிக்குப் பலியாகும் நிராதரவான இந்துக்களை வளைத்துப் போட்டுக் கொண்டு வளர்ந்து வருவதையே பார்க்கிறோம்.


● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்



● தமிழ் தேசிய இனத்தில் அடங்குவோர் யார்? அல்லாதோர் யார்? இவர்களை எப்படிப் பிரிக்கின்றீர்கள்? எந்த அடிப்படையில்? தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களையும் (கன்னடர், மலையாளி, தெலுங்கர்) தமிழ்த் தேசிய இனத்தில் சேர்ப்பீர்களானால் அது ஏன்? சேர்க்கவில்லை எனில் அவர்களின் நிலை என்ன? தமிழ் நாட்டில் தமிழை மட்டும் தாய்மொழியாகக் கொண்டவர்கள் எத்தனை பேர் பிறமொழி பேசுவோர் (எந்தெந்த மொழியில்) எத்தனை பேர்? தமிழினம் பல இடங்களில் நசுக்கப்படும் போது தமிழ் நாட்டில் அதற்கு எதிர்ப்போ ஏன் அந்தப் பிரச்சினைகளில் சாதாரண ஆர்வமோ காட்டாத நிலைக்கு பிற மொழி பேசுவோர் அதிகமாக நம்மிடையே கலந்திருப்பது தான் காரணம் என்னும் வாதம் சரிதானா? இப்பிரச்சினையில் தமிழ் தேசிய இனம் உருவாக தமிழர்களின் உணர்வைப் பாதிக்காமல் மார்க்சிய லெனினிய அடிப்படையில் அமையும் உங்கள் தீர்வு என்ன? தமிழ் நாட்டில், பனியாக்கள், மலையாளிகள், தெலுங்கர்கள் ஆகியோரின் ஆதிக்கம் வளர்ந்து வருவதை எந்த அளவு பொருத்துக் கொள்வது?

— அ. சுப்பிரமணியன், திருப்பூர்

★ ஒன்றோடொன்று தொடர்புடையவை என்றாலும், ஒரே கடிதத்தில் கேள்விகள் பல; தமிழர்களின் உணர்வைப் பாதிக்காமல் மார்க்சிய - லெனினிய அடிப்படையில் பதில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன். தற்போதைய தமிழர்களின் உணர்வு என்ன? பார்ப்பன - பாசிச ஜெயலலிதா, அவரது முன்னோடி எம்.ஜி.ஆர் மீதான கவர்ச்சிவாத உணர்வு; கருணாநிதி. வை. கோ. முதல் வீரமணி, நெடுமாறன் வரையிலானவர்களது பிழைப்புவாத உணர்வு; இல்லையானால் சாதி. சினிமா போன்ற வேறு பிற சீரழிவு உணர்வு - பெரும்பாலான தமிழர்களிடம் உள்ள இந்த உணர்வுகளைப் பாதிக்காமல் எழுத முடியாது. தமிழினக் குழுக்கள்கூட இனவாதம், சாதீயம் போன்ற தவறான உணர்வுகளை ஏற்படுத்துவதாக உள்ளன. இந்த நிலையில் அவர்கள் உணர்வுகளை விட இக்கேள்விகளுக்கு மார்க்சிய-லெனினிய அடிப்படையை வைத்தே தீர்வுகளைப் பார்ப்பது சரியாகும்.

தமிழ் நாட்டில் 12% பேர் தெலுங்கும், 3% பேர் மலையாளமும், 3% பேர் கன்னடமும், 0.5% பேர் சௌராஷ்டிரமும் பேசுபவர்கள் இருக்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில் கன்னடமும் தமிழும் இணைந்து உருவாகிய ''படுகர்'' மொழி பேசுவோர் ஏறக்குறைய பாதி அளவுக்கு உள்ளனர். ஆக, 20% பேர் தமிழ் அல்லாத மொழி பேசுபவர்களும், 80% பேர் தமிழ் மொழி பேசுபவர்களும் உள்ளனர். கிருஷ்ண தேவராயர் காலப்படையெடுப்பைத் தொடர்ந்து நிறுவப்பட்ட நாயக்கர் ஆட்சிக் காலத்தில் தெலுங்கு பேசுவோரும், திப்புசுல்தான் படையெடுப்பைத் தொடர்ந்து நிறுவப்பட்ட நவாப்புகளின் ஆட்சிக் காலத்தில் கன்னடம், உருது பேசுவோரும், மராத்தா படையெடுப்பைத் தொடர்ந்து நிறுவப்பட்ட சரபோஜி ஆட்சிக் காலத்தில் சௌராஷ்டிரா பேசுவோரும் தமிழ் நாட்டில் குடியேறினர். அந்தக் காலங்களில் அவர்கள் தெலுங்கர், கன்னடர், சௌராஷ்டினர் என்று தேசிய இனங்களாக உருவாகி இருக்கவும் இல்லை; தமிழ்நாட்டில் வாழ்ந்த தமிழர்களும் ஒரேமொழி பேசினாலும் ஒரே தேசிய இனமாக மாறிவிட்டிருக்கவும் இல்லை. மலையாளிகள் தமிழ் நாட்டில் குடியேறிய போக்கு வேறு மாதிரியானது; இன்னமும் தொடருவது - அவர்கள் பிழைப்புக்காகவும், தொழிலுக்காகவும் குடியேறியவர்கள்.

தமிழ் தேசிய இனம் என்பது ஒரே பூர்வகுடி மரபினமோ, பழங்குடியோ கொண்டதல்ல. அதோடு பிற்காலத்தில் குடியேறிய மேற்கண்ட வேறு பிற மொழிபேசும் மக்களும் கலந்து ஒரு புதிய வார்ப்பாக உருவான சமுதாயம் ஆகும். தமிழ் தேசிய இன, மொழி, பண்பாட்டு உருவாக்கத்தில் மட்டுமல்ல, அதன் அரசியல்-பொருளாதார நலன்களுக்கும் உரிமைகளுக்கும் அம்மக்களின் பங்களிப்பும் பாத்திரமும் மறுக்க முடியாது. அவரவர் வீடுகளில், சமூகங்களுக்கிடையில் அவர்கள் தமது ''தாய் மொழி''யில்தான் பெரும்பாலும் பேசிக் கொள்கின்றனர்; என்றாலும் அவரவர் ''தாய்மொழி''யில் எழுதவும் படிக்கவும் தெரியாதவர்களாக உள்ளனர். கடந்த சில தலைமுறைகளாக அவர்கள் தமிழிலேயே எழுதியும் படித்தும் வருகிறார்கள். அடுத்தடுத்த தலைமுறையில் அவர்கள் தமது ''தாய்மொழி''யை மறந்தும் வருகின்றனர். பல ஆண்டுகால வாழ்க்கை காரணமாக தமிழ்நாட்டவர் என்கிற உளவியல் உருவாக்கம் பெற்றுவிட்டனர். சமீபகாலத்தில் குடியேறிய மலையாளிகள், மார்வாரிகள், ஒரு சில நாயுடு தரகு அதிகார முதலாளி குடும்பங்கள் தவிர மற்றவர்களது கொள்வினை, கொடுப்பினை இந்த மாநிலத்துக்குள்ளாகத்தான் நடக்கிறது. தரகு அதிகார வர்க்க முதலாளிகளாகவும் வட்டி லேவாதேவிக்காரர்களாகவும் தமிழ்நாட்டில் குடியேறியிருக்கும் சில குடும்பங்களைத் தவிர பிற வட நாட்டவர்களும் காலப்போக்கில் தமிழ்தேசிய இனத்தோடு ஒன்றுபடக் கூடியவர்கள்தாம்.

## தெலுங்கர், கன்னடர், மலையாளிகளும் தமிழ்த்தேசிய இனமா?

ஆகவே, வேற்று மொழிகளைத் ''தாய்மொழி''யாகக் கொண்டவர்களாக இருந்தாலும், தமிழ்தேசிய இன உரிமைக்கு எதிரானவர்கள் என்கிற முறையில் தரகு அதிகார வர்க்க முதலாளிகள், வட்டி லேவாதேவிக்காரர்கள் (நிலப்பிரபுத்துவத் தன்மை உடையவர்) தவிர மற்றவர்கள் அனைவரும் தமிழ் தேசிய இனத்திலேயே அடங்குவர். தமிழ்தேசிய இனத்தின் மொழி, பண்பாடு, அரசியல், பொருளாதார உரிமைகளை ஏற்பதன் அடிப்படையிலேயே அவ்வாறு தீர்மானிக்கிறோம். ஆனால் தெலுங்கர்கள் சங்கம் மூலம் கெங்குசாமி நாயுடுவும், திராவிடர் தமிழர் கழகம் மூலமாக நகைமுகனும் தமிழ்தேசிய இனத்தைப் பிளவுபடுத்தி எதிரெதிராக நிறுத்தி மோதவிட முயலுகின்றனர்; அரசியல் ஆதாயம் கருதி இவர்கள் இருவரின் முயற்சிகளையுமே பார்ப்பன-பாசிச ஜெயா கும்பல் தூண்டி விடுகிறது. ஜெயாவின் குடும்ப நண்பர் (சசிகலா) நடராஜனையும் அரசு எந்திரத்தையுமே நகைமுகனுக்குத் துணையாக ஏவிவிட்டுள்ளது. தமிழ்நாட்டு எல்லைகளில் சிறுபான்மை மொழியை இரண்டாவது அலுவல் மொழியாக ஏற்பதைக் கேடாக மாநிலத்தின் உட்புறப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி அங்கு யாருக்கும் எழுதவும் படிக்கவும் தெரியாத தெலுங்கை இரண்டாவது அலுவல் மொழியாக்கி கெங்குசாமியை ஊக்குவித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

"தமிழ்நாட்டில் பனியாக்கள், மலையாளிகள், தெலுங்கர்கள் ஆகியோரின் ஆதிக்கம்" வளர்ந்து வருவதாக கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. வீரமணி, நெடுமாறன் போன்றவர்கள் பார்ப்பன-பாசிச ஜெயலலிதாவை ஆதரித்துக் கொண்டே பார்ப்பன-பனியா ஆதிக்கத்தை எதிர்க்கக் கோரும் போதே, மலையாளிகள், தெலுங்கர்கள் ஆதிக்கம் வளர்வதாகக் கருதவில்லை அல்லது இவர்களை எதிர்ப்பதில்லை. நகைமுகன் போன்றவர்கள் மலையாளிகள், தெலுங்கர்கள் ஆதிக்கத்தை எதிர்க்கக் கோரும்போதே பார்ப்பனீய ஆதிக்கம் பற்றி பேசினாலும் பார்ப்பன பாசிச ஜெயலலிதாவின் பாதந்தாங்கிகளாக உள்ளனர். இவர்களுக்கும் இன்னும் பிற தமிழினக் குழுக்களுக்கும் ஒன்றைச் சொல்கிறோம்; கம்யூனிசப் புரட்சியாளர்கள் தேசிய சுயநிர்ணய உரிமையை ஓர் அங்கமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சியைத் திட்டமாகக் கொண்டுள்ளார்கள். தமிழினக் குழுக்கள் தன்னுரிமையைத் திட்டமாகக் கொண்டுள்ளார்கள். இவ்விரு பிரிவினருமே இங்குள்ள எல்லா வகையான சுரண்டல், ஆதிக்கத்தையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருவதைத் திட்டமாகக் கொண்டிருக்கவில்லை. ஆகவே, புதிய ஜனநாயகப் புரட்சிக்கும் தேசிய இன விடுதலைக்கும் எதிரிகளாக உள்ள தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்கள் ஆகிய ஆளும் வர்க்கங்களின் சுரண்டல், ஆதிக்கத்தை முறியடிப்பதுதான் அவர்களின் உடனடி நோக்கமாக இருக்க வேண்டும். மற்ற பிற வர்க்கச் சுரண்டல்களை எல்லாம் சாதி, மதம், இனம், மொழி என்று ஏதாவது

## தமிழ்நாட்டில் பிறமொழியினரின் ஆதிக்கத்தை பொறுத்துக்கொள்வதா?

ஒரு காரணத்தைக் கூறி ஆதிக்கமாகவும் உடனடியாக அவற்றை எதிர்த்துப் போராட வேண்டும் என்றும் கூறுவது உண்மையில் புரட்சிக்கும் விடுதலைக்கும் எதிரானவர்களுக்குத்தான் சாதகமானது. ஒரு இயக்கத்தை வெளியிலிருந்து தாக்கி அழிப்பதைவிட அதன் நட்பு சக்திகளைப் பிளவுபடுத்தி, உள் முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தி உள்ளிருந்தே சிதைத்து முறியடிப்பது எளிதானது என்பது எதிரிகளின் நடைமுறையாக உள்ளது. ஒரே பஞ்சாபி இனத்தவரை சீக்கியர்கள்-இந்துக்கள் என்றும், ஒரே காஷ்மீரி இனத்தவரை முஸ்லீம்கள்-இந்துக்கள் என்றும், ஒரே அசாமி இனத்தவரை சமவெளியினர்-பழங்குடியினர் என்றும் பிளவுபடுத்தி இனவிடுதலை இயக்கங்களைச் சீரழிப்பதில் இந்திய உளவுப் படைகளான "ரா", "ஐ.பி." அடைந்துள்ள வெற்றிகள் முக்கியமானவை. இந்த நோக்கில் கெங்குசாமி, நகைமுகன் நடவடிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும்.

ஆங்கிலேய காலனியவாதிகள் தமது கொள்ளையை விரிவுபடுத்தியபோது கடும் உழைப்பாளிகளான தமிழர்களை கர்நாடக, கேரளத் தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்களுக்கும், ஆப்பிரிக்க நாடுகளின் சுரங்கங்களுக்கும், இலங்கை, பர்மிய, மலேய தேயிலை, ரப்பர் தோட்டங்களுக்கும் கொண்டு போய் பெருமளவு குடியமர்த்தினர். அவர்களோடு கூடவே குஜராத்தி பனியாக்கள்-மார்வாரிகளைப் போலவே வட்டி, தரகுத் தொழில்களுக்காக தமிழ் செட்டியார்களும் அங்கு குடியேறினர். சமீப ஆண்டுகளில் பிழைப்புக்கும் தொழிலுக்கும் வேண்டி பல லட்சம் தமிழர்கள் வேறு மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் குடியேறி வருகின்றனர். இவர்களில் பெரும்பான்மையோர் காலப்போக்கில் அந்தந்த நாடுகளின் சமூக, பண்பாட்டு, பொருளாதார, அரசியல் வாழ்வில் இணைந்து குடிமக்களாகவும் மாறிவிட்டனர். தமிழ் நாட்டுடன் சமூக-குடும்ப உறவுகள் ஓரளவு நீடித்த போதும் இப்படிப் பலநாடுகளில் வாழும் தமிழரிடையே பொதுவாக அமைவது மொழி ஒன்றுதான். ஆகவே, உலகின் பல நாடுகளிலும் வாழும் தமிழரை ஒரே இனமாகக் கருதுவதும், பேசுவதும், நடப்பதும் தவறானதாகும். ஒரு காலத்தில் ஒரே நிலப்பரப்பில் வாழ்ந்து கடல்கோளினால் பிரிந்துபோன ஈழத் தமிழரும் இந்தியத் தமிழரும் கூட ஒரே இனமாகக் கருதமுடியாது. ஆனால் சில தமிழினவாதத் தலைவர்களும், அறிஞர்களும் உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் ஓரினத்தைச் சேர்ந்தவர்கள் என்று பேசியும், அவர்களை ஐக்கியப் படுத்துவது என்கிற பெயரில் பிழைப்புக்கான ஆதாயம் அடைந்தும் வருகின்றனர். "அனைத்து அராபியம்," "அனைத்து இசுலாமியம்" ஆகிய முழக்கங்கள் எப்படிப் பிற்போக்கானது என லெனினும், ஸ்டாலினும் கூறினரோ அதே போன்று இந்த "உலகத் தமிழினம்" என்கிற முழக்கமும் பிற்போக்கானதே. "உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் இன சுயநிர்ணய உரிமை, சிறுபான்மையின சுயாட்சி உட்பட ஜனநாயகக் குடியுரிமைக்குப் போராடும் போது அந்தந்த நாட்டு பேரினவாதிகளான ஆளும் வர்க்கங்கள் அவர்களை ஒடுக்குவதற்குத்தான் இந்த "உலகத் தமிழினம்" என்கிற முழக்கம் உதவும். "கள்ளத்தோணிகள்" என்றும் "வந்தேறிகள்", "அன்னியர்கள்" என்றும் கூறி அங்கு வாழும் தமிழர்களை ஒடுக்கவும் விரட்டவும் மேலும் வலுச்சேர்ப்பதாக இருக்கும். அந்தந்த நாடுகளின் அரசியல்-பொருளாதாரப் பிரச்சினைகள், நெருக்கடிகளை குறிப்பாக, வேலையில்லாத் திண்டாட்டம், இடநெருக்கடி போன்றவை எழும்போது பெரும்பான்மையினரது ஆத்திரம் குடியேறிய மக்களுக்கு எதிராக பிற்போக்கு ஆட்சியாளர்களால் திருப்பி விடப்படுகிறது. அங்கே உள்ள முற்போக்கு இயக்கங்கள், வலுவானவைகளாக - சரியானவைகளாக இருந்தால் அப்போக்கை எதிர்த்துப் போராடுகிறார்கள். ஐரோப்பாவில் குடியேறியுள்ள ஆசிய, ஆப்பிரிக்க மக்கள் இதைச் சந்திக்கிறார்கள் இவ்வாறு அந்தந்த நாடுகளில் உள்ள முற்போக்கு சக்திகளுடனான ஒற்றுமையும், ஆதரவுமே குடியேறிய மக்களுக்கு மிகவும் இன்றியமையாதது. உலகின் பல இடங்களில் வாழும் தமிழர் மீதான தாக்குதலுக்கு தமிழ்நாட்டில் எதிர்ப்பும் ஆக்கபூர்வமான ஆர்வமும் இல்லாமலிருப்பதற்கு பிறமொழி பேசுவோர் இங்கு அதிகமாகக் கலந்திருப்பது காரணமல்ல. 1983 ஜூலை ஈழத்தமிழர் படுகொலைக்குப் பின் மிகப் பெரும் எழுச்சி ஏற்பட்டதை அது தடுத்திடவில்லை. அத்தகைய எழுச்சிநிலை மாறிப்போனதற்கு இங்குள்ள பிழைப்புவாத அரசியல் தலைமை, ஈழப் போராளிக் குழுக்களின் திசை விலகலும் - சீரழிவும், பார்ப்பன - பாசிச ஆளும் கும்பலின் திட்டமிட்ட எதிர்ப்பியக்கம் ஆகியவையே காரணமாகும். வேறுபிற நாடுளில் குடியேறியுள்ள தமிழர்களும் அனைத்து ஜனநாயக குடியுரிமையுடன் நடத்தப்பட வேண்டும் என்று நாம் கோருவதும் போராடுவதும் சரியானது, அவசியமானதுதான்; ஆனால் அதற்கு ஈடாகவோ, கைமாறாகவோ தமிழ் நாட்டில் குடியேறியுள்ள பிறமொழி பேசுவோரை உள்வாங்கி, ஒன்றிணைந்து ஜனநாயகப் பண்புகளோடும் நாம் நடத்தவில்லை. ஆனால் அப்படி நாம் கருதுவதும், தமிழர்கள் மட்டும் "இளிச்சவாயர்களா" என்று பேசுவதும் எழுதுவதும் நம்மை நாமே களங்கப்படுத்திக் கொள்வதாகும்; நமது ஜனநாயகப் பண்புகளை இழிவுபடுத்திக் கொள்வதாகும்.

முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி

**கீழைக்காற்று**

**நூல் வெளியீட்டகம், விற்பனையகம்**

10, ஔலியா சாகிப் தெரு, எல்லீசு சாலை, சென்னை-2.

நூல்கள், ஒலி நாடாக்கள், பத்திரிக்கைகள் கிடைக்கும்.

"புதிய ஜனநாயகம்" இதழ்களின் 8 வருடத் தொகுப்பு கிடைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com



## 'கார்கிலு''க்கு எதிராக போர்க்கொடி

அமெரிக்காவின் தேசங்கடந்த தொழிற்கழகமான 'கார்கில்' நிறுவனத்தின் பிரதிநிதிகளான ரிச்சி, ஹென்ரி, வினய்கலிய்யா ஆகிய மூவரும் குஜராத்தியிலுள்ள புஜ் விமான நிலையத்தில் வந்திறங்கிய போது, அவர்களுக்கு அங்கே நூதனமான வரவேற்பு காத்திருந்தது. நூற்றுக்கணக்கான உப்பளத் தொழிலாளர்களும் சிறுவீத உற்பத்தியாளர்களும் ''கார்கில் நிறுவனமே, இந்தியாவை விட்டு வெளியேறு!'' என்று முழங்கியபடியே, அவர்களைக் ''கெரோ'' செய்து விரட்டியடித்தனர். கடந்த ஜூன் மாதத் துவக்கத்தில் வெற்றிகரமாக நடந்த இப்போராட்டத்தை அடுத்து, கண்ட்லா துறைமுகத் தொழிலாளர்களும், உப்பளத் தொழிலாளர்களும் ஒன்றிணைந்து கார்கில் எதிர்ப்பு ஊர்வலங்கள் - ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

குஜராத்திலுள்ள கண்ட்லா துறைமுகத்தின் அருகே 15,000 ஏக்கர் நிலப்பரப்பில் 75 கோடி ரூபாய் முதலீடு செய்து உப்பளங்களை நிறுவி, வெளிநாடுகளுக்கு உப்பு ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் அமெரிக்காவின் கார்கில் நிறுவனம் காலூன்ற முயற்சித்து வருகிறது. இத்திட்டத்தால் கண்ட்லா பிராந்தியத்தில் ஏறத்தாழ 10 ஏக்கர் அளவுக்கு உப்பளங்களைக் கொண்டுள்ள 400-க்கும் மேற்பட்ட சிறுவீத உப்பு உற்பத்தியாளர்களும், 15,000 உப்பளத் தொழிலாளர்களும் பாதிக்கப்படுவர். இதுதவிர கண்ட்லா துறைமுகத்தில் சுமைக்கூலிகளாகப் பணியாற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழப்பர். ஏனெனில் கார்கில் நிறுவனம் இத்துறைமுகத்தில் தனியாக ஏற்றுமதி இறக்குமதி துறை அமைத்துக் கொள்ளப்போகிறது.




**அமெரிக்காவின் ''கார்கில்'' நிறுவனத்துக்கு எதிராக உப்பு தொழிலாளர்கள் நடத்தும் ஆர்ப்பாட்டம்**

ஏறத்தாழ எட்டு மாதங்களுக்கு முன்பு உப்பு ஆலை நிறுவ கார்கில் முயற்சித்தபோது, இப்பகுதி வாழ் மக்களின் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு அது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால் காங்கிரசு துரோகிகளின் ஆதரவு காரணமாக, இப்போது மீண்டும் ஆலை நிறுவும் முயற்சியில் கார்கில் ஈடுபட்டு வருகிறது. கார்கிலுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடத்தப் போவதாகச் சவடால் அடித்த எதிர்க்கட்சிகள் இப்போது முடங்கிவிட்ட நிலையில், கண்ட்லா தொழிலாளர்கள் கார்கிலுக்கு எதிராக முன்னுதாரணமிக்கப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

## பூர்வீக உரிமையைப் பறிக்க அமெரிக்காவின் புதிய சதி

உயிர் மூலக்கூறு பொறியியல் (Genetic engineering) எனும் விஞ்ஞான வளர்ச்சி, வல்லரசுகளின் கையில் சிக்கிய புதிய வகை ஆயுதமாகிவிட்டது. ஏற்கனவே பழங்கள், காய்கறிகள், தாவரங்கள் மற்றும் பறவைகள், விலங்குகளின் உயிர்மத்தை (Gene) சேகரித்து வைத்துள்ள அமெரிக்கா, உயிர் மூலக்கூறு பொறியியல் முறையில் புதிய வகை பழங்கள், காய்கறிகள், தானியங்களுக்கான விதைகளை உருவாக்கி வருகிறது. இப்புதிய வகை விதைகளைக் கொண்டு பயிரிட்டால், அதை அடுத்துள்ள நிலத்தில் பாரம்பரிய முறைப்படி பயிரிடப்பட்ட பயிர்கள் படிப்படியாக அழிந்து போகும். பாரம்பரிய முறையில் விவசாயம் செய்துவரும் ஏழை நாடுகள் இதனால் ஓட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டு, ஏகாதிபத்தியங்களிடம் நிரந்தரமாகக் கையேந்த வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதேபோல், ஏழை நாடுகளின் அரிய காட்டு விலங்குகள், பறவைகள், பூச்சிகளின் உயிர்மத்தை ஏற்கனவே ஏகாதிபத்தியங்கள் கடத்திச் சென்றுவிட்டன. இவற்றை ஆராய்ச்சி செய்து புதிய வகை உயிர்மத்தை அதில் சேர்த்து விலங்குகளின் உடலில் செலுத்தி விட்டால் அவை படிப்படியாக அழிந்து போகும். இந்தியாவின் பூர்வீக விலங்குகள், பறவைகள் என்று கூறுவதற்கு ஒன்றுமே இல்லாமல் போகும்.

பயிர்கள், விலங்குகள் மட்டுமல்ல; இப்போது மனித உயிர் மூலக்கூறுகளையும் சேகரித்து ஆராய்ச்சி செய்துவரும் அமெரிக்கா, புதிய வகை மனித உயிர்மத்துக்கு காப்புரிமை (Patent) செய்ய முயற்சித்து வருகிறது. நீண்டகாலமாக உலகெங்குமுள்ள விஞ்ஞானிகள் மனித உயிர் மூலக்கூறில் அடங்கியுள்ள டி.என்.ஏ. (DNA) எனப்படும் உயிர்ம அணுக்கூறு அமிலத்தை ஆராய்ச்சி செய்து வருகின்றனர். மனித இனத்துக்கு ஏற்படும் நோய்களைக் குணப்படுத்த உயிர்ம மருந்துகளைப் பயன்படுத்தும் நோக்கத்தோடு இத்தகைய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.

உயிர் மூலக்கூறு பொறியியல் மூலம் ஒரு மனித உயிர்மத்தைப் பிரித்து அதைப்பல படிகள் எடுத்துக் கொள்ள முடியும். இந்த உயிர்மத்தை செல்களில் (Cell) செலுத்தி பல்கிப் பெருகச் செய்ய முடியும். இதன் மூலம் புதிய வகை செல்வரிசையை உருவாக்க முடியும். இப்புதிய செல் வரிசையை உயிர்ம மருந்தாக உடலில் செலுத்தி நோயைத் தடுக்க முடியும். உதாரணமாக, மனித வளர்ச்சிக்கான ஹார்மோன், இன்சுலின் ஆகியவை இப்போது உயிர்ம மருந்தாக சந்தைக்கு வந்துவிட்டன. இவற்றில் இன்னும் தனித்தனியே ரத்தம், தோல், எலும்பு, சதை என ஒவ்வொரு பிரிவுக்குமான உயிர்ம மருந்துகளை ஆராய்ச்சி செய்து வளர்க்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, பூர்வகுடி மக்களிடமும் குறிப்பிட்ட சில வர்ண இனங்களிடமும் மனித உயிர்மப் பொருட்கள் செழுமையாக உள்ளன. இவற்றைக் களவாடி, புதிய வகை செல் வரிசையை உருவாக்கி, உயிர்ம மருந்துகளைத் தயாரிக்கும் லாபவெறியோடு அமெரிக்கா அலைகிறது. பாப்புவா நியூகினியா நாட்டு பூர்வகுடி மக்களது உயிர்மத்தைக் கொண்டு புதிய செல்வரிசையை உருவாக்கி, ரத்தப்புற்று நோய்க்கான உயிர்ம மருந்தைக் கண்டறிவதற்காக அந்த செல் வரிசைக்கு காப்புரிமை பெற அமெரிக்கா முயற்சித்து



படிப்பகம்

www.padippakam.com



வருகிறது. இதேபோல, பனாமாவைச் சேர்ந்த குயாமி இனப் பெண் ஒருவரின் செல் வரிசைக்கு காப்புரிமை பெற அமெரிக்கா முயற்சிப்பதை சுவிஸ்நாட்டு சுற்று சூழல்வாதிகள் அம்பலப்படுத்தியுள்ளனர்.

இதுதவிர மனித உயிர்ம ஆராய்ச்சிக்காக 67 இந்திய சமூகங்களை அமெரிக்கா தேர்வு செய்துள்ளது. காஷ்மீர் பண்டிதர்கள் (பார்ப்பனர்கள்), டோக்ரா, சித்பவன பார்ப்பனர், ஐயங்கார், கேரள நம்பூதிரி (பார்ப்பனர்), நாயர், வேளாளர், கம்மா நாயுடு, அகர்வால், சோலை நாயக்கர், காசி, பில் முதலானவை அவற்றில் முக்கியமானவையாகும். இவர்களிடமிருந்து நேரடியாகவோ மறைமுகமாகவோ களவாடப்படும் உயிர்மத்தைக் கொண்டு புதிய செல்வரிசையை உருவாக்கி அதற்கு அமெரிக்கா காப்புரிமை பெற்றுவிட்டால், அதன்பிறகு மிகப் பெரிய சமூக - இனச் சிக்கல் உருவாகிவிடும். ஏனெனில் உயிர் மூலக்கூறு பொறியியல் முறைப்படி, எதிர்காலத்தில் அமெரிக்காவில் ஒரு ஐயங்கார் குழந்தையை ஒரு தாழ்த்தப்பட்ட தாய் பெற்றெடுக்க முடியும். இது ஒருபுறமிருக்க, "நாங்கள் இந்நாட்டின் பூர்வ குடிகள்" என்ற எந்த இனமும் உரிமை கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்று பல்வேறு விஞ்ஞானிகள் காப்புரிமை முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

200 ஆண்டுகளுக்கு முன்பு ஏகாதிபத்தியவாதிகள் பின்தங்கிய நாடுகளின் நிலம், வளம், மொழி, கலாச்சாரத்தைப் பறித்துக் கொண்டார்கள். இப்போது, இம்மண்ணின் பூர்வ குடிகள் என்ற உரிமையையும் பறிக்கக் கிளம்பிவிட்டார்கள்.

## பாசிச ஜெயா பாதுகாப்பில் தொடரும் போலீசின் அட்டூழியம்

பார்ப்பன ஜெயா ஆட்சியில் தமிழ்நாடு போலீசு என்றாலே கொலை - கொள்ளை - கற்பழிப்பு என்பதன் மறுபெயராகிவிட்டது. இதை சென்ற ஜூன் மாதத்தில் மட்டும் நடந்த போலீசாரின் அத்துமீறல்கள் மீண்டும் ஒருமுறை மெய்ப்பித்து காட்டுவதாகவே அமைந்திருக்கின்றன.

★ மயிலாடுதுறையின் அருகாமையிலுள்ள பாலாகுடி என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாய கூலித் தொழிலாளி அப்பாபிள்ளை. இவரது மூத்த மகனான ஜம்புலிங்கத்தை திருட்டு வழக்கு சம்பந்தமாக தேடி வந்த மணமேடு போலீசார், அப்பாபிள்ளையையும் அவரது மனைவி இந்திராணியையும் மகள் ஆதிலெட்மியையும் விசாரணைக்கு காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்றுள்ளனர்.

"வெகு நாட்களாகவே தனது மகன் வீட்டிற்கே வருவதில்லை" என அப்பாபிள்ளை கதறியதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் அவர்கள் மூவரையும் பாலியல் சித்திரவதை செய்ததோடு, கொலை செய்வதாகவும் மிரட்டியுள்ளது, போலீசு. பின் வீட்டிற்கு திரும்பிய அப்பாபிள்ளை, "மீண்டும் போலீசு பிடித்துச் சென்று சித்திரவதை செய்யும்; அவமானப்படுத்தும்" என அஞ்சி, தனது மற்ற மூன்று குழந்தைகளோடு, அந்தக் குடும்பத்தின் ஆறுபேரும் தற்கொலை செய்து கொண்டுவிட்டனர்.

★ கடந்த 92-ம் ஆண்டு நவம்பர் மாதம் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள கலவை எனும் கிராமத்தைச் சேர்ந்த நடேசன் என்பவரை ஒரு வழக்கு விசயமாக அழைத்துச் சென்ற போலீசார், அவரைக் கொடூரமாக அடித்து சித்ரவதை செய்து கொன்றுபோட்டுள்ளனர். அடித்த அடி தாங்காது மனைவி எல்லம்மாளின் மடியிலேயே நடேசன் இறந்து போனார்.

பின்னர் போலீசார் எல்லம்மாளை மிரட்டியும் பணம் கொடுத்தும், மேலும் வழக்குப் பதிவு செய்யாமலும் இக்கொலையை மறைக்க எல்லா வழிகளிலும் முயன்றுள்ளனர். தற்பொழுது எல்லம்மாள் இக்கொலை தொடர்பாக விசாரணை கோரியும் நஷ்டஈடு கேட்டும் உயர்நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்த பின்னர்தான் போலீசாரின் அக்கொலை பாதகம் வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது.



போலீசுக் கொடுமைக்குப் பயந்து தற்கொலை செய்து கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரின் சவ ஊர்வலம்

★ தென்னற்காடு மாவட்டம் கோபாலபுரத்தைச் சேர்ந்த ராஜாகண்ணு என்பவரை கடந்த ஆண்டு மார்ச் மாதம் திருட்டு வழக்கு சம்பந்தமாக பிடித்துச் சென்றனர் கம்மாபுரம் போலீசார். அவரை அடித்துக் கொலை செய்ததோடு மட்டுமின்றி, பிணத்தைக் கடத்திக் கொண்டு போய் நெடுஞ்சாலையில் வீசியெறிந்தும் விட்டனர்.

இது தொடர்பாக அவரது மனைவி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். போலீசார் நீதி மன்றத்தில் "ராஜாகண்ணு தப்பியோடி விட்டதாகவும் தேடி வருவதாகவும்" கடந்த ஒரு வருடமாக புளுகி வந்தனர். மாவட்ட எஸ்.பி.யும் கொலைகாரர்களுக்கு வக்காலத்து வாங்கினார். பின்னர் வழக்கு, விசாரணை சி.பி.சி.ஐ.டி. பிரிவுக்கு மாற்றப்பட, போலீசாரின் பித்தலாட்டம் அம்பலமானது.

★ "விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அந்தோணிசாமி காவல் நிலையத்தை அடையும் முன்பே இறந்து போனார். வேனிலேயே அம்முதியவரை போலீசார் அடித்துக் கொன்று போட்டனர்" எனப் பகுதி மக்கள் ஆத்திரமுற்று உளுந்தூர் பேட்டை காவல் நிலையத்தை சென்ற மாதம் முற்றுகையிட்டுள்ளனர்.

இவ்வாறு போலீசு கருணை வைத்தால்தான் தனி மனிதன் மானத்தோடும் உயிரோடும் நடமாட முடியும் எனுமளவு போலீசின் அக்கிரமங்கள் எல்லை மீறி போய்விட்டன. ஆனால் ஜெயாவோ, "போலீசாரை யாரும் தரக்குறைவாகச் சித்தரிக்கக் கூடாது" என எச்சரிக்கிறார். அதோடு நஷ்டஈடு கொடுத்தும் விசாரணை கமிஷன் அமைத்தும் மக்களின் கோபக் கனலில் இருந்து தப்பித்து வரும் ஜெயா கும்பல், மறுபுறம் வெட்கமின்றி மூன்றாண்டு 'சாதனை'களைப் பட்டியலிட்டு தனது பாசிச காட்டாட்சியைத் தொடர்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# உள்நாட்டு நிர்வாகத்தில் ராணுவத் தலையீடு

**சிறப்பு அதிரடிப்படைகள் பயிற்சியளிக்கப்பட்டு சிவிலியன் மக்கள் மீது ஏவிவிடப்படுகிறது.**

ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத்தில், மே மாதக் கோடை வெப்பம் வறுத்தெடுத்த பின்னிரவு வேளை. இந்திய ராணுவப் பயிற்சி முகாமை ஒட்டியுள்ள அச்சேரிவாழ் மக்கள் வீட்டிற்கு வெளியே காற்றோட்டமாகப் படுத்து கண்ணயர்ந்த நேரம். திடீரென அவர்களது உறக்கத்தையும் இருளையும் கிழித்துக் கொண்டு ராணுவ ஜீப்புகள் அச்சேரிக்குள் நுழைந்தன. திமுதிமுவென இறங்கிய ராணுவக் கும்பல் கண்ணில் பட்டவர்களையெல்லாம் மிருகத்தனமான தாக்கியது. அவர்களது குடிசைகள் சூறையாடப்பட்டது. பெண்கள் - குழந்தைகள் என்றும் பாராமல் அவர்கள் மயக்கமுறும் வரை காட்டுமிராண்டித்தனமாக தமது ''பெல்ட்டு''களால் அடித்தும், கர்ப்பிணிப் பெண்ணை தூக்கிச் சென்று மான பங்கப்படுத்தியும் வெறியாட்டம் போட்டது. தகவலறிந்து தடுக்க வந்த உள்ளூர் போலீசாரையும் தாக்கியதோடு, அவர்களது வாகனங்களையும் நாசப்படுத்தி விட்டு அக்கும்பல் சென்றது.

கார்வால் துப்பாக்கிப் படைப்பிரிவு ஒன்றின் கேப்டனுடைய வாரிசுகள் சைக்கிளில் சென்றபோது கீழே விழுந்துவிட்டார்களாம். முகாமை ஒட்டியுள்ள சேரிப் பகுதியைச் சேர்ந்த இரு லம்பாடி இனச் சிறுவர்கள் குறுக்கே வந்ததுதான் இதற்குக் காரணம் என்று அவர்களை கேப்டன் வீட்டுக் காவலாளி அடித்திருக்கிறான். இதை சேரிவாழ் மக்கள் தட்டிக் கேட்டதற்காகத்தான் ராணுவக்கும்பல் இந்த வெறியாட்டத்தை நடத்தியது.

**பெருகிவரும் ராணுவ அட்டூழியங்கள்**

இது ஏதோ விதிவிலக்கான சம்பவம் அல்ல. இந்திய ராணுவப் படைகளின் வெறியாட்டமும் சிவிலியன் மக்கள் மீதான தாக்குதலும் அண்மைக் காலமாக அதிகரித்துக் கொண்டே போகின்றன.

★ கடந்த ஜனவரி மாத இறுதியில், ஐதராபாத்திலுள்ள இந்திய ராணுவப் பயிற்சி முகாமைச் சேர்ந்த சுபேதார் ஒருவரின் இரு குழந்தைகள் மர்மமான முறையில் கொல்லப்பட்டனர். இதையொட்டி போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காத ஆத்திரத்தில் 50-க்கும் மேற்பட்ட ராணுவ சிப்பாய்கள் துப்பாக்கி, கத்தி, கட்டைகளுடன் வெறியோடு கூச்சலிட்டுக் கொண்டு லாங்கர்ஹாஸ் போலீசு நிலையத்தைத் தாக்கிச் சூறையாடினார். போலீசாரை ராணுவ வண்டிகளில் கடத்திச் சென்று, சீருடைகளைக் கிழித்தெறிந்து மிருகத்தனமாகத் தாக்கி குப்பை மேட்டில் வீசியெறிந்தனர். அதன்பிறகும் வெறி அடங்காமல் போலீசு நிலையத்தின் அருகிலுள்ள முசும்மதிய தெருவுக்குள் புகுந்து, கண்ணில் பட்டவர்களையெல்லாம் துப்பாக்கிக் கட்டையால் தாக்கியதோடு, 14 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். ராணுவத்தினரை சாந்தப்படுத்த அவர்களது குடியிருப்புக்குச் சென்ற மாநில கவர்னரை ''கெரோ'' செய்து, ஆபாசமாகத் திட்டி, சட்டையைக் கிழித்து விரட்டியடித்தனர்.

★ கடந்த மே மாத இறுதியில், பெண்களைக் கேலி செய்த ராணுவத்தை எதிர்த்ததற்காக, ஒரிசாவின் தலைநகர் புவனேஸ்வரில் ராணுவப் படைகள் கடைவீதியில் புகுந்து சூறையாடியதோடு, பலரை மிருகத்தனமாக தாக்கியுள்ளன.

★ ராணுவ அதிகாரி ஒருவரை சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தி விசாரித்த 'குற்ற'த்திற்காக, அசாமிலுள்ள நவ்கோன் நகரிலுள்ள போலீசு சாவடிகளை ராணுவக் கும்பல் தீயிட்டுக் கொளுத்தியதோடு, போலீசாரையும் கடத்திச் சென்று சித்திரவதை செய்தது.

★ இதேபோல, ஆந்திராவின் செகந்திராபாத் போலீசார் ராணுவ லாரியை தடுத்து நிறுத்தி விசாரித்ததற்காக, போலீசு நிலையத்தையும் போலீசாரையும் ராணுவத்தினர் காட்டுமிராண்டித் தனமாக தாக்கியுள்ளனர்.

★ ரயில் வண்டியில் தமக்கு போதுமான இருக்கைகள் ஒதுக்கப்படாத ஆத்திரத்தில், புனா அருகிலுள்ள தலகோண் ராணுவக் கிடங்கைச் சேர்ந்த சிப்பாய்கள் ரயில் நிலைய ஊழியர்களைத் தாக்கியதோடு ரயில் நிலையத்தையே சூறையாடி தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இவை அண்மைக் காலமாக பத்திரிகைகளில் அம்பலமாகிய ஒரு சில சம்பவங்கள் தான். இன்னும் வெளியுலகுக்கே தெரியாமல் மூடிமறைக்கப்பட்ட ராணுவ அட்டூழியங்கள் எத்தனையோ? நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, ராணுவத்துக்கும் உள்நாட்டு மக்களுக்குமிடையிலான மோதல்கள் 1992-ல் 8 ஆக இருந்தது. 1993-ல் அது 9 ஆக உயர்ந்தது. 1994-ல் கடந்த 5 மாதங்களில் மட்டும் இதுவரை 11 மோதல்கள் நடந்துள்ளன. இதில் முக்கியமானது என்னவென்றால், இம் மோதல்கள் எதுவும் ''கலவரப்பகுதி''யில் நடந்தவை அல்ல. குடிமக்கள் ஆட்சி நடக்கும் 'அமைதியான' பகுதிகளிலேயே இத்தகைய அட்டூழியங்கள் நடந்துள்ளன.

இக் கொடுமைகளை நடத்திய ராணுவக் கும்பல் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறைந்த பட்சம் விசாரணை கூட நடத்தப்படவில்லை. ஐதராபாத் - லாங்கர்ஹாஸ் போலீசு நிலையத்தைச் சூறையாடிய

போராடும் மக்களை அடக்க, பயங்கரவாதப் பயிற்சி பெற்று வெறியோடு பாயும் போலீசு - ராணுவப் படைகள்





படிப்பகம்

www.padippakam.com

சம்பவத்திற்காக மட்டுமே விசாரணையை - அதுவும் ராணுவக் கோர்ட்டில் நடத்தப் போவதாக ராணுவக் கும்பல் அறிவித்துள்ளது.

**ராணுவத்தின் கையில் உள்நாட்டு நிர்வாகம்**

உள்நாட்டு நிர்வாகத்தில் தலையிட்டு, மக்கள் மீது வெறித் தாக்குதல் நடத்தும் இந்திய ராணுவம் சட்டத்திற்கு அப்பாற்பட்டதா? சட்டத்திற்கு மேலானதா? இது பற்றி சட்டம் என்ன சொல்கிறது.

இந்தியக் குற்றவியல் சட்டப்பிரிவு 130, 131, 132-ன் படி, உள்நாட்டு நிர்வாகத்துக்குத் தேவைப்படும் போது உதவி புரிவதற்காக ராணுவத்துக்கு சிறப்பு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. சட்டப்படி, உள்ளூர் நிர்வாகத்துக்கு கீழ்ப்படிந்ததாக ராணுவம் இருக்க வேண்டும், அதனிடமிருந்துதான் உத்திரவுகளைப் பெற்று செயல்படுத்த வேண்டும். இந்திய சட்டத்தின் எந்தப் பிரிவும், ராணுவம் நேரடியாக சிவில் நிர்வாகத்தைக் கையில் எடுத்துக் கொள்வதை அனுமதிக்கவில்லை. ஆனால் ஒரு பகுதியை ''கலவரப் பகுதி'' என்று அறிவித்து, ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டப்படி அவ்வாறு செய்ய முடியும்.

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் 1958-ல் முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டது. நாடாளுமன்றத்தில் அன்றைய நேரு அரசு இது தற்காலிகமான ஏற்பாடுதான் என்று உத்திரவாதம் அளித்தது. ஆனால் 36 ஆண்டுகளாக தற்காலிகமான இந்த சட்டம் நிரந்தரமாக்கப்பட்டு விட்டது. இச்சட்டம் இன்று காஷ்மீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் சர்வ சாதாரணமாக ஏவப்படுகிறது. மற்ற மாநிலங்களில் குறிப்பிட்ட சில மாவட்டங்கள் 'கலவரப் பகுதி'யாக அறிவிக்கப்பட்டு அங்கு ராணுவ ஆட்சியே நடக்கிறது.

இச்சட்டப்படி, எந்தவொரு 'கலவரப் பகுதி'யிலும் ராணுவம் யாரையும் விசாரணையின்றி கைது செய்யலாம்; விசாரிக்கலாம்; சிறையில் அடைக்கலாம்; ஏன் சுட்டுக் கொல்லவும் செய்யலாம். குடிமக்கள் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது. ஏனெனில் இச்சட்டத்தின் 6-வது பிரிவின் படி, ராணுவச் சிப்பாய்கள்தான் மக்களை விட மேலானவர்கள்; அவர்களைப் பாதுகாப்பதுதான் ராணுவத்துக்கு முக்கியமாகும்.

பிரிவினைவாதத்தையும், பயங்கரவாதத்தையும் முறியடிப்பது; சாதி - மதக் கலவரங்களை ஒடுக்குவது என்ற பெயரில் பல பகுதிகளை கலவரப் பகுதியாக அறிவிப்பதும், ராணுவத்தின் பொறுப்பில் அப்பகுதிகளை ஒப்படைப்பதும் கடந்த பத்தாண்டுகளாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. கவர்னர் ஆட்சி என்ற பெயரில் காஷ்மீரில் தொடர்ந்து ராணுவ ஆட்சியே நடக்கிறது. வடகிழக்கிந்திய மாநிலங்களில் தேர்தல்கள் நடந்து ஆட்சிகள் அமைக்கப்பட்டாலும், அவை பெயரளவிலான பொம்மையாட்சியாகவே உள்ளன. 'பிரிவினைவாத' போராளிகளை ஒடுக்குவது என்ற பெயரில் அம்மாநிலங்களில் ராணுவ ஆட்சியே நீடிக்கிறது. ஈராண்டுகளுக்கு முன்புவரை பஞ்சாபில் சீக்கிய பயங்கரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் மாநிலத்தின் பல மாவட்டங்கள் கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டு ராணுவத்தின் அட்டூழியங்களும் அக்கிரமங்களும் நீடித்தன. இது தவிர வகுப்புக் கலவரங்கள் காரணமாக குஜராத்திலும், நக்சல்பாரிகளை ஒடுக்குவது என்ற பெயரில் ஆந்திராவிலும், சீக்கியத் தீவிரவாதிகளின் ஊடுருவலை முறியடிப்பது என்ற பெயரில் உ.பி.யிலும் கடந்த ஆண்டில் கலவரப் பகுதிகள் அறிவிக்கப்பட்டு ராணுவத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது.

**அதிரடிப் படைகளும் பயங்கரவாதப் பயிற்சியும்**

அண்மைக் காலமாக சிறப்பு அதிரடி படைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. படைவீரர்கள் அதிகபட்ச தாக்குலை மேற்கொண்டு விரைவாக எதிரியை ஒழிக்க பயிற்றுவிக்கப் படுகிறார்கள். மனித உயிர்கள் எவ்வளவு பலியானாலும் அதைப் பற்றி கவலைப்படக்

## இந்தியாவின் பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளி

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடாக மார்தட்டிக் கொள்ளும் இந்தியா, சர்வதேச எதிர்ப் புரட்சி பயங்கரவாதப் பயிற்சிப் பள்ளியை கடந்த 24 ஆண்டுகளாக ரகசியமாக இயக்கி வருகிறது. கலக எதிர்ப்பு - காடுகளில் யுத்தமுறைப் பயற்சிப் பள்ளி (CIJWS) எனப்படும் இம்மையம் 1970 முதலாக மிஜோராம் மாநிலத்தில் 7 மலைகள் சூழ்ந்த காட்டுப் பகுதியான வைரெங்டீ எனுமிடத்தில் செயல்பட்டு வருகிறது. சுயநிர்ணய உரிமைக்காகப் போராடிவரும் வடகிழக்கிந்திய போராளிகளை அழித்தொழிக்க இப்பயிற்சிப் பள்ளியில் இந்திய ராணுவத்துக்கு பயிற்சி தருவது மட்டுமன்றி, பூடான், இலங்கை, ஆப்கான், வங்கதேசம், கானா, ஈராக், கென்யா, மொரீஷியஸ் நாடுகளின் ராணுவப் படைகளுக்கும் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இப்பயிற்சிப் பள்ளியில், காட்டுப்பகுதியில் போராளிகளைக் கொரில்லா முறையில் தாக்கி அழிப்பதற்கான பயிற்சியும், நகர்ப்புறக் கலகங்களை அடக்குவதற்கான பயிற்சியும் 5 வார காலத்துக்கு அளிக்கப்படுகிறது. ''மனித உயிர்கள் - சொத்துக்களுக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டாலும் கவலைப்படக் கூடாது; முதல் தாக்குதலே எதிரிகளைக் கதிகலங்கச் செய்ய வேண்டும்; சிவிலியன்களுக்கு ஏற்படும் பாதிப்பை பொருட்படுத்தக் கூடாது'' என்று படைவீரர்கள் வெறியூட்டப் படுகிறார்கள். அரசு எதிர்ப்புக் கலகங்களை அடக்குவதற்கென்றே தனிச்சிறப்பான அதிரடிப்படைகளை இப்பயிற்சிப் பள்ளியின் மூலம் இந்திய ராணுவம் கட்டியமைத்துள்ளது. சிறப்புச் சலுகைகளுடன் பொலிகாளைகளைப் போல உருவாக்கப்படும் இந்த அதிரடிப்படையினர் ஐந்தாண்டு பணிக்காலத்திற்குப் பிறகு, ''ரா'', ''ஐ.பி.'' முதலான உளவு நிறுவனங்களின் கீழ் ரகசிய கொலைக் குழுக்களாக இயக்கப்படுகிறார்கள். ராணுவம் மட்டுமல்ல; ஆயுதப்படை போலீசாருக்கும்கூட இப்படிப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. தமிழ்நாடு, ஆந்திரா, பஞ்சாப் போலீசாருக்கு இத்தகைய கொரில்லாப் போர்முறை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதோடு, சிறப்பு ''கமாண்டோ'' குழுக்களும் கட்டியமைக்கப்பட்டுள்ளன.



இப்படி பயங்கரவாதப் பயிற்சி பெற்றுத் திரும்பும் படைகள், மக்கள் மீது எப்படி பாய்ந்து குதறும் என்பதற்கு வடகிழக்கு மாநிலங்களே சாட்சியாக உள்ளன. ராணுவ அட்டூழியங்களுக்கு எதிராக மணிப்பூர் சட்டசபையிலேயே அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து கண்டனத் தீர்மானம் கொண்டுவரும் அளவுக்கு அதன் காட்டுமிராண்டித்தனம் எல்லை மீறிப் போய்விட்டது. உள்நாட்டில் அரசு பயங்கரவாதத்தை ஏவி அடக்குவது மட்டுமல்ல; இப்பயிற்சிப் பள்ளியின் மூலம் இந்தியா, சர்வதேச எதிர்ப் புரட்சி மையமாகவும் மாறிவிட்டது என்ற உண்மை இப்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

# அடக்குமுறை ராணுவத்துக்கு அளவில்லா பெருந்தீனி

சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க ஆட்சியாளர்கள் மேலும்மேலும் ராணுவத்தைச் சார்ந்திருப்பதால், ராணுவச் செலவுகள் பூதாகரமாகப் பெருகிக் கொண்டே போகின்றன. இங்கே ராணுவச் செலவுகள் என்று நாம் குறிப்பிடுவது, நவீன ஆயுதங்களை வாங்குவதால் ஏற்படும் செலவுகள் மட்டுமல்ல; ராணுவத்தின் அளவு பெருகிக் கொண்டே போவது, தனிச்சிறப்பான அதிரடிப்படைகள், சம்பளம், படிகள், பயிற்சி, சலுகைகள் என்ற வகையில் மட்டும் துணை ராணுவப் படைகளுக்கான செலவு 1983-ல் ரூ. 400 கோடியாக இருந்தது. பத்தாண்டுகளுக்குப் பிறகு 1993-ல் அது 4000 கோடியாக அதிகரித்துள்ளது. இத்தனையும் நாட்டின் ஐக்கியம் - பாதுகாப்புக்காக செலவிடப்படுவதாக அரசு நியாயப்படுத்துகிறது.

திட்டச் செலவுகள், திட்டத்திற்கு வெளியிலுள்ள திட்டமிடாச் செலவுகள் ஆகியவற்றுக்கு அப்பாற்பட்டு 1993-94-ல் மட்டும் 26,000 கோடி ரூபாய் துணை ராணுவப் படைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. மொத்த திட்டச் செலவுகளில் இது 15%-க்கும் மேலாகும். இது போலீசு மற்றும் துணை ராணுவப் படைகளுக்கான பட்ஜெட்டுக்கு வெளியே செலவிடப்பட்டுள்ள தொகையாகும். இதுதவிர காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மாநிலங்களில் போராளிகளை அழித்தொழிக்க இரகசிய கொலைக் குழுக்கள் நிறுவப்பட்டு, எந்தக் கணக்கிலும் வராமல் கோடிக் கணக்கில் செலவிடப்படுகிறது. இப்படி கோடி கோடியாய் நமது வரிப்பணம் கண்ணை மூடிக் கொண்டு வாரியிறைக்கப்பட்டாலும் நாடாளுமன்றத்தில் எந்தவொரு ஓட்டுக்கட்சியும் இதைக் கேள்வி கேட்பதில்லை.

கூடாது; சொத்துக்கள் எவ்வளவு சேதமடைந்தாலும் அதைப் பொருட்படுத்தக் கூடாது; எதிரியை அழித்தொழித்து துடைத்தெறிய வேண்டும் என்பதே நோக்கமாக இருக்க வேண்டும் என்று இச்சிறப்புப் படைகள் பயிற்றுவிக்கப் படுகின்றன. இங்கே எதிரிகள் எனப்படுவோர் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்கள் அல்ல; உள் நாட்டில் அடக்குமுறை அரசுக்கு எதிராகப் போராடும் 'கலகக்காரர்கள்'தான் எதிரிகள்.

'கலகக்காரர்'களான இந்த எதிரிகளை இனம் காண முடியாத அவர்கள் மக்களுடன் ஐக்கியமாகி விடுவதால் ராணுவத்துக்குப் பெரும் பிரச்சினையாகி விடுகிறது. எனவே, ''அப்பாவி மக்களாக இருந்தாலும் அடித்து நொறுக்கு; வீடு புகுந்து சூறையாடி பயபீதியைப் பரப்பு; 10 பேரைக் கொன்றால் அதில் ஒருவன் நிச்சயம் போராளியாக இருப்பான்; எனவே பணிய மறுப்பவர்களை முதலில் தாக்கு!'' என்றுதான் அதிரடிப் படைகளுக்கும் ராணுவத்துக்கும் அரிச்சுவடியாக கற்பிக்கப்படுகிறது. இப்படி பாசிச பயங்கரவாத முறைகளில் பயிற்றுவிக்கப் படும் ராணுவம் 'கலவர'ப் பகுதிகளில் எந்த அளவுக்கு வெறியாட்டம் போடும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இவ்வாண்டு மே மாதத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டம் 'கலவரப் பகுதி'களுக்கு மட்டுமின்றி, நாட்டின் எல்லாவித சட்ட - ஒழுங்கு பிரச்சினைகளுக்கும் பொருந்தக் கூடியதுதான் என்று ராவ் அரசு அறிவித்துள்ளது. வேறு வார்த்தைகளின் சொன்னால், சாதாரண போலீசு மேற்கொள்ளும் குற்றவியல் தடுப்பு நடவடிக்கைகளில்கட இனி பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏவப்படும். அதாவது, 'அமைதியான' பகுதிகளில் மக்கள் தமது கோரிக்கைகளுக்காகப் போராடினால், அரசின் பார்வையில் அது சட்ட - ஒழுங்கு பிரச்சனையாகி, அப்பகுதிகளில் பயங்கரவாதத் தடைச்சட்டம் ஏவப்படும். ராணுவப் படைகள் குவிக்கப்படும். சிறப்பு அதிகாரம், சலுகைகளுடன், பயங்கரவாதிகளை முறியடிப்பது என்ற பெயரில் ராணுவம் கொட்டமடிக்கவும், மக்களைச் சித்திரவதை செய்து கொல்லவும் சட்டபூர்வ அங்கீகாரம் அளிக்கப்படும். ஓட்டுக்கட்சிகள் இந்த உண்மைகளை அறிந்திருந்தபோதிலும் தமது அரசியல் ஆதாயங்களுக்காக எதிர்ப்பின்றி வாய் மூடிக்கிடக்கின்றன.

அசாமில் போராளிகளை காடு, மலைகளில் தேடி வேட்டையாடும் துணை ராணுவப்படை



### இந்துவெறி போதையில் இந்திய ராணுவம்

உள்நாட்டுப் பிரச்சினையை அன்னிய சீர்குலைவு நடவடிக்கையாக பீதியூட்டுவது, சிறுபான்மை முஸ்லீம்களை உளவாளிகளாக, தேசவிரோதிகளாகச் சித்தரித்து அடக்குவது, நாட்டின் ஐக்கியத்தைக் கட்டிக் காப்பது என்ற பெயரில் தமது வெறியாட்டத்தை நியாயப்படுத்துவது என்பதே ராணுவத்தின் செயல்பாடுகளாக உள்ளன. 1993-94-ம் ஆண்டின் ராணுவ அறிக்கை, ''இந்தியாவின் பாதுகாப்பு, ஐக்கியத்தைச் சீர்குலைக்கவும், வகுப்புக் கலவரங்களைத் தூண்டி விடவும் பாகிஸ்தானால் ஏவிவிடப்பட்ட சக்திகள் தீவிரமாக முயற்சிக்கின்றன'' என்று கூறுகிறது. ஆனால் உள்துறை அமைச்சகமோ, அப்படி என்னென்ன சக்திகள் - குழுக்கள் உள்ளன என்று இது வரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கவில்லை. இந்நிலையில் ராணுவம் மட்டும் ஏன் இப்படிக் கூற வேண்டும்? இந்து வெறியர்களின் குரலை ஏன் இப்படி எதிரொலிக்க வேண்டும்? உயிரோடு முஸ்லீம்கள் கொளுத்தப்பட்ட போதிலும், பம்பாய் - குஜராத் கலவரங்களின் போது ராணுவம் ஏன் இந்துவெறியர்களின் மீது பாயவில்லை?

காரணம், இந்திய ராணுவம் இந்துவெறி போதை தலைக்கேறி கிடப்பது தான். இந்நிலையில், இந்துவெறி பாசிசம் அதிகாரத்துக்கு வந்தால், இந்திய ராணுவம் எப்படி நடந்து கொள்ளும் என்று சொல்லத் தேவையில்லை. சிவில் நிர்வாகத்தில் பெருகிவரும் ராணுவத் தலையீடு, அதிகரித்துவரும் கலக எதிர்ப்பு அதிரடிப் படைகள்; கருப்புச் சட்டங்கள், ராணுவத்துக்கும் மக்களுக்குமிடையே அடிக்கடி நடக்கும் மோதல்கள் - இவை யாவும் இந்தியாவை பாசிசக் கொடுங்கோலாட்சி சூழ்ந்துள்ளதையே சுட்டிக் காட்டுகின்றன.

அண்டை நாடான பாகிஸ்தானில், அதிகாரச் சுவை கண்ட ராணுவம்தான் நாட்டை மறைமுகமாக ஆளுகிறது. அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சிவிலியன் ஆட்சி நிலவினாலும், ராணுவத்தின் தயவு இல்லாமல் அந்த ஆட்சி ஒரு நிமிடம்கூட அங்கு நீடிக்க முடியாது. அத்தகையதொரு அபாயகரமான நிலைமையை நோக்கி இந்திய 'ஜனநாயகம்' நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

# போதை விளையும் பூமி

**போதைப் பொருட்கள் கடத்தி வரப்படுகின்றன என அரசு கூறிவருவதற்கு மாறாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு மாஃபியா கும்பல்களால் விற்பனை செய்யப்படுகின்றன.**



மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் மென்னியைக் கவ்விப் பிடிக்கும் போதை மருந்துப் பழக்கம் இந்தியா போன்ற ஏழை மூன்றாம் உலக நாடுகளைத் தாக்கும் நாள் வெகு தொலைவில் இல்லை என நமது கலாச்சார ஏட்டில் எழுதியிருந்தோம். நான்கு வருடங்களுக்கு முன்பே எழுதப்பட்ட அக்கூற்று அன்றே எதார்த்த உண்மையாய் இருந்ததற்கான கூடுதல் ஆதாரங்கள் தற்பொழுது கிடைக்கத் துவங்கியுள்ளன. இன்று இந்தியாவில் 'அபினி' (Opium), 'ஹெராயின்' (Heroin), 'பிரௌன் ஷுகர்' (Brown Sugar), 'கஞ்சா' போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகிப் போனவர்களின் எண்ணிக்கை 30 லட்சத்துக்கும் அதிகம்.

விற்பனையை எடுத்துக் கொண்டால் இப்போதைப் பொருட்களுள் கொடி கட்டிப் பறப்பது ஹெராயின். ஒரு வருடத்தில் சுமார் 150 கோடி ரூபாய் முதல் 1500 கோடி ரூபாய் வரையிலானது இதன் உள்நாட்டு விற்பனை மதிப்பு. இதனுடன் பிற போதைப் பொருட்களின் விற்பனை, சர்வதேச சந்தைக்கு கடத்துவது என்பதனையும் சேர்த்துக் கொண்டால் வருடத்திற்கு 5,000 கோடி தொடங்கி 10,000 கோடி ரூபாயைத் தொட்டுவிடும் இந்த இரகசிய உலக வர்த்தகம். பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புடைய இப் போதைப் பொருட்கள் கடத்தி வரப்படுகின்றன என அரசு கூறி வருவதற்கு மாறாக நீண்ட காலமாகவே உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு, நெருங்கிய வலைப் பின்னலுடைய மாஃபியா கும்பல்களால் விற்பனை செய்யப்படுகின்றன என்பதுதான் இதில் கவனிக்கத் தக்க முக்கிய அம்சம்.

இன்று நமது நாட்டில் கஞ்சாவை விட, 'ஹெராயின்' மற்றும் 'பிரௌன் ஷுகர்' என்ற போதைப் பொருட்களின் பழக்கமும் விற்பனையும் தான் அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றன. இவ்விரு போதைப் பொருட்களும் அபினி எனப்படும் மற்றொரு போதைப் பொருளில் இருந்து பிரித்து எடுக்கப்படுகிறது. இந்த அபினி, 'பாப்பி' (Poppy) அல்லது அபினிச் செடி எனப்படும் வெப்பப் பிரதேசங்களில் மட்டுமே விளையும் தாவரத்தில் இருந்து பெறப்படுகிறது. போதை மருந்து மாஃபியா கும்பல்கள் இப்பயிரை சட்டவிரோதமாக பயிரிடுவதோடு, மிகப் பெரும்பாலும் அரசு ஏற்றுமதிக்காவும் மருந்து தயாரிக்கவும் இந்த 'பாப்பி' செடிகளைப் பயிரிட அனுமதி அளித்துள்ள விவசாயிகளிடமிருந்தே அபினியை அரசை விட பல மடங்கு அதிக விலை கொடுத்து வாங்கி கடத்திக் கொண்டு போய் விடுகின்றன.

இராசஸ்தான், உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் 20-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இந்த 'பாப்பி' பயிர் கிட்டத்தட்ட 14,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. அரசின் அனுமதி பெற்று 1.5 லட்சம் விவசாயிகள் இதைப் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளனர். பயிர் விளைந்து எடுக்கப்படும் அபினி முழுவதையும் மத்தியப் போதைப் பொருள் துறையிடம் தான் கொடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் பரப்பளவில் இருந்து 37 கிலோ அல்லது ஒரு விளைச்சலுக்கு 6.5 கிலோ அபினி விவசாயிகள் தராவிடில், அவர்கள் உரிமம் ரத்து செய்யப்படும் என்ற கண்காணிப்பு விதிமுறைகளும் உண்டு. இதோடு பயிர் முற்றி அறுவடை தொடங்கி முடியும் வரை போலீசு காவல் போடவும் அரசிற்கு உரிமையுண்டு.

இருப்பினும் மொத்த அபினி விளைச்சலில் பாதிக்கு மேல் கடத்தப்படுவதை அரசினால் தடுக்க முடியவில்லை. இதற்கு இரு காரணங்கள் உள்ளன: அரசு நிர்ணயித்திருக்கும் அளவை விடக் கூடுதலாக விளைவது ஒன்று; மற்றொன்று மிக முக்கியமாக கள்ளச் சந்தையில் அபினிக்கு கிடைக்கும் மிக அதிக விலை. ஒரு கிலோவிற்கு அதிகபட்சமாக ரூ. 700/- வரை அரசு தருகிறதென்றால், போதை மருந்து கடத்தல் கும்பலோ பத்து மடங்கு அதிகமாக 7000 ரூபாய் வரை தரத் தயாராகயிருக்கிறது.



அபினி பயிரிடும் ஒரு விவசாயிடமிருந்து 1 முதல் 4 கிலோ வரை அபினியைக் கள்ளத்தனமாகப் பெற்றுக் கடத்திவிடுவதாக மத்திய போதைப் பொருள் துறையின் அதிகாரிகள் கூறுகின்றனர். இப்புள்ளி விவரத்தை வைத்துக் கணக்கிடும் பொழுது, ஒரு விளைச்சலுக்கு 450 டன் அபினி இக் கும்பலால் கடத்தப்படுகிறது. பின் இதிலிருந்து 30 டன் அளவுள்ள (30,000 கிலோ) ஹெராயின் பிரித்தெடுக்கப்பட்டு விடும். இதன் விலை 1 கிலோவிற்கு 1 லட்சம் ரூபாய் முதல் 2.5 லட்சம் ரூபாய் வரை இடத்திற்குத் தகுந்தாற் போல் மாறுபடுவதோடு, முழுவதும் உள்நாட்டிலேயே விற்பனை செய்யப்பட்டும் விடுகிறது. அதிகாரிகளின் இந்தக் கணக்கோடு, கள்ளத்தனமாக பயிரிடப்படும் பகுதிகளையும் சேர்த்துக் கொண்டால் - மத்திய பிரதேசத்தில் மட்டும் 1400 ஏக்கர் பரப்பளவில் அரசின் அனுமதியின்றி அபினிச் செடி பயிரிடப்படுகிறது - உள்நாட்டு விற்பனையின் அளவு இதை விடக் கூடுதலாகும்.

மத்திய பிரதேசம் மந்த்ஸௌர் (Mandsaur) மாவட்டம் தான் இக் கடத்தலின் மையப் புள்ளியாகத் திகழ்வதோடு, சர்வதேச போதை மருந்து கடத்தலின் வழித்தடங்களில் ஒன்றாகவும் மாறிவிட்டிருக்கிறது. இங்கிருந்து இருவழிகளில் உள்நாட்டிற்குள் அபினி அல்லது ஹெராயின் கடத்தப்படுகிறது. ஒரு வழி இராசஸ்தானின் எல்லைப் பகுதியைச் சென்றடைகிறது; மற்றொன்று பம்பாய், கல்கத்தா பெரு நகரங்களோடும், பின் அங்கிருந்து தமிழ்நாடு மற்றும் பஞ்சாப் மாநிலங்களோடும் இணைக்கப்படுகிறது. ஒரு மண்ணெண்ணெய் அடுப்பும் சில இரசாயனப் பொருட்களும் இருந்தால் 'ஹெராயின்' தயாரித்து விடலாம் என்னும் நிலையில், 'பாப்பி' பயிரிடப்படும் இப்பகுதிகள் எங்கும் 'ஹெராயின்' தயாரிப்பது குடிசைத் தொழிலாகவே வளர்ந்துவிட்டிருக்கிறது. இதோடு போதை மருந்துப் பழக்கம் கிராமப்புறங்களிலும் புற்று நோயைப் போல் பரவி செல்லரிக்கச் செய்து வருகிறது.

அபினி விளையும் பகுதிகள் மட்டும்தான் என்றில்லை இன்று நாட்டின் ஒவ்வொரு நகர்ப்புற பகுதியிலும் போதைப் பொருள் புழக்கமும் விற்பனை



படிப்பகம்

www.padippakam.com



யும் எவ்வளவு தூரம் வேர்விட்டு பரவியிருக்கிறது என்பதற்கு, 89-ம் வருடம் நாட்டின் 33 நகரங்களில் அரசு எடுத்த புள்ளிவிவரங்களே போதுமானது. மேலும் இந்த ஐந்து வருடங்களுக்குள் அந்நகரங்களிலிருந்து தொடர்ச்சியாக சிறு நகர்ப்புற பகுதிகளுக்கும், அவற்றைச் சுற்றியிருக்கும் கிராமப்புற பகுதிகளுக்கும் எப்படியெல்லாம் பரவியிருக்கும் என்பதனைச் சற்று சிந்தித்துப் பார்க்க ஒருவருக்கு மற்றொருவர் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை.

★ 'மார்க்சிஸ்டு'கள் ஆளும் மே. வங்க மாநிலத்தின் தலைநகர் கல்கத்தா தான் நாட்டிலேயே போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மிக அதிக எண்ணிக்கையில் வாழுமிடம். 80-களின் தொடக்கத்தில் 68,518 ஆக இருந்த போதை மருந்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை இன்று 7 லட்சத்தைத் தொட்டுள்ளது. துறைமுகத்தை ஒட்டியுள்ள மயூர்பஞ்ச் பகுதியில் ஒரு வீடு பாக்கியில்லாதவாறு போதைப் பழக்கம் தொற்றிக் கொண்டிருக்கிறது.

★ பம்பாய் - உள்ளூர் சந்தை என்று மட்டுமின்றி சர்வதேச கடத்தலுக்கும் முக்கியமான மையம். உள்ளூர் வியாபாரத்தில் போலீசே நேரிடையாக பங்கேற்கிறது. அருகேயுள்ள சிறு நகரங்களுக்கும் வெளி மாநிலங்களுக்கும் சுமை ஏற்றிச் செல்லும் லாரிகள் மூலம் கடத்தல் தொடர்கிறது. பம்பாய் நகர தெருவோரச் சிறுவர்களில் மட்டும் போதைப் பழக்கமுள்ளவர்களின் எண்ணிக்கை 40,000-லிருந்து 3 லட்சம் வரை இருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.


★ தமிழ்நாட்டின் சென்னை - 'பிரௌன் ஷுகர்' என்ற போதைப் பொருளுக்கு புகழ் பெற்ற நகரம். இந்நகரின் பெரியமேடு எனும் பகுதியில் போலீசின் துணையோடு பெண்களே 'ஹெராயின்' விற்பது சர்வசாதாரணமானது. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதி, தென்னாற்காடு மற்றும் தர்மபுரி பகுதியின் கல்வராயன் மலைப்பகுதிகள், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய பகுதிகளில் பல கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பில் கஞ்சா பயிரிடப்படுவது தேர்ந்த தொழிலாகவே வளர்ந்து விட்டிருக்கிறது.

★ போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை நாட்டின் பிற பகுதிகளில் - தலைநகர் டில்லியில் 55,000; அமிர்தசரஸில் 12,000; கொச்சியில் 20,626; கான்பூரில் 35,000 - என்றவாறு தொடர்கிறது.

★ பீகாரின் சுரங்க நகரமான தன்பாத்தில் 'சரஸ்' என்ற போதைப் பொருள் அதிக அளவில் புழக்கத்தில் உள்ளதாகவும், வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்த மணிப்பூர் மாநில தலைநகர் இம்பாலில் 30 சதவீதத்தினரும் கோவாவில் மூன்று தாலுகா பகுதிகளும் போதை பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

''இந்தியாவில் போதை மருந்துக்கு அடிமையானவர்களுள் 50 சதவீதத்தினர் சமுதாயத்தின் அடிமட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்'' என் ஐ.நா. போதை மருந்து கண்காணிப்பு பிரிவின் அறிவிக்கை தெரிவிக்கின்றது. 16-லிருந்து 35 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள், உதிரித் தொழிலாளர்கள், வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் என்ற பிரிவினர்தான் இதில் பெரும்பான்மையோர். மேலும் நாளொன்றுக்கு 7000 நபர்கள் என்ற வீதத்தில் இந்த எண்ணிக்கை கூடியும் வருகிறது. போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை உயர்வதற்கு ஏற்றவாறு குற்றவியல் நடவடிக்கைகளும் அதிகரித்து வருகின்றன.

நாடு முழுவதும் 30 லட்சம் பேர் போதை மருந்துக்கு அடிமையாகியுள்ள நிலையில், அரசு நடத்திவரும் புனர்வாழ்வு நிலையங்களின் எண்ணிக்கை ஒரு நூறுகூட இல்லை; போதை மருந்து கடத்தல் தடுப்பு படையில் 200-க்கும் குறைவான ஊழியர்களே பணியாற்றுகின்றனர். இதிலிருந்தே போதை மருந்து



போலீசு கண்காணிப்பின் கீழ் அபினி பயிர் அறுவடை: ஆனாலும் கடத்துவதற்கு உண்டு ஆயிரம் வழிகள்

## சர்வதேச போதை மருந்து கடத்தலில் இந்தியா முக்கிய வழியானது.

70-களின் இறுதியில் ஈரான் மற்றும் ஆப்கானில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக, சர்வதேச போதை மருந்து கடத்தலில் இந்தியா முக்கிய வழித்தடமானது. ஆப்கான் - பாகிஸ்தான் - இந்தியா என்ற இந்த வழித்தடம் ''தங்கமுடி'' என தற்பொழுது அழைக்கப்படுகிறது. பாகிஸ்தானின் வடமேற்கு எல்லையோர மாகாணம் மற்றும் அதை ஒட்டி அமைந்துள்ள ஆப்கான் பகுதிகளில் விளையும் அபினியும், தயாரிக்கப்படும் ஹெராயினும் இராசஸ்தானின் எல்லையோரப் பகுதிகளின் வழியாகவும், ஜம்முவின் காதுவா, சம்பா, ஆர்.எஸ். புரா, இராசௌரி, பூஞ்ச் பகுதிகளின் வழியாகவும் கடத்தி வரப்பட்டு பஞ்சாபின் அமிர்தசரஸ், குர்தாஸ்பூர் மாவட்டங்களில் சேமிக்கப்படுகிறது. பின் பம்பாய் - டில்லி வழியாக மேற்காசியாவுக்கும், அங்கிருந்து ஐரோப்பாவுக்கும் இரகசியமாக எடுத்துச் செல்லப்படுகிறது.

மியன்மாரின் (பர்மா) போதைப் பொருள் பேரரசாகத் திகழும் ஷான் மாநிலத்தில் இருந்து மணிப்பூர், மிஜோராம், அஸ்ஸாம் மாநிலங்களின் வழியாக இந்தியாவினுள் கடத்தி வரப்படுவது மற்றொரு வழி. இதில் ''லெடோ வழித்தடம்'' மிக முக்கியமானது. அஸ்ஸாம் மாநிலத்தில் அமைந்துள்ள இந்த ''லெடோ'' பகுதி, தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கப்பட்டிருப்பதால், நாட்டின் உள்பகுதிகளுக்கு கடத்திச் செல்வதற்கு ஏதுவாக அமைகிறது.

பம்பாய் மற்றும் டில்லி விமான நிலையங்கள், கொச்சி, கோவா, பம்பாய், சௌராஷ்டிரத் துறைமுகப் பகுதிகள் - இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு போதை மருந்து கடத்தப்படும் முக்கிய மையங்கள். டில்லியை மையமாகக் கொண்டு இயங்கும் குருதேவ் சிங்கா, பம்பாயின் குருபக்ஸ் பிரியாணி, தாவூத் இப்ராகிமின் கூட்டாளியெனக் கருதப்படும் காயம் லாலா போன்றோர் சர்வதேச மாஃபியா கும்பலின் இந்தியக் கூட்டாளிகள்.



படிப்பகம்

www.padippakam.com



ஒழிப்பில் அரசின் ஈடுபாட்டைப் புரிந்து கொள்ளலாம். போலீசு மற்றும் போதை மருந்து வியாபாரிகளின் நிர்ப்பந்தம் காரணமாக புனர்வாழ்வு மையங்களில் சிகிச்சை செய்து கொள்பவர்களில் 70 சதவீதத்தினர் மீண்டும் போதைக்கு அடிமையாகி விடுகின்றனர். தெருவோர சிறுவர்கள் மத்தியில் இது 99 சதவீதமாக உள்ளது. வேலைவாய்ப்பு, ஆதரவான குடும்பம், நண்பர்கள் இல்லாத பட்சத்தில் புனர்வாழ்வு சிகிச்சையும் கானல் நீராகத்தான் அமைகிறது.

'கொடெய்ன் பாஸ்பேட்' எனும் மருந்துப் பொருள் தயாரிக்கத்தான் 'பாப்பி' செடிகளை வளர்க்க அனுமதிப்பதாகக் கூறுகிறது அரசு. ஒரு வருடத்துக்கு இம் மருந்துப் பொருள் நமது நாட்டிற்கு தேவைப்படும் அளவு 22 டன். மைய அரசு 6 டன்னை உற்பத்தி செய்துவிட்டு, மீதம் 16 டன்னை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்து வருகிறது. இந்த ஆறு டன்னையும் கூடுதலாக இறக்குமதி செய்தால், அரசு ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. ஆனால் மொத்த விளைச்சலில், 80 சதவீத அபினியை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வது தான், நாட்டில் இந்த அபினி உற்பத்தி ஏற்படுத்தும் சீரழிவை விட அரசுக்கு நியாயமாகத் தெரிகிறது.

**போதை மருந்துக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை இன்று 30 லட்சத்தைத் தொட்டுவிட்டது.**

**போதைக்கு அடிமையாகி 'எய்ட்ஸ்' நோயினால் தாக்கப்பட்டு சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள மணிப்பூர் மாநிலத்தவர்.**



கடத்தலை ஓரளவாவது தடுக்க, ''பயிரிடுவோர் அரசுக்குத் தர வேண்டிய அபினியின் அளவை உயர்த்துவது'' என்ற நிபந்தனையை விவசாயிகள் மட்டுமல்லாது, அரசியல்வாதிகளும் - குறிப்பாக காங்கிரசு மற்றும் பாரதீய ஜனதா கட்சியைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர். கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு ம.பி. மாநிலத்தைச் சேர்ந்த 14 பாராளுமன்ற உறுப்பினர்கள் விவசாயிகள் தர வேண்டிய அபினியின் அளவை குறைக்கச் சொல்லி, மன்மோகன் சிங்கை அவரது அலுவலகத்திலேயே ''கெரோ'' செய்தனர். பின் அரசும் அவர்களது நிர்ப்பந்தத்துக்கு அடிபணிந்தது.

இந்த 14 எம்.பி.களுள் இன்றைய ம.பி. முதல்வர் திக் விஜயசிங்கும் ஒருவர். முகம்மது இக்சான் என்ற கடத்தல் தலைவன் காங்கிரசு கட்சியின் சார்பாக நகரசபை தேர்தலில் நின்று வெற்றியும் பெற்றிருக்கிறான். இதோடு இவன் முன்பு ஒருமுறை போதை மருந்து கடத்தியதற்காகக் கைது செய்யப்பட்ட சமயத்தில், அவனைக் காப்பாற்றியவர் பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்த ம.பி.யின் முன்னாள் முதல்வர் சுந்தர்லால் பட்வா. போதை மருந்து கடத்தல் கும்பலுக்கு உதவுவதன் மூலம், அதன் பலனாக ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் அபினி பயிரிடும் விவசாயிகளின் ஓட்டு வங்கியையும் கைப்பற்றி விடுகிறார்கள்.

இப்படி அரசியல்வாதிகளுக்கும் - போதை மருந்து கடத்தல் கும்பலுக்கும் இடையிலான உறவும், உள்நாட்டு - வெளிநாட்டு கடத்தல் நடவடிக்கைகளும் வளர்ந்து வருகையில், அரசோ பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டுவித்த கதையாய், கடந்த மாதம் 26-ந் தேதி ''சர்வதேச போதை மருந்து ஒழிப்பு தினம்'' என்ற வருடாந்திர நாடகத்தை நடத்தி முடித்தது. வானொலி - வானொளியில் தனது கடத்தல் தடுப்பு - புனர் வாழ்வு நடவடிக்கைகளைப் பட்டியலிட்டது. ஆனால் உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த மருத்துவர் வாலஸ் மாண்டேல், ''இன்று உங்கள் நாட்டில் கோகோ-கோலா வந்து விட்டது; நாளை கோகெய்ன் போதைப் பொருளும் வந்து விடும்'' என பம்பாயில் பேட்டியளித்து எச்சரித்துள்ளார். பிறகென்ன? மத்திய அமெரிக்க நாடுகளில் நடந்ததைப் போன்று நமது நாட்டிலும் ''கோகெய்ன் யுத்தம்'' நடக்க வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

● ரஹீம்

## அறுவடையாவது அபினி மட்டுமல்ல சீரழிவும் தான்!

அபினி பயிர்த் தொழில் வெறும் விவசாயம் என்றளவோடு மட்டும் அப்பகுதிகளில் நின்றுவிடவில்லை; கடத்தலோடு, சுற்றுப்புறங்களிலுள்ள நகரங்கள், கிராமங்கள் என்ற பேதமின்றி சீரழிவை விளைவிக்கும் பேராபத்தாகவும் உள்ளது. இச் சீரழிவிற்கு எடுப்பான உதாரணம் ம.பி. மாநிலத்தின் மந்த்ஸௌர் மாவட்டத்தைச் சேர்ந்த நீமுச் என்ற சிறு நகரம்.

இவ்வூரைச் சேர்ந்த நரேந்திரன் போதைப் பொருளுக்கு அடிமையாகி சொந்த வீட்டிலேயே திருடத் தொடங்க, இதைத் தாங்காத அவரது தாயார் இறந்து விட்டார்; அவரது தந்தையோ நரேந்திரனைத் தனது மகனே அல்ல என சட்டபூர்வமாக பத்திரிகைகளின் மூலம் அறிவித்துள்ளார். இராசஸ்தானின் பவானி மந்தி கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் நீமுச் நகர பேருந்து நிலையத்தில், ''ஓரிரு போதைப் பொருள் பொட்டலம் கொடுப்பவர் யாரும் தன் மனைவியை எடுத்துச் செல்லலாம்'' என ஏலம் விட்டிருக்கிறார். சலீம் மற்றும் முகம்மது இருவரின் மனைவிகளும் குழந்தைகளோடு தங்கள் கணவன்மார்களை விட்டு விலகிச் சென்று விட்டனர். ''காசில்லாத ஆண்கள் போதைப் பொருள் வியாபாரிகளிடம் புதியவர்களை கூட்டிக் கொண்டு செல்வது; பெண்கள் என்றால் நெடுஞ்சாலையோரங்களில் விபச்சாரத்தில் ஈடுபடுவது என்பதெல்லாம் சாதாரணமாய் நடந்து வருகிறது'' என்கிறார்கள் அவ்வூர் மக்கள்.

நீமுச் என்றாலே 'ஸ்மாக்', 'ஹெராயின்' என்னுமளவு, மாலை நேரங்களில் முக்கிய தெருவோரங்களில் வியாபாரம் வெளிப்படையாகவே நடந்து வருகிறது. ஒரு லட்சம் மக்கள் வசிக்கும் அவ்வூரில் இன்று போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை மட்டும் ஐயாயிரத்தைத் தொட்டு விட்டது. ஆனாலும் அம்மாவட்டத்தில் ஒரு புனர்வாழ்வு மையத்தைக்கூட அரசு இது நாள் வரை ஏற்படுத்தித் தரவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம் வாரீர்!

பார்ப்பன எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களாகப் பிறந்தவர்கள் எவரையும் சேர்க்கவோ, தலைமைப் பொறுப்பளிக்கவோ கூடாது என்பது தி.க. வீரமணிகளது நிலைப்பாடு. இதுசரி என்றால், தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கு அம்பேத்கர் போன்ற ஒரு தாழ்த்தப்பட்டவர் தான் தலைமை ஏற்க வேண்டும்; இவர்களால்தான் இம்மக்களது பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவும், உணரவும், உறுதியாகப் போராடவும் முடியும்; மற்ற பிற மேல்சாதிக்காரர்கள் நம்பிக்கை துரோகம் செய்துவிடுவார்கள் என்று தலித் அமைப்புகள் முன்வைக்கும் வாதத்தை ஏற்கிறார்களா என்கிற அடிப்படையில் 'புதிய ஜனநாயகம்' எழுதியிருந்தது.

இந்த வாதத்துக்கு பதில் சொல்வதற்கு வக்கற்ற விடுதலை வீரமணியும், அவரது துதிபாடி அசுரனும் ஒருபுறம் வழக்கம்போல பார்ப்பன முத்திரை குத்தி வசைபாடும் முயற்சியிலும், மறுபுறம் வாதத்தைத் திசைதிருப்பும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளனர். பெரியார் பிற்படுத்தப்பட்டோர் பிரதிநிதி என்றும் அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதி என்றும் எழுதி தலைவர்களையும், இருமக்களையும் வேறுபடுத்தி அசிங்கப் படுத்திக் காட்டுகிறோம் என்றும் கூறுகின்றனர். பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்துத் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றிணைந்துவிடக் கூடாது என்பதற்காகவே பெரியார் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அம்பேத்கர் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் எதையும் செய்யவில்லை என்று கூறும் பார்ப்பன சூழ்ச்சியோடு கட்டுப்பாடாக 'புதிய ஜனநாயகம் அமைப்பு' பிரச்சாரம் செய்வதாக வீரமணியும் அசுரனும் அவதூறு எழுதுகின்றனர்.

பிற்படுத்தப்பட்ட மக்கள் என்கிற பெயரில் பார்ப்பனரல்லாத மேல்சாதி, மேட்டுக்குடி நபர்களின் நலன்களுக்காகவும் அவர்கள் மூலம் தமது சுயநலன் - பிழைப்பு வாதத்துக்காகவுமே பாடுபடும் வீரமணிகள் பிற்படுத்தப்பட்ட மக்களாலேயே நம்பிக்கைத் துரோகி, நயவஞ்சகர், இனத் துரோகி, பார்ப்பன - பாசிச ஜெயாவின் பாதந்தாங்கி என்று அடையாளங் காணப்படுகின்றனர். நாமோ பல்வேறு உள்ளூர் பிரச்சினைகளில் இருந்து கோவில் கருவறை நுழைவு, தமிழ் மக்கள் இசை விழா, இராமன் - சங்கராச்சாரிபட அவமதிப்பு-எரிப்பு, ஆர்.எஸ்.எஸ். - இந்து முன்னணி எதிர்ப்பு ஆகிய பொதுப் பிரச்சினைகள் வரை பலவற்றிலும் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட உழைக்கும் மக்களை ஐக்கியப்படுத்தி பார்ப்பன - பாசிசத்திற்கு எதிராகப் போராடி வருகிறோம். இந்த நிலையில் வீரமணிகள் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின ஐக்கியத்திற்கு நிற்பதாகவும், நாம் அவர்கள் ஒன்றிணைந்துவிடக் கூடாது என்று சூழ்ச்சியுடன் பிரச்சாரம் செய்வதாகவும் புளுகுகின்றனர்.

பெரியார் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அம்பேத்கர் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் எதையும் செய்யவில்லை என்று நாம் எப்போதும், எங்கேயும் கூறியதோ, எழுதியதோ கிடையாது. ஆனால் வீரமணியும் அசுரனும் புதிய ஜனநாயகத்தின் மீது இட்டுக்கட்டி அவதூறு செய்கின்றனர். அதேசமயம் பெரியாரும் அம்பேத்கரும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரின் பிரதிநிதிகள் - தலைவர்கள் தாம் என்று வீரமணியும் அசுரனும் சான்று எதையும் காட்டவில்லை. அதற்குப் பதிலாக அப்படி நாம் கருதாதது பார்ப்பன சூழ்ச்சி என்று வசைபாடுவதோடு தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களது ஒற்றுமையைச் சாதிப்பதற்கான கற்பனை வளமிக்க திட்டம் ஒன்றை வரைந்து காட்டுகின்றனர். அது பின்வருமாறு:

**சமுதாய ரீதியாக ஆதிக்கம் செய்யும் பார்ப்பனருக்கும் பார்ப்பனரல்லாத சாதிகளுக்கும் இடையிலான வேறுபாடு பண்பு ரீதியிலானது. பார்ப்பனரல்லாத சாதிகளிடையே உள்ள வேறுபாடு சமுதாய ரீதியில் ஒடுக்கப்பட்ட அளவு ரீதியிலான வேறுபாடு. இப்படி ஒடுக்கப்பட்ட அளவில் வேறுபாடுகள் உள்ள பார்ப்பனரல்லாத சாதிகளில் ஒவ்வொன்றும் சாதிச் சங்கங்கள் வைத்து கல்வி, வேலை வாய்ப்பு, கலாச்சாரம், மொழி உள்ளிட்ட துறைகளில் பண்பு ரீதியில் தமக்கு எதிரான பார்ப்பனியத்தையும், அதனைப் பாதுகாக்கும் பார்ப்பனர்களையும் எதிர்க்க வேண்டும். அதேசமயம் அவை தமது அன்றாட வாழ்வில் சாதி ஏணிப்படியில் தமக்கு மேலுள்ள சாதியின் (பார்ப்பனீய உள்ளடக்கம் கொண்ட) சாதி வெறிச் செயல்களை எதிர்க்க வேண்டும். சாதிச் சங்கங்களின் போராட்ட வெற்றியின் அளவுக்கு அச்சாதிகளின் உரிமைப் பாதிப்புகளும் சமூகப் பாதிப்புகளும் குறைந்து, பார்ப்பனரல்லாத சாதிகளுக்கிடையிலான வேறுபாடுகள் ஒப்பீட்டளவில் அளவு ரீதியாகக் குறையும். வெற்றிகளைப் பாதுகாக்கவும், விரிவுபடுத்தவும் பார்ப்பன ஆபத்தை எதிர்க்கும் பணி கூர்மை அடையும். அதற்கேற்ப பார்ப்பனரல்லாத சாதிச் சங்கங்களின் ஒற்றுமை முயற்சி வலிமைபெறும். இந்த நோக்கத்தில் செயல்படாவிட்டால் அச்சாதி மக்களுக்கு ஏதும் ஆக்கபூர்வமான பலன்கள் இல்லாமல் சாதிவெறியைத் தூண்டி சிலர் பிழைப்பு நடத்த மட்டுமே சாதிச் சங்கம் பயன்படும். இப்படிப்பட்ட சாதிச் சங்கங்களும் தமிழ்நாட்டில் உண்டு. மாறாக உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்த சாதிச் சங்கங்களும் உண்டு. பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்ற பொதுப் பிரச்சினையில் அவைகள் தி.க. முயற்சியில் ஓரணியில் கூடியதும் செயல்பட்டதும் உண்டு. மதுரையில் நடந்த வன்னியர் - பள்ளர் மாநாடும், ஈரோட்டில் நடந்த வன்னியர் - சக்கிலியர் மாநாடும் மேற்சொன்ன ஒற்றுமை முயற்சியின் வெளிப்பாடுகள். இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாது முற்போக்கான சாதிச் சங்கங்களை கொச்சைப்படுத்தும் பார்ப்பன சூழ்ச்சியை 'புதிய ஜனநாயகம்' செய்கிறது.** (விடுதலை 8/1/94 சுருக்கமான தொகுப்பு)

> ''ஆதிதிராவிடர்கள்'' நன்றியற்றவர்கள் என்கிற இந்த ஏச்சும், ''அவர்கள்'' - ''நாங்கள்'' என்கிற பேச்சும் பெரியார் யாருடைய பிரதிநிதியாக இருந்தார் என்பதைக் காட்டுகின்றன.

மேற்கண்ட விடுதலை வீரமணி, அசுரனின் சாதி சங்கங்களின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம் கடைகோடித்தனமான சில பித்தலாட்டங்களைக் கொண்டது.

முதலாவதாக, ''பார்ப்பனரல்லாத சாதிகள்'' என்கிற பெயரில் தாழ்த்தப்பட்ட சாதிகள் உட்பட அனைத்துச் சாதிகளையும் ஒரே வகையில் வைத்து வாதம் புரியும் பித்தலாட்டம். தாழ்த்தப்பட்ட சாதிகளை ''பார்ப்பனரல்லாதோர்'' என்கிற வகையில் வைத்து எப்போதுமே நடத்தியது கிடையாது. 1870-71 ஆம் ஆண்டு கல்வித்துறை அறிக்கையில் பிராமணர்கள், ஏனைய பிராமணர்கள் (Brahmins, other Hindus) என்றும் 1873-74-இல் பிராமணர்கள், பிராமணர்கள் அற்ற இந்துக்கள் (Brahmins, Hindus not Brahmins) குறிப்பிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1881-இல் நெல்சன் என்ற



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கிலேயர் எழுதிய மதுரை நாடு (The Madura Country) என்னும் நூலில் பிராமணர் அல்லாதார் (Non-Brahmins) என ஒரு வகைக்கு அடையாளமிட்டார். இதன் பின் 1881 மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பிராமணர், பிராமணர் அல்லாதவர், தீண்டத்தகாதோர் என்று மூன்று வகைப்படுத்துதல் இடம் பெற்றது. ஆக, பார்ப்பனர்களுக்கு கீழும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மேலும் உள்ள பல்வேறு சாதிகளை மட்டுமே ''பார்ப்பனரல்லாதோர்'' என்கிற வகை குறித்தது. 1947 இட ஒதுக்கீடு அரசு ஆணை உட்பட எல்லா நிர்வாக ஆவணங்களும் இப்படித்தான் குறிப்பிடுகின்றன. பின்னாளில் இந்த வகைப்பாடு அரசியல் - பண்பாட்டுத் தன்மை பெற்றது. சென்னை திராவிடர் சங்கம் வெளியிட்ட பிராமணர் அல்லாதோர், கடிதங்கள் (Non-Brahmins Letters) ரெட்டி, நாயுடு, வேளாளர் சாதிகளின் ஒருங்கிணைவை முதலில் குறிப்பிட்டது. இதன்பின்னர் 1916 இறுதியில் நீதிக்கட்சி தொடங்கப்பட்டு பிராமணரல்லாதோர் அறிக்கை (Non-Brahmins Manifesto) வெளியிட்டது. நீதிக்கட்சி - தி.க. வாரிசுகள் பெருமையோடு பீற்றிக் கொள்ளும் அவர்களது இட ஒதுக்கீடு சட்டமே 1950 வரை இன்னும் இருமோசடிகளைக் கொண்டது. எண்ணிக்கையில் மிகவும் கூடுதலான தாழ்த்தப்பட்டவர்களுக்கு பார்ப்பனர்களைவிடக் குறைவான இட ஒதுக்கீடே வழங்கப்பட்டது. ''பாரப்பனரல்லாதவர்'' என்கிற வகைப்பாட்டில் ரெட்டி, செட்டி, நாயுடு, வேளாளர் ஆகிய முற்பட்ட சாதிகளும் உண்மையில் பிற்படுத்தப்பட்ட பிறசாதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதாவது பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பெயரால் முற்பட்ட சாதிகள் உரிமை பெற ''பார்ப்பனரல்லாதோர்'' என்கிற மோசடி நடந்து வந்தது.

பார்ப்பனரல்லாத, தாழ்த்தப்பட்டோர் அல்லாத சாதிகளின் பல சங்கங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, ''இன்னும் இதுபோன்ற எத்தனையோ வகுப்பார்கள் சங்கங்களை ஸ்தாபித்துக் கொண்டு தங்களது குறைகளைப் போக்கிக் கொள்ளவும் அன்னியரால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் 'தங்களது சுயமரியாதைக்கும் சமத்துவத்துக்கும் தடையாயிருக்கும் சாதனங்களை விலக்கவும் முயற்சித்து வருவதைப் பார்த்து வருகிறோம்............ இவ்விதம் கஷ்டங்களில் இருந்துவரும் நமது சமூகத்தாருக்கும் நாட்டிற்கும் சுயமரியாதையும் விடுதலையும் ஏற்படவும் நமக்கென்று ஒரு தனி இயக்கம் இருந்துதான் ஆக வேண்டும், அவ்வியக்கத்தில் நாம் எல்லோரும் ஈடுபட்டு ஒற்றுமையாய் உழைக்க வேண்டும் '' (குடி அரசு 9/12/1926) என்று பெரியார் பேசினார். அப்போதே தாழ்த்தப்பட்டோர்களுக்கான அமைப்புகள் இருந்த போதும் அவற்றை இங்கு பெரியார் குறிப்பிடவில்லை. சாதிச் சங்கங்களின் கலாச்சார அம்சங்களில் ஒத்துப்போகாத அதேசமயம் இவற்றைப் பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகப் பயன்படுத்த இயலும் எனப் பெரியார் நம்பினார். எனவே அவற்றுக்கு முழுமையாக இணைந்துவிடாமல் அவற்றின் அரசியல் - பொருளாதார நலன்களைப் பிரதிபலிக்கக் கூடிய பார்ப்பனரல்லாதார் முன்னணியை (Non Brahmins Front) உருவாக்கவே விரும்பினார் எனகிறார் முனைவர் கோ. கேசவன் (சுயமரியாதை இயக்கமும் பொதுவுடைமையும் பக். 78-81)

தாழ்த்தப்பட்ட சாதிகளும் தங்களைப் ''பார்ப்பனரல்லாதார்'' என்கிற பொதுவகைப்பாடுக்குள் வைத்துக் கொள்வதை ஏற்றதே கிடையாது. ''சூத்திரன் எனக் கூறிக் கொள்ளப் பிடிக்காத பிராமணரல்லாத சாதி இந்துக்கள் தங்



களை 'திராவிடர்கள்' என்று அழைத்துக் கொண்டார்கள். 1895-இல் தங்கள் இனத்துக்கு ஒரு பெயர் சூட்டிக் கொள்ள விரும்பிய இம்மக்கள் (தாழ்த்தப்பட்டோர்) 'திராவிடர்' எனப் பெயர் மாற்றிக் கொண்ட சூத்திரர்களிடமிருந்து தாங்கள் தனிப்பட்டவர்கள் என்பதை விளக்கும் வகையில் 'ஆதி திராவிடர்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஆங்கிலேயரின் வருகையோடு ஆதிதிராவிடர் அடிமைத்தளை அறுபட ஆரம்பித்தது. இந்த மக்கள் அவர்களுக்குக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டாமா? அதைவிடுத்து சாதிவெறி தன்னலம் கொண்ட சாதி இந்து, ஓட்டிற்காக ஒரே மரபு இனம் (RACE) என்று கூறிக் கொண்டு தாழ்த்தப்பட்டோரின் உழைப்பை உறிஞ்சி, உழைப்புக்குத் தகுந்த ஊதியமும் தராத சாதி இந்துக்களுக்கு இந்த மக்கள் எப்படிக் கடமைப்பட்டவர்களாக இருக்க முடியும்?' என்று அப்போதே எம்.சி. ராஜா கேட்டுள்ளார்.

இவற்றில் இருந்து தெரிவது என்ன? ''பார்ப்பனரல்லாத சாதிகள்'' என்கிற வகைப்பாடு பார்ப்பனரல்லாதது மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவரல்லாதது மான சாதிகளைக் குறிப்பவைதாம். அவற்றிலும் ரெட்டி, செட்டி, நாயுடு, வேளாளர் ஆகிய முற்பட்டசாதிகளின் அரசியல் - பொருளாதார நலன்களை நோக்கமாகக் கொண்டதாகவே நீதிக் கட்சி இருந்தது. பெரியார் துவங்கிய இயக்கம் வேறுபிற பார்ப்பனரல்லாத சாதி இந்துக்களின் நலன்களையும் பிரதிநிதித்துவப் படுத்தியதே தவிர அது தாழ்த்தப்பட்ட மக்களுடைய இயக்கம் அல்ல. ஆனால் ''பார்ப்பனரல்லாத சாதிகள்'' என்கிற வகைப்பாடு ஏதோ தாழ்த்தப்பட்ட சாதிகளையும் உள்ளடக்கியது என்பதாக பெரியாரின் சொத்துக்களுக்கு வாரிசானவர்கள் பித்தலாட்டம் செய்கின்றனர்.

இரண்டாவதாத, தாழ்த்தப்பட்ட சாதிகளையும் உள்ளடக்கிய பார்ப்பனரல்லாத சாதிகளுக்கிடையிலான வேறுபாடு அளவு ரீதியிலானதுதான் என்றும் அதைக் களைவதற்காகவும் அச்சாதிகளுடன் பண்பு ரீதியில் வேறுபடும், பார்ப்பன எதிர்ப்பும் ஆகிய இருவகைப் போராட்டங்கள் மூலமாக பார்ப்பனரல்லாத சாதிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டு வருவதாகவும் அதில் தி.க. பங்கு கொண்டு வருவதாகவும் விடுதலை வீரமணியும் அசுரனும் செய்யும் பித்தலாட்டம்.

பிற்படுத்தப்பட்ட சாதிகள் - தாழ்த்தப்பட்ட சாதிகளின் ஒற்றுமைக்கான ''முயற்சி'' பெரியார் முதல் ராமதாசு வரை எல்லா திராவிட இயக்கத் தலைவர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஒரு முக்கால் நூற்றாண்டுகால வரலாறு கூறுகிறார்கள். ஆனால் அந்தக் காரியம் கைகூடவில்லை, முயற்சி பலிக்கவே இல்லை என்பதே முடிவாக உள்ளது. அதற்கான காரணம், அடிப்படை என்ன? ஒருபுறம், பார்ப்பனர்களின் சூழ்ச்சிதான் என்கிறார்கள். மறுபுறம், பார்ப்பனர்களைப் போல நம் மக்களிடம் சமூக - இன உணர்வு இல்லை; அறியாத மூடர்களாக, மானம் - வெட்கங்கெட்டவர்களாக தமிழர்கள் கிடக்கிறார்கள் என்று ஏசுகிறார்கள். இந்த ''ஒற்றுமை முயற்சி''யில் திராவிட இயக்கத் தலைவர்கள் மீண்டும் மீண்டும் தோல்வியுறுவதற்குக் காரணம் அவர்களது கையாலாகாத்தனம் என்றுகூட கூற முடியாது. அவர்கள் பார்ப்பனரல்லாத சாதிகள் என்கிற பெயரில் தாழ்த்தப்பட்ட சாதிகளை அடக்கி ஒடுக்கும் மேல்சாதி, மேட்டுக்குடியினரையும் உள்ளடக்கிய ஒரு ஐக்கியத்தைக் கட்டமுயல்வதுதான் காரணமாகும்.

சில நேரங்களில் பார்ப்பனரல்லாதாரே பார்ப்பனரைவிட மிகக் கொடுமைப் படுத்துகின்றனர் என்பதை ஒப்புக் கொண்டாலும், பார்ப்பனரல்லாதாரின் கொடுமைக்கும் கூட பார்ப்பனர்களைக்



படிப்பகம்

www.padippakam.com

காரணம் காட்டிக் குறை சொல்லும் போக்கே பெரியாரிடம் இருந்தது. இதன் மூலம் அப்படிக் கொடுமைப்படுத்துவதை ஏதேனும் ஓர் வகையில் நியாயப்படுத்தும் இடம் தரப்படுகிறது. ஆனால் பார்ப்பனக் கருத்தியலுக்குப் பெரிதும் ஆட்படாத வேளாளர் நிலவுடமைத் தத்துவத்தின் கீழ் சாதீயம் பேனப்பட்டதற்கும் தீண்டாமைக் கொடுமை தாண்டவமாடியதற்கும் வரலாற்றில் பல சான்றுகள் உள்ளன. தீண்டத்தகாதாரின் நலன்களைக் குறித்துப் பேசும் போதெல்லாம் அவற்றில் பார்ப்பனரல்லாதார் நலன்களே உள்ளன என்கிற உண்மையைப் பெரியாரே ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் பெரியார் தன்னை பார்ப்பனரல்லாத சாதிகளின் (தீண்டத்தகாதாரை விலக்கிய) பிரதிநிதியாகத் தன்னைச் சுருக்கிக் கொள்வது அவரது சனநாயக கலாச்சாரப் போராட்டத்தின் எல்லையைக் குறிக்கிறது. (முனைவர் கோ. கேசவன், மேற்படி நூல் பக். 89, 91)

''அரசியல் திட்டத்தால் ஆதி திராவிடருக்கு மாத்திரம் அவர்களுக்குரிய விகிதாச்சாரம் கிடைத்திருக்கிறதே ஒழிய, மற்ற திராவிட மக்களுக்கு விகிதாச்சாரம் கிடைக்கவே இல்லை. இப்படி நாங்கள் கூறுவதை ஆதிதிராவிடர்கள் தங்களுக்கு விரோதமானது எனக் கூறிக்கொள்கிறார்கள். மற்ற திராவிட மக்களுக்கு அவர்களால் (ஆதி திராவிடர்களால்) ஆக வேண்டியது ஒன்றும் இல்லை. ஆனாலும் நாம் எவ்வளவோ செய்தோம். அப்படி இருந்தும் 'பிராமணர்கள் தேவலை, சாதி, இந்துக்களால்தான் எங்களுக்குத் தொல்லை' - என்று ஆதி திராவிடர் கூறுகிறார்கள். இது நன்றியற்ற பேச்சு. அவர்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்தவர்கள் யார்? பார்ப்பனர்களா? நாங்கள் செய்த கிளர்ச்சியாலும் முயற்சியாலும் தான் இன்று அவர்கள் சமுதாயத்தில் தலையெடுக்க முடிந்தது. அவர்கள் படிப்புத்துறையில் முன்னேற வழிகாட்டியவர்கள் நாங்களே. ஆதி திராவிடர் கோயில், தெரு நுழைவுக்கு முதல்முதல் போராடியவர்கள் நாங்கள்தாம். ஆதி திராவிடர்கள் படித்தவர்களாகவும் உத்தியோகஸ்தர்களாகவும் சட்டசபை உறுப்பினர்களாகவும் மந்திரிகளாகவும் ஆனார்கள் என்றால் பார்ப்பனர்களாலா? இதற்கெல்லாம் அவர்கள் நன்றி செலுத்தவில்லை என்றாலும் நமக்கு விரோதிகளாவாவது ஆகாமல் இருக்க வேண்டாமா? (19/7/1956, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், பக். 926)

''ஆதி திராவிடர்கள்'' நன்றியற்றவர்கள் என்கிற இந்த ஏச்சும், ''அவர்கள்'' - ''நாங்கள்'' என்கிற பேச்சும் பெரியார் யாருடைய பிரதிநிதியாக இருந்தார் என்பதைக் காட்டுகின்றன. இது ஒரு பக்கம் இருக்கட்டும். ''பிராமணர்கள் தேவலை, சாதி இந்துக்களால்தான் எங்களுக்குத் தொல்லை'' என்று தாழ்த்தப்பட்ட மக்கள் எண்ணுவதற்கு என்ன காரணம்? வருணாசிரம சாதி ஆதிக்கத்தின் சித்தாந்த காரணகர்த்தாக்களாகப் பார்ப்பனர்கள் இருக்கும் அதே சமயம் பார்ப்பனரல்லாத மேல்சாதி, மேட்டுக்குடியினர் அந்த ஆதிக்கத்தை நேரடியாகக் கட்டிக்காத்து வருபவர்களாக இருக்கின்றனர். இதனால் ஆதாயம் அடைபவர்கள் பார்ப்பனர்கள் மட்டுமல்ல; அவர்களைவிடக் கூடுதலாக பார்ப்பனரல்லாத மேல் சாதி, மேட்டுக்குடிகள்தாம். எனவேதான் இவர்களுடைய கொடூரங்கள் மிகமிக அதிகமாக உள்ளன. தி.க.வினர் வாதிடுவது போல இவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடையிலான வேறுபாடு அளவு ரீதியிலானது அல்ல. இதுவும் பண்பு ரீதியிலானதுதான். அரசு சலுகைகளுக்காக உரிமை பாராட்டும் போது தாங்களும் சமுதாய ரீதியில் பிற்படுத்தப்பட்டவர்கள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள்,



சமுதாய உறவுகள் என்று வரும்போது தாங்கள் மேல்சாதிகள் என்கிற உரிமையோடு தாழ்த்தப்பட்ட சாதிகள் மீது ஆதிக்கம் செலுத்துகின்றனர். இந்த இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தி, பார்ப்பனர்களோடு மற்றபிற மேல்சாதிகளின் சமுதாய - சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடாத வரை தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்று கூறிக்கொள்ள யாருக்கும் உரிமை கிடையாது; அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் நம்பிக்கையும் பெற முடியாது. பெரியாரும் கூட அப்படிச் செய்யத் தவறிவிட்டார்.

ஆதி திராவிடப் பண்ணையார்களுக்கு திராவிட மிராசுதார்களின் தலைமையைத் தக்க வைத்துக் கொண்டே பார்ப்பனரல்லாத ஜமீன்தார்களின் கொடுரங்களை எதிர்த்து ஆதி திராவிடக் குடிகளின் பகைக் கொந்தளிப்பைக் கண்டு கொள்ளாமலும் களப் பொருத்தமற்ற முறையில் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் செய்தார். ''பிராமணாள் கபே'' எழுத்துக்களை அழிப்பதில் இருந்த நியாயமான முனைப்பு, திராவிட மிராசுதார்களின் சாணிப்பால் கொடுத்தல், சவுக்கடி அடித்தல் என்பனவற்றை தடுப்பதிலோ தனிக்குவளை, பொது இடப் பயன் மறுப்பு என்பனவற்றை எதிர்த்து கிளர்ச்சி செய்தலிலோ (ஏன் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தலிலோ) பெரியார் நியாயமான முனைப்பைக் காட்டவில்லை - என்கிற முனைவர் கோ. கேசவனின் வாதத்தை விடுதலை வீரமணியும் அசுரனும் மறுக்க முடியாது.

திராவிட இயக்க ''அண்ணா'' முதல்வராக இருந்த போதுதான் கீழத்தஞ்சை - கீழ்வெண்மணியில் கோபால கிருஷ்ண நாயுடு தலைமையில் பார்ப்பனரல்லாத சாதி நிலப்பிரபுக்கள் கூடி 44 தாழ்த்தப்பட்ட குழந்தைகள் - பெண்களை உயிரோடு கொளுத்தினர். இவ்வளவு பெரிய கொடுமையை எதிர்த்து பெரியாரோ அவரது கட்சியோ என்ன செய்தது? அவர்களது முழு ஆதரவு பெற்ற திராவிட அரசும் குற்றவாளிகளைத் தண்டிக்கவில்லை. இறுதியில் கம்யூனிசப் புரட்சியாளர்கள்தாம் அக்கொடுமைக்குப் பலி வாங்கினர். கீழ்வெண்மணி போன்ற பார்ப்பனரல்லாத மேல்சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்களை நேரடியாகவும் உடனடியாகவும் அடக்கி ஒடுக்கிய எந்தவொரு சம்பவத்திலும் பெரியாரோ அவரது வாரிசுகளோ அவர்களை எதிர்த்துப் போராடியதாகவோ, அப்படிப் போராடும்படி தாழ்த்தப்பட்ட மக்களைக் கேட்டுக் கொண்டதாகவோ வரலாறே கிடையாது. அதிகபட்சம் போனால் இப்படிப்பட்ட சம்பவங்களைப் பார்ப்பனர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள்; எனவே அவ்வாறு நடக்காமல் பார்ப்பன எதிர்ப்பில் மற்ற பிறசாதிகள் ஒன்றிணைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுவதோடு சரி.

ஆகவே, பார்ப்பனரல்லாத சாதி இந்துக்களின் அரசியல் - பொருளாதார நலன்களுக்காக பார்ப்பனர்களுக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட சாதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கான முயற்சிதான் ''பார்ப்பனரல்லாத சாதிகளின் ஒற்றுமை'' என்கிற தி.க.வின் முழக்கமே தவிர வேறொன்றும் இல்லை. சாதி சங்கங்களின் மூலம் ''பார்ப்பனரல்லாத சாதிகளின் ஒற்றுமை'' என்பதாக விடுதலை வீரமணியும் அசுரனும் முன்வைத்த திட்டத்தின் ஒரு அம்சமான ''பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்ற பொதுப் பிரச்சினை''யில்தான் அவைகளை ஓரணியில் கூட்டுவதற்கு தி.க. முயன்றதாக கூறிக் கொள்ள முடிகிறது. இன்னொரு அம்சமான ''அன்றாட வாழ்வில் சாதி ஏணிப்படியில் தமக்கு மேலுள்ள சாதியின் (பார்ப்பனீய உள்ளடக்கம் கொண்ட) சாதிவெறிச் செயல்களை எதிர்ப்ப''தற்கு தி.க. எந்தவொரு முயற்சி எடுத்ததற்கும் தி.க.வினால் சான்று காட்ட முடியவில்லை. ஆனால், தான் சொல்லும் ஒற்றுமை முயற்சியின்



படிப்பகம்

www.padippakam.com

வெளிப்பாடாக பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய இருமாநாடுகளைத்தான் பித்தலாட்டமான முறையில் சான்று காட்டுகிறது. முதலாவதாக, வன்னியர்கள் ஆதிக்க சக்தியாக இருந்து தாழ்த்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கும் வடாற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம் செங்கை மாவட்டங்களில் இத்தகைய மாநாடுகள் நடத்தப்படவில்லை. இத்தகைய எந்த முயற்சியையும் வன்னியர்கள் கடுமையாக எதிர்ப்பதுதான் காரணம்; வன்னியர் சிறுபான்மையாக வாழும் மதுரை, பெரியார் மாவட்டங்களில் பா.ம.க.வின் பலத்தைக் கூட்டிக் கொள்வதற்காகவே அம்மாநாடுகள் நடத்தப்பட்டன. அதுவும் வன்னியர் சாதி சங்கமாக இருந்து அரசியல் கட்சியாக மாறியபிறகு, பிற சாதிகளின் "ஓட்டு" - ஆதரவின்றி தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்ற நிலையில் நடத்தப்பட்டன. அதைக்கூட சகிக்காத வன்னிய சாதி சங்கம் பிளவுபட்டுப் பெரும்பான்மை ராமதாசின் தலைமைக்கு எதிராகப் போய்விட்டது. ஆகவே, சாதி சங்கங்களின் மூலம் பார்ப்பனரல்லாத சாதிகளின் ஒற்றுமை என்பது வெறும் பித்தலாட்டம்தான். ஏனென்றால் விடுதலை வீரமணியும் அசுரனும் குறிப்பிடும் சாதிச் சங்கங்கள் என்பவையே அந்தந்த சாதிகளின் சுயநலன்கள் அடிப்படையில் கட்டப்படுபவைதான்.

சாதி ஏணிப்படியில் உள்ள ஒவ்வொரு சாதியும் தமது சுயநலன்களுக்காக மட்டுமல்ல, உரிமைக்காகப் போராடினால் கூட அதன்மூலம் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமையைக் கட்டிவிட முடியாது. ஒவ்வொரு சாதியும் தனக்குக் கீழுள்ள சாதிகள் மீது செலுத்தும் ஆதிக்கத்தைக் கைவிட வேண்டும். இதைத்தான் "தாழ்த்தப்பட்ட சாதிகள் என்ன செய்ய வேண்டும்? என்று சொல்வது இருக்கட்டும் தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள்? என்பதை முதலில் பாருங்கள்" என்றார் அம்பேத்கர்.

"ஒடுக்கப்படும் ஐரிஷ் தேசிய இனம் விடுதலை அடையாமல் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் விடுதலை அடையவே முடியாது" என்றார், மார்க்ஸ். அதேபோல "பறையன் பட்டம் ஒழியாமல் சூத்திரன் பட்டம் ஒழிந்துவிடுமென்று யாரும் கருதுவீர்களேயானால், உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்கிறீர்கள் என்றுதான் சொல்வேன்" என்று பெரியார் சொன்னது உண்மைதான். ஆனால் "பறையன் பட்டம்" ஒழிவதற்குப் பெரியார் என்ன வழி சொன்னார்? "சூத்திரன்" என்கிற பெயரில் மேல்சாதிக்காரர்கள் செலுத்தும் ஆதிக்கம், கொடுமைகளை நியாயப்படுத்தவே செய்தார்.

"தீண்டாமை விலக்கு விஷயத்தில் நான் ஏதாவது சிறிதாகிலும் வேலை செய்திருப்பதாக ஏற்படுமானால் அது எங்கள் நலத்துக்குச் செய்ததாகுமேயொழிய உங்கள் நலத்திற்கென்று செய்ததாகமாட்டாது... சமூக வாழ்வில் உங்களைவிட நாங்கள் தாழ்ந்த இழிவான தன்மையில் இருக்கின்றவர்கள்..... உங்களை யாராவது கிராமவாசிகள் துன்புறுத்தினால்..... எதிர்த்து நிற்க வேண்டும். முடியாவிட்டால் வேறுப்பட்டணங்களுக்கு குடியேறி விட வேண்டும். அங்கும்....... மார்க்கமில்லாவிட்டால்....... சமத்துவம் உள்ள மதத்துக்குப் போய்விட வேண்டும். அதுவும் முடியாவிட்டால் வெளிநாடுகளுக்காகவாவது கூலிகளாய் போய் உயிரை விட வேண்டும்" (குடி அரசு 16/6/1929)

"உங்களைக் கொடுமை செய்பவர்கள் ஜவாப்தாரியல்லர். தங்களது நம்பிக்கை... மத உணர்ச்சி... பூர்வ புண்ணியம்... என்கிற சுதந்திரத்தின் பெயரில் ஒரு உரிமை பாராட்டி அம்மாதிரி செய்கின்றார்களேயொழிய வேறில்லை" (குடி அரசு 11/1/1931)

ஆக. கொடுமைக்குள்ளாகும் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படியாவது தப்பி ஓடி விட வேண்டும் என்கிறார்; அல்லது அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்று கூறினாலும் அப்படிக் கொடுமைப் படுத்துபவர்கள் அதற்குப் பொறுப்பானவர்கள் அல்ல என்றும், மதத்தின் பெயரால் நடப்பதுதான் என்றும் நியாயம் கற்பிக்கிறார். அப்படிக் கொடுமை செய்யும் சாதிகளின் பிரதிநிதியாக நின்று, தாங்கள் தாழ்த்தப்பட்ட மக்களைவிட சமூக வாழ்வில் தாழ்ந்த இழிவான தன்மையில் இருப்பதாக கூறிக் கொள்கிறார். இதற்குத் தாங்கள் சூத்திரர்கள் - வேசி மக்கள் என்று பார்ப்பனர்களால் அழைக்கப்படுவதே காரணம் என்கிறார். ஆனால்தாழ்த்தப்பட்ட சாதிகளை விட "சூத்திர சாதிகள்" சமூக வாழ்வில் தாழ்ந்த இழிவான தன்மையில் இருப்பதாகக் கூறுவது இருவகையினரது இன்றைய தகுதிநிலையைத் திரித்துச் சித்தரிப்பதாகும்.

> சாதி ஏணிப்படியில் உள்ள ஒவ்வொரு சாதியும் தமது சுயநலன்களுக்காக மட்டுமல்ல உரிமைக்காகப் போராடினால் கூட அதன்மூலம் பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் ஒற்றுமையைக் கட்டிவிட முடியாது.

"சூத்திர - தீண்டத்தகாதவர் ஒற்றுமை" முயற்சியின் விளைவுகள் குறித்து அம்பேத்கர் கூறிய கருத்து இங்கே கவனிக்கத்தக்கது. அம்முயற்சி ஏற்கனவே பார்ப்பனரல்லாத (நீதிக்) கட்சியாலும் கம்யூனிசக் கட்சியாலும் மேற்கொள்ளப்பட்டன என்று சுட்டிகாட்டும் அம்பேத்கர், "விளைவு என்னவானது? ஒற்றுமை ஏற்படாமல் போனது என்பதுதான் முடிவு. சூத்திர சாதிகளும் (அவர்ணத்தைச் சேர்ந்த) குற்ற பரம்பரை சாதிகளும் ஆதிவாசி பழங்குடிகளும் பார்ப்பனர்களிடம் இருப்பதைவிட அதிகமாக தீண்டத்தகாதவரிடம் பகைமையாக இருக்கிறார்கள். இந்து சமூக முறையின் மீது தீண்டத்தகாதார் தொடுக்கும் தாக்குதலை எதிர்த்துத் தாக்குவதில் உண்மையில் பார்ப்பனரின் போலீசுப் படையாக சூத்திரர்கள் செயல்படுகிறார்கள். இது ஒரு வித்தியாசமான விசயம். ஆனாலும் உண்மை. முந்திய அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டவாறு நிறுவப்பட்டுள்ள அமைப்பு முறையின் விதிகள், ஒழுங்கு முறைகளைத் தீண்டத்தகாதவர் ஏதாவது மீறினால் அவர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்படும் அக்கிரமங்கள் எல்லாம் சூத்திரர்களின் செய்கைகளாகவே உள்ளன.

"இந்த ஒற்றுமையை அடைய முடியாததற்கான காரணங்களை அறிவது அவ்வளவு சிரமமானதல்ல. எல்லோருக்கும் மேலே பார்ப்பான். அவனுக்குக் கீழேயும் தீண்டத்தகாதவனுக்கு மேலேயும் சூத்திரன் என்கிற அடுக்கடுக்கான ஒன்றுக்கு மேல் ஒன்றாக சமத்துவமற்ற அமைப்பில் அதைக் காண வேண்டும். இந்து சமூக அமைப்பு சமத்துவமற்ற அடிப்படையில் மட்டுமிருந்தால் அது நீண்டகாலத்துக்கு முன்பே தூக்கி எறியப்பட்டிருக்கும். ஆனால் அது அடுக்கடுக்காக ஒன்றுக்கு மேல் ஒன்றாக சமத்துவமற்ற அடிப்படையில் இருக்கிறது; இதனால் பார்ப்பானை கீழே இழுத்து வீழ்த்துவதில் ஆர்வம், அக்கறை உடைய சூத்திரன் அதேசமயம், தீண்டத்தகாதவன் தனது மட்டத்துக்கு - தகுதிக்கு உயருவதைக் காணத் தயாராக இல்லை. எனவே, சமூக அமைப்பை ஒரு பொதுவான சமநிலைப் படுத்துவதில் தீண்டத்தகாதவனோடு இணைவதைவிட தனக்குப் பார்ப்பனர்களால் ஏற்படுத்தப்படும் ஏராளமான அவமானங்களை சகித்துக் கொள்வதையே சூத்திரன் ஏற்கிறான். இதன் விளைவாய் இந்தப் போராட்டத்தில் தீண்டத்தகாதவனோடு யாருமே இணைவதில்லை. இவன் முழுக்கவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளான். தனிமைப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமல்ல, இவனது நேச சக்திகளாக இருக்க வேண்டிய வர்க்கங்களாலேயே இவன் எதிர்க்கப்படுகிறான். தீண்டாமையை அகற்றுவதற்கு இந்தத் தனிமை மேலும் ஒரு தடையாக இருக்கிறது" (டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் எழுத்துக்களும் உரைகளும், தொகுதி 5 பக். 115-116)

(தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

# நன்கொடை கொள்ளையர்களுக்கு எதிராக ஆசிரியர்கள் போராட்டம்

கோவை சி.பி.எம். (CBM) கல்லூரி ஆசிரியர், அலுவலர் போராட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளாக நடந்து வருகிறது. நூறு விழுக்காடு அரசு மானியம் பெறும் இக்கல்லூரி நிர்வாகம் மாணவர் சேர்க்கைக்கு வகைதொகையில்லாமல் நன்கொடை வசூலிப்பதற்கு எதிராக தொடங்கப்பட்ட போராட்டம் இது. நன்கொடை கொள்ளையை தொடர்வதற்கு வசதியாக பணிமூப்பில் 19-வது இடத்திலிருந்த பேரா. முத்துராஜை முதல்வராக முறையற்ற முறையில் நியமனம் செய்தது, சி.பி.எம். கல்லூரி நிர்வாகம். இவர் தன் மகனையும், வெளியாட்களையும், முன்னாள்-இன்னாள் மாணவர்கள் சிலரையும் மாணவர் சேர்க்கைப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளார். நன்கொடை பெறுவதற்கு வசதியாக, மாணவர் சேர்க்கையில் நிர்வாகத்திற்கென்று 10% இடஒதுக்கீடு இருப்பதாகத் தவறான செய்தியையும் இவர்கள் பரப்பி வருகிறார்கள். எஸ்.சி, எஸ்.டி. பிரிவு இடஒதுக்கீட்டையும் புறக்கணித்துவிட்டு தன்னிச்சையாகவே மாணவர் சேர்க்கை செய்கிறார், முதல்வர். கல்லூரிக் கல்வி ஆனணயரின் ஆணையின் படி, மூத்த பேராசிரியர் மூவர் அடங்கிய மாணவர் சேர்க்கைக் குழுவும் அமைக்காமல் மீறி செயல்படுகிறார்.

கல்லூரி முதல்வரின் நியமன முறைகேட்டையும், மாணவர் சேர்க்கை ஊழலையும் தட்டிக் கேட்டார் என்பதற்காக வணிகவியல் பேராசிரியர் முருகன் என்பவரை வேறு கல்லூரிக்கு மாற்றியது, நிர்வாகம். ஆனால் அந்த ஈரோடு வாசவி கல்லூரி நிர்வாகமும் இவரை ஏற்க மறுத்ததால் இன்று நடுத்தெருவில் நிற்கிறார். ஒரு வருடமாக சம்பளமின்றி இவரது குடும்பம் துயரத்தில் வாடுகிறது. இதே காரணத்திற்காக பொருளியல் பேரா. ஜெகன்னாதனையும் இடைநீக்கம் செய்தது, நிர்வாகம். ஆசிரியர், அலுவலர்களுக்கு 46 நாட்கள் சம்பளத்தை வெட்டி மகிழ்ந்தது. பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு மருத்துவ விடுப்புகூட அளிக்காமல் அரக்கத்தனமாக செயல்படுகிறது. குண்டர்களைக் கொண்டு போராடும் ஆசிரியர்களையும் மிரட்டி வருகிறது, நிர்வாகம்.



25-1-92 தேதி முதல் இன்று வரை ஆர்.டி.ஓ., மாவட்ட ஆட்சித்தலைவர், பெற்றோர் சங்கம் எனப் பலர் முன்னிலையில் போடப்பட்ட ஒப்பந்தமும் நடைமுறைப் படுத்தப்படாமல் உள்ளது. எனவே இவற்றை வலியுறுத்தி கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் 23-6-94 அன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டனர். இதற்கிடையில் மாணவர் சேர்க்கைக்கு இடைக்காலத் தடையும் நீதிமன்றத்தில் வாங்கியுள்ளனர்.

# கல்விக் கொள்ளைக்கு எதிர்ப்பு கோவை போலீசின் அராஜகம்

ஜூன் மாதம் பிறந்தாலே போதும் பெற்றோர்களுக்கும் ஜுரமும் பிறந்து விடுகிறது. தனியார் பள்ளி, கல்லூரி நிர்வாகத்தினர் ஈவிரக்கமற்ற கந்து வட்டிக்காரர்களைப் போல் பெற்றோர்களைக் கசக்கிப் பிழிந்து விடுகின்றனர். பாசிச ஜெயா ஆட்சிக்கு வந்த பிறகு கல்வி மேலும் காய்கறி சந்தையைப் போலாகிவிட்டது. இலவசக் கட்டாயக் கல்வி, பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்காத பெற்றோருக்கு அபராதம், சேர்ந்த பின் இடையில் நின்றாலும் அபராதம் என ஆரவாரம் செய்யும் ஜெயா அரசு; 50 மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பள்ளிகளை மூட உத்திரவிட்டுள்ளது. அரசு தொடக்கப்பள்ளிகளை ஊராட்சி ஒன்றியங்களிடம் தள்ளி விட முயல்கிறது. சூத்திரன் படிக்கக் கூடாது என பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு மனு சட்டம் போட்டான். மனுவின் கொள்ளுப்பேத்தி ஜெயாவோ, விவசாயி-தொழிலாளிப் பிள்ளைகளைப் படிக்கவிடாமல் தடுக்கிறார். காமராசர் பள்ளிக்கூடங்களை மாட்டு கொட்டகைகளாக்கிவிட்டு ஆங்கில மோகத்தை தூண்டி விட்டு மெட்ரிகுலேசன் பள்ளிகள் மூலம் தனியார் கொள்ளைக்கே வழி செய்யப் படுகிறது. இவை ராவ் கும்பல் தனியார் மயமாக்கும் புதிய பொருளாதாரக் கொள்ளையின் விளைவே ஆகும்.


மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி ஆகிய அமைப்பினர் தமிழ்நாடு முழுவதும் இதற்கெதிராகப் பிரச்சாரம் செய்து ஆர்ப்பாட்டம், மறியல், முற்றுகை என இயக்கம் எடுத்து வருகிறார்கள். கோவையில் ம.க.இ.க., மற்றும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவின் சார்பாக 22-6-94 அன்று ஜி.ஆர்.ஜி. ஆரம்பப்பள்ளி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. போலீசு அனுமதி மறுத்துவிட்டது. எனினும் மேற்படி கோரிக்கைகளை வலியுறுத்தி தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ய சென்றவர்களில் 6 பேரை போலீசு கைது செய்து மாலையில் விடுவித்தது. போலீசு நிலையத்தில் 6 பேரின் எதிர்ப்பையும் மீறியும் புகைப்படமெடுத்து வைத்துக் கொண்டதோடு அப்படி எடுக்க உரிமையுள்ளதாகவும் சட்டம் பேசியது போலீசு கும்பல். அரசியல் கைதிகளை, சிவில் உரிமை கைதிகளை இவ்வாறு புகைப்படமோ, கைரேகையோ, அங்க அடையாளங்களோ எடுக்க எந்த சட்ட அனுமதியும், விதியும் இல்லை. சாதாரண ஜனநாயக கோரிக்கைக்கான போராட்டத்திற்கு கூட அடாவடித்தனமாக அனுமதி மறுப்பதோடு சட்ட விரோதமாக கிரிமினல்களைப் போல நடத்தியுள்ளது, போலீசு.





படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ ஐரோப்பிய, அமெரிக்க மற்றும் ஜப்பான் நாடுகளைச் சேர்ந்த மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையில், 10 முதல் 15 சதவீதத்தினர் அனாதரவாகவும், பாலியல் பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டும் உள்ளனர் என 'யுனிசெப்' நிறுவனம் தெரிவித்துள்ளது. இவை காரணமாக இறந்து போகும் 2 முதல் 4 வயதுடைய குழந்தைகளின் எண்ணிக்கையில் அமெரிக்கா 2-வது இடத்திலும், முன்னாள் சோவியத் யூனியனும் ஜப்பானும் முறையே 3 மற்றும் 5-வது இடத்திலுமுள்ளன. அமெரிக்காவில் மட்டும் 20 சதவீத குழந்தைகள் அடுத்த வேளை ரொட்டி துண்டுக்கு வழியில்லாத வறுமையில் வாடுவதாகவும், ஒரு வருடத்தில் 30 லட்சம் குழந்தைகள் பாலியல் வன்முறையினால் பாதிப்படைவதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது.

★ காந்தியும் அவரது வாரிசுகளும் தாழ்த்தப்பட்ட இன மக்களை, 'அரிசன்', 'கிரிசன்' அதாவது 'கடவுளின் குழந்தைகள்' என அழைத்து பல ஆண்டுகாலமாக மயக்கி வருகின்றனர். அரசியல் சாசனம் இவ்வார்த்தைகளை அங்கீகரிக்காத போதும், தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களும் இப்பதங்களைப் பயன்படுத்துவதை எதிர்த்து வந்தபோதும், மைய அரசு இந்த வார்த்தைகளையே தனது அலுவலகக் குறிப்புகளில் பயன்படுத்தி வந்தது. உ.பி.யில் சமாஜ்வாடி - பகுஜன் கட்சிகளின் வெற்றியை அடுத்து, தாழ்த்தப்பட்ட இன மக்கள் இவ்வார்த்தைகளின் மோசடித் தனத்தை கூடுதலாக அம்பலப்படுத்தத் தொடங்கினர். இதனால் காங்கிரசு அரசு தாழத்தப்பட்ட இன மக்களை சாந்தப்படுத்தி தன் பக்கம் இழுக்கும் முகமாக அவ்வார்த்தைகளைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய உத்தரவிட்டிருக்கிறது.

★ மக்கள் நீதிமன்றங்களை அமைத்து குற்றவாளிகளை உடனுக்குடன் மக்கள் முன்னிலையிலேயே தண்டித்துவரும் பீகாரின் மாவோயிச கம்யூனிச மையம், தற்பொழுது தனது விவசாயிகள் சங்கத்தின் துணை கொண்டு வரதட்சணைக் கொடுமைக்கு எதிரான நடவடிக்கைகளை மேலும் தீவிரப் படுத்தியிருக்கிறது. கிராமங்கள் தோறும் தெருமுனைப் பிரச்சாரங்கள் செய்வதோடு, தனது உறுப்பினர்களைக் கொண்டு திருமணப் பந்தலிலேயே வரதட்சணை கொடுக்கப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதனால் இப்பொழுது பணம் படைத்த நிலமுதலைகள் தங்கள் வாரிசுகளுக்குத் திருமணம் செய்து வைக்க வெளி இடங்களை நோக்கி ஓடத் தொடங்கிவிட்டார்கள்.

★ குஜராத் மாநிலத்திலுள்ள துவாரகாவில் சுவாமி கேசவானந் எனும் போலிச் சாமியாரை கற்பழிப்பு வழக்கின் கீழ் போலீசார் கைது செய்துள்ளனர். கடந்த 1977-லிருந்தே ஆசிரமத்தினுள் தான் நடத்தி வந்த பாதுகாப்பு இல்லத்திலும் பள்ளியிலும் தங்கி படித்து வந்த 200-க்கும் அதிகமான பெண்களை நிர்பந்தித்து பலாத்காரமாக கற்பழித்துள்ளான் இவன். குஜராத் முதல்வர் சாபில்தாஸ் மேத்தா உட்பட அரசியல் தலைவர்களோடும் அதிகாரிகளோடும் நெருக்கமாக இருந்தவன். இவனது ஆசிரமத்தில், அவர்களுள் பலரும் இரவுப் பொழுதினைத் தங்கி கழித்துள்ளனர். நீலத்திரைப்பட ஒளிநாடாக்களும், பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புடைய பணப் பத்திரங்களும் ஆசிரமத்தில் இருந்து போலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இம்மோசடிப் பேர்வழிக்கு ஆதரவாக எந்தவொரு வழக்கறிஞரும் வாதாட மறுத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

கேசவானந்தா: 'சாமியாரல்ல' காம வெறியன்



★ மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த ஜலகான் நகரில் பள்ளி - கல்லூரிகளில் படித்து வரும் இளம் பெண்களை போதை மருந்து கொடுத்து மயக்கி ஆபாச வக்கிர - நிர்வாண புகைப்படங்களை எடுத்து வந்த 25 பேருக்கும் மேலான கும்பலொன்று கைது செய்யப்பட்டுள்ளது. இவர்களுள் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினரும் ஒருவர். இதில் தொடர்புடைய காங்கிரசு கட்சியைச் சேர்ந்த குண்டர்கள் பலர் தற்பொழுது தலைமறைவாகிப் போயுள்ளனர். கடந்த பத்து வருடங்களாக 500-க்கும் அதிகமான பெண்களை நிர்வாணமாகப் புகைப்படங்கள் எடுத்ததோடு நின்றுவிடாமல், அப்பெண்களை அச்சுறுத்தி பணம் பறித்தும், நகரப் பிரமுகர்களோடு விபச்சாரத்தில் ஈடுபடச் செய்தும் களிவெறியாட்டம் போட்டுள்ளது இக்கும்பல். குற்றவாளிகளை உடனே கைது செய்யக்கோரி அந்நகர மக்கள் அமைப்புரீதியாக போராடத் தொடங்கியுள்ளனர். இதன் முதல் கட்டமாக கடந்த ஜூன் 28 அன்று முழு கதவடைப்பை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளனர்.

★ இரண்டாண்டுகளுக்கு முன்பு ராவ் அரசாங்கம் அமெரிக்காவைச் சேர்ந்த அக்ராசீடஸ் எனும் பன்னாட்டு நிறுவனத்திற்கு, இந்தியாவில் விளையும் பருத்தி விதைகளின் மரபியல் கூறுகளை உரிமைப் பதிவு செய்து கொள்ள அனுமதித்தது. இந்தியாவின் இச்செயல் 'உலகெங்கிலுமுள்ள 19 கோடி விவசாயிகளைப் பாதிக்கும்' என பல நாடுகளும் கண்டனம் தெரிவிக்கவே, ராவ் அரசு ஆறு மாதங்களுக்கு முன்பு அவ்வுரிமையினை ரத்து செய்வதாக அறிவித்தது. ஆனால், ''சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தனது தரப்பு வாதத்தை நீதிமன்றத்தில் கூற உரிமையுள்ளதால் இவ்வழக்கு முடிய பல ஆண்டுகளாகும். அதற்குள் பாதிப்பு கைமீறி போகும்'' என்கிறார்கள் அதிகாரிகள்.

★ அமெரிக்கா என்றால் அறிவாளிகள் நாடு என புகழப்படுகிறது. ஆனால், உண்மையோ இதற்கு நேர் மாறானது. சமீபத்தில் எடுத்த கணக்கெடுப்பின்படி ''பூமி சூரியனை வருடத்திற்கு ஒரு முறை சுற்றி வருகிறது'' என்ற சாதாரண விஞ்ஞான உண்மை கூட 25 முதல் 50 சதவீதத்தினருக்குத் தெரியவில்லை. எல்லா நாளிதழ்களிலும் தினந்தோறும் ஜோதிடப் பலனுக்காக தனி பக்கங்கள் ஒதுக்கப்படுகின்றன. இது தவிர ''வேற்றுக்கிரக மனிதர்கள் ஆண்களையும் பெண்களையும் பிடித்துக் போய் பலாத்காரப்படுத்தி சோதனைகள் செய்து வருகின்றனர்'' என்ற விஞ்ஞான கட்டுக்கதைகளைப் பரப்பும் குழுக்களும் ''தனக்கே அதுபோல் நேர்ந்தது'' எனக் கூறி சிகிச்சை செய்து கொள்ளும் அமெரிக்கர்களும் அதிகரித்து வருகின்றனராம்.

★ மேற்கத்திய கலாச்சாரத்திற்கும் எதிராக ''புனிதப் போர்'' நடத்தி வரும் பா.ஜ.க. சமீபத்தில் பரோடாவில் நடத்தி முடித்த தனது கட்சி செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களின் தாகத்தைத் தீர்க்க கோகோ-கோலாவையும், பெப்சி-கோலாவையும் கொடுத்து உபசரித்துள்ளது. வி.இ.ப. அமைப்பின் பொருளாளர் ஆனந்த் சங்கர் பந்த்யா, உலக அழகிப் போட்டியில் வெற்றி பெற்ற சுஷ்மிதா சென் ''தாய்மையின் பெருமையை எடுத்துக் கூறி இந்துமதத்தின் சிறப்பை உலகுக்கு எடுத்துக் காட்டிவிட்டார்'' எனப்பாராட்டி, 1 லட்சம் ரூபாய் சன்மானம் அளிப்பதாகவும் அறிவித்தார். ●

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ

படிப்பகம்

www.padippakam.com




அருகிலுள்ள படத்திலிருக்கும் சிறுவனின் பெயர் ராஜாஜி; சிறுமியின் பெயர் கீதா. பார்த்தவுடனேயே இவர்கள் குழந்தை தொழிலாளர்கள் என்பது புரிந்திருக்கும். ஆனால் அது பாதி உண்மை தான்; அடிமைகள் என்பதுதான் முழு உண்மை. கீதா தந்தை படுத்த படுக்கையானதால் 2000 ரூபாய்க்கு அடிமையானாள் என்றால், ராஜாஜியோ அக்காவின் கல்யாண செலவிற்காக 2500 ரூபாய்க்கு அடகு வைக்கப்பட்டான். வட ஆற்காடு மாவட்டத்தின் பீடி ஏஜெண்டுகளிடம் மட்டும் 1 லட்சத்திற்கும் அதிகமான சிறுவர்களும் சிறுமிகளும் இப்படி அற்ப கடனுக்கு அடிமைகளாய்க் காலந் தள்ளுகிறார்கள். காஞ்சிபுரத்தின் பட்டு நெசவு,. ஆம்பூர், வானியம்பாடி தோல் பதனிடும் தொழில் என்று இந்த பட்டியல் சிவகாசியோடு போட்டி போடுகிறது. அடி உதையோடு, கிடைக்கும் அற்பக் கூலியில் பாதியும் வாங்கிய கடனுக்கு வாய்க்கரிசியாய்ப் போகும். கடனை முழுதாய் அடைத்தால்தான் விடுதலை என்பதால், தனக்குப்பின் தம்பி தங்கை என இந்த அடிமையுடமை வம்சாவழியாய்ப் போனது.

இதோ சென்னையில் அரசு கட்டிவரும் திரைப்பட நகரமிது. படப்பிடிப்பு நடைபெறாத நாட்களில் அந்நகரை அப்படியே குழந்தைகள் பூங்காவாக மாற்றிவிட முடியும். இந்த உருமாற்ற வித்தைக்காக பதினைந்து கோடி ரூபாயைச் செலவழித்திருப்பதோடு, மின்னலெனச் செயல்பட்டு ஒரே வருடத்தில் கட்டி முடித்து திறக்கவும் ஏற்பாடு செய்து விட்டது ஜெயா அரசு. ''வீடியோ'' பொழுது போக்கு, மின்னணு சாதனங்களின் துணையுடன் நடமாடும் உயிரற்ற மிருகங்கள் என நவீனமாக உருவாகியுள்ள இப்பூங்கா, தொட்டில் குழந்தைகள், குழந்தைகள் நலனுக்கு 15 அம்ச திட்டம் என்ற ஜெயாவின் 'புரட்சி'கர திட்டங்களின் வரிசையில் புதிய வரவு.

கல்வி, விளையாட்டு எனக் களித்திருக்க வேண்டிய வயதில் குடும்ப பாரத்தை சுமக்கும் பிஞ்சுகள் ஒருபுறம்; அவர்கள் வாழ்க்கைக்கு வழி சொல்ல அக்கறையற்று, வீண் ஆடம்பரத்திற்கும் விளம்பரத்திற்கும் கோடிகோடியாய் செலவழிக்கும் ஆட்சியாளர்கள் மறுபுறம். ''விடுதலை'' என்ற அவர்களின் நெஞ்சில் புதைந்திருக்கும் உணர்ச்சியை நாம் உரத்த குரலெடுத்து முழங்குவது எப்போது?

# இதுதான் இன்றைய இந்தியா



படிப்பகம்